# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 28 ஞாயிற்றுக்கிழமை (14.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 353


# இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு

# இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு இதுவே!

## கொழும்பு வரும் அமைச்சர் கிருஷ்ணா இதனையே இலங்கையிடம் வலியுறுத்துவார்

கொழும்பு,நவம்பர்14

இந்த மாத இறுதியில் வருகைதரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் எதனையும் கொடுக்கமாட்டார் என்று தெரிகிறது. இந்தப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு நாட்டுக்குள்ளேயே காணப்பட வேண்டும் என்று தமிழ்த் தலைமைகளிடம் இந்தியா ஏற்கனவே வலியுறுத்தி உள்ளது. இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே கிருஷ்ணாவின் பயணம் அமையும் என்று புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

எதிர்வரும் 25ஆம் திகதி கிருஷ்ணா இலங்கை வருகிறார். அந்தப் பயணத்தில் அரச தலைவர்களைச் சந்திக்கும் கிருஷ்ணா, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து நேரடியாக எந்த அழுத்தங் களை யும் வழங்கமாட்டார் எனப் புதுடில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

தனது பயணத்தில் தமிழ்த் தலைமைகளையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ள அமைச்சர் கிருஷ்ணா இந்திய நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைக்க உள்ளார். "அரசியல் தீர்வு ஒன்றுக்கு வெளியாரின் தலையீட்டை எதிர்பார்ப்பதைவிட

(31ஆம் பக்கம் பார்க்க)

## கே.கே.எஸ்.வீதி அகலிக்கும் பணிகள் பஸில் இன்று ஆரம்பித்து வைப்பார்

யாழ்ப்பாணம்,நவ.14

சீன அரசின் உதவியுடன் காங்கேசன்துறை வீதியை அகலமாக்கும் பணியை இன்று முற்பகல் 11 மணிக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கிறார்.

தந்தை செல்வா சதுக்கத்துக்குச் சமீபமாக பண்ணை வீதியும் காங்கேசன் துறை வீதியும் இணையும் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுக்கல்லை பஸில் ராஜபக்ஷ திறந்து வைத்து வீதி அகலிக்கும் பணியை ஆரம்பித்து வைக்க விருக்கிறார்.

இதேவேளை, ஏ-9 பாதையில் புத்தூர் சந்தியில் இருந்து மீசாலை நோக்கிச் செல்லும் வீதியை அகலமாக்கும் பணியையும் பஸில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைப்பார்.

(32ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த பதவியேற்ற பின்னரே அரசு–கூட்டமைப்பு பேச்சு

யாழ்ப்பாணம், நவ.14

எதிர்வரும் 19ஆம் திகதி இரண்டாவது பதவிக்காலத்தை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ பதவியேற்றபின்பே அரசுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுக்கள் இடம்பெறவிருக்கின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வட்டாரங்கள் இந்த தகவலைத் தெரிவித்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழத்தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இருதரப்புக்களும் இணைந்து எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றன.

இருதரப்புக்களும் இணைந்து

(32ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் தொடர்பான ஆர்ப்பாட்டம் நாளை யாழ்.நகரில்

### 'நாம் இலங்கையர்' அமைப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.14

காணாமற் போனோர் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருப்போர் ஆகியோரின் பெயர் விவரங்களை வெளியிடுமாறு கோரி நாளை திங்கட்கிழமை யாழ். பஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் சக அமைப்பான ''நாம் இலங்கையர்'' என்ற அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெறவுள்ளது.

காணாமற் போனோரின் உடன் பிறப்புக்கள் காணாமற் போனவர்களின் படங்களுடன் சமுகமளிக்குமாறு அந்த அமைப் பின்

(32ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் செயலர் நேற்று யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம், நவ.14

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

நேற்றுக் காலை வருகை தந்த அவர் காரைநகர் கசூரினா கடற்கரை, யாழ். நூலகம் ஆகிய இடங்களுக்குச் சென்றார்.

யாழ்.நூலகத்தின் தற்போதைய

(32ஆம் பக்கம் பார்க்க)

### 83 இனக்கலவரம், யாழ். நூலக எரிப்புப் போன்ற

## கடந்த கால கறைபடிந்த சம்பவங்கள் இனியும் ஏற்படாதவகையில் இறுதி அறிக்கையின் சிபாரிசுகள் அமையும் என்கிறார் தலைவர்

குடத்தனை,நவ.14

1981இல் நடைபெற்ற யாழ். நூலக எரிப்பு, 1983இல் நிகழ்ந்த இனக்கலவரம் என்பன இலங்கை வரலாற்றில் அசிங்கமான - கறைபடிந்த - சம்பவங்கள். இவ்வாறான சம்பவங்கள் இனியும் ஏற்படாதிருக்கும் வகையிலும், ஒரு நாட்டில் பல்லினங்கள் என்ற அடிப்படையிலும் எமது ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையில் சிபாரிசுகள் அமையவுள்ளன.

- இவ்வாறு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவரான சீ.ஆர்.டி. சில்வா தெரிவித்தார்.

குடத்தனையில் நேற்று இடம் பெற்ற ஆணைக்குழுவின் அமர்வின்போது, குடத்தனையிலுள்ள அமெரிக்கன் - இலங்கைத் திருச்சபையின் பங்குத் தந்தை புவியரசன் அடிகளின் சாட்சியத்துக்குப்பதிலளிக்கும்போதே ஆணைக் குழுவின் தலைவர் இவ்வாறு கூறினார்.

பங்குத்தந்தை தனது சாட்சியத்தில்

(31ஆம் பக்கம் பார்க்க)




### வடமராட்சியில் நெல்லியடி, குடத்தனையில்

## நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் கண்ணீர் மல்க நேற்றுப் பலர் சாட்சியம்

வடமராட்சி, நவ. 14

வடமராட்சியில் நெல்லியடி, குடத்தனை ஆகிய இடங்களில் நேற்று நடைபெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைகளின்போது 260இற்கும் அதிகமானோர் தமது சாட்சியங்களை எழுத்துமூலம் சமர்ப்பித்தனர். இவர்களில் சிலர் நேரடியாகச் சாட்சியமளிக்கையில் -

கணவனை, சகோதரர்களை, பிள்ளைகளை மீட்டுத்தருமாறு இளம்தாய்மார்களும் பெற்றோர்களும் கண்ணீர் மல்க அழுதழுது சாட்சியமளித்தனர். (31ஆம் பக்கம் பார்க்க)


எந்தவொரு சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சியறைகளிலும் நீங்கள் கொள்வனவு செய்யும் கைணடிக் சப்பாரி (Kinetic Safari) மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7000 பெறுமதியான யுனிக் (Unic) DVD பிளேயர் இலவசம்.



இச் சலுகை நவம்பர் 30 திகதி வரை மட்டுமே......!

இன்றே விரையுங்கள்




அழையுங்கள் :

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். 021 224 0555
ஆலடிச் சந்தி, மானிப்பாய். 021 225 5343
பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 4937
கண்டி வீதி, சாவகச்சேரி. 077 9508957

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொழும்புத்துறையில் தன்னிச்சையாக நேற்று மீள்குடியேற முற்பட்ட மக்கள்

## படை அதிகாரியின் தலையீட்டால் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.14

கொழும்புத்துறை, எழிலூர் மகேந்திரபுரத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்து வாழும் மக்கள் அப்பகுதிகளுக்கு நேற்றுக் காலை தன்னிச்சையாகச் சென்று மீளக் குடியமர முற்பட்டனர். இந்நிலையில் அப்பகுதி இராணுவ அதிகாரியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் அந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதிகளில் உள்ள வெடிபொருள்களை அகற்றி சில தினங்களுக்குள் மக்கள் குடியமர ஏற்பாடு செய்து தருவதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மீளக்குடியமரும் முயற்சி நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக நேற்றுக்காலை அப்பகுதிகளில் கூடிய மக்கள் தமது காணிகளுக்குள் பிரவேசித்து பற்றைகளை வெட்டித்துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர்.

சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த நாம் சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டு வருகிறோம்.

இடம்பெயர்ந்த நிலையில் குடியமர்ந்துள்ள வீடுகளின் உரிமையாளர்கள் தமது வீடுகளை விடுமாறு கோரியுள்ள நிலையில் நாம் அங்கிருந்த வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் எமது சொந்தக் காணிகளை நாடவேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இதனால் எமது சொந்த இடங்களில் மீளக்குடியேறத் தீர்மானித்துள்ளோம் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.(ம-135)

## வரவு - செலவுத் திட்டத்தில்

# அரச பணியாளருக்கு 1300 ரூபா சம்பள உயர்வு கிடைக்குமாம்

கொழும்பு,நவ.14

அரச சேவையிலுள்ள பன்னிரண்டு இலட்சம் பேருக்கு 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் 1300 ரூபா வரையான சம்பள உயர்வு கிடைக்கும் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோன்று இதுவரை நிலவிய அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளும் நிவர்த்தி செய்யப்படவுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்தோடு அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவது தொடர்பாக 1800 கோடி ரூபா வரை தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு 600 கோடி ரூபா வரையில் ஒதுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இவற்றுக்கு மேலதிகமாக வறுமை நிலையிலுள்ள மக்களுக்கு நிவாரண உதவியொன்றாக குறைந்த விலையில் மண்ணெண்ணெய் வழங்கும் முத்திரை முறைமையொன்றை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும தெரிவிக்கப் படுகிறது.

சமுர்த்திப் பயனாளிகள் தொடர்பாகவும் குறைந்த வருமான மட்டத்தில் மின்சாரத்தைப் பாவிப்போர் தொடர்பாகவும் புதிய மின் கட்டண அறவீட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்த ஆலோசிக்கப்படுவதாகவும் மேலும் தெரியவருகிறது. (த-22)

## சாவகச்சேரியில் மரம் நடுகை நிகழ்வு

தென்மராட்சி,நவ.14

சாகவகச்சேரி நகரசபையின் தேசிய மரம் நடுகைத் திட்டத்திலான மரம் நடும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.07 மணிக்கு நகரசபை வாளகத்தில் இடம்பெறும்.

நகரசபைச் செயலாளர் செல்வி வீ.சிவக்கொழுந்து தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராசமூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், சாவகச்சேரி நகர்ப்பிரிவு கிராம அலுவலர் க.சிவசரணநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-207)

# தந்தை செல்வாவின் தூபிக்கு முன்னால் வீதி அகலிப்புக்கான நினைவுக் கல்

## வேதனைமிக்க செயல் என்கிறார் மாநகரசபை உறுப்பினர்

யாழ்ப்பாணம்,நவ.14

தமிழ்மக்களால் மதிக்கப்படும் தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு முன்பாக பிரதான வாசலில் வீதி அகலிப்புக்குரிய அங்குரார்ப்பண நிகழ்வுக்கான ஞாபகார்த்த நினைவுக் கல்லான நினைவுக்கல் தந்தை செல்வாவின் நினைவுத் தூபியின் பிரதான வாசலுக்கு முன்னால் அமைக்கப்படுகிறது.

இச்செயலானது தூபியின் புனிதத் தன்மைக்கு சவால் விடப்படுவதோடு தமிழ் மக்களி



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி அகலிப்புக்கான நினைவுக் கல் தந்தை செல்வா ஞாபகார்த்த நினைவுத் தூபிக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம். (86-23)

னால் போற்றப்படும் அவரை இழிவுபடுத்துவதற்கும் ஒப்பானது.

இச்செயலையிட்டு தமிழ் மக்கள் மிகுந்த வேதனைக்குள்ளாகின்றார்கள்.

இந்நினைவுக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ திறந்துவைக்க இருப்பதானது அரசாங்கத்தின் தமிழ் மக்கள் மீதான இரட்டை வேடத்தை உறுதிப்படுத்துவது தெளிவாகிறது. தந்தை செல்வா மீதும் தமிழ் மக்கள் மீதும் அரசாங்கத்துக்கு அக்கறையிருக்குமானால் இதைப் பொருத்தமான வேறிடத்தில் நிறுவுவது சாலச் சிறந்ததென தமிழ்மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். - என்றுள்ளது. (ஒ-ஐ)

நடுவது தொடர்பாக தமிழ் மக்கள் மிகுந்த வேதனைக்கு உள்ளாகியுள்ளனர்.

யாழ். மாநகர சபையின் உறுப்பினரான அ.பரஞ்சோதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தற்போது யாழ்.மாவட்டத்தில் வீதிகள் புனரமைப்பின் மூலம் அகலமாக்கப்பட்டு வருவதை யாவரும் அறிவர். இந்த வரிசையில் இதற்கான நினைவுக் கற்கள் வீதிகளில் அண்மைக்காலமாக நடப்பட்டு வருகின்றன. அதன் நிமித்தம் காங்கேசன்துறை வீதியை அகலித்துப் புனரமைப்புச் செய்வதற்கான நினைவுக்கல் ...

# யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சுகாதார நடைமுறைகள் இறுக்கம்

கொழும்புத்துறை,நவ.14

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளின் சுகாதார மேம்பாட்டை இறுக்கமாகக் கவனிக்கும் முகமாகவும் டெங்கு நோய் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலுமான விசேட கலந்துரையாடல் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சுகாதாரக் கண்காணிப்புத் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் அமைக்கப்பட்ட விசேட பொலிஸ் செயலணியினருக்கும் யாழ். மாநகர சபை அதிகாரிகள், சுகாதாரப் பகுதியினருக்குமான இந்தக் கலந்துரையாடல் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

குப்பைகளை அகற்றுதல், கழிவு நீரை அப்புறப்படுத்துதல், சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல் போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பாக இதில் ஆராயப்பட்டது.

அடுத்து வரும் இருவார காலத்துக்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டும் அதன்பின்னர் சுகாதார ஒழுங்குகளை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்துவரும் மழைக்காலத்தைக் கருத்திற்கொண்டு டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஆரம்ப நடவடிக்கையாக இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரக்குழுத் தலைவர் மனுவல் மங்கள நேசன் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மாநகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவ, செயலாளர் இ.இரத்தினசிங்கம், பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜீவநாதன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (த-135)

# பெற்றோர்களை இழந்த 5 ஆயிரம் பேர் அநாதைகள் ஓய்வூதியத்துக்கு விண்ணப்பம்

கொழும்பு,நவ.14

பெற்றோர்களை இழந்து அநாதரவான 26 வயதுக்கு மேற்பட்ட 5 ஆயிரம் பேர் அநாதைகளுக்குக்கான ஓய்வூதியம் கோரி விண்ணப்பம் செய்துள்ளதாக ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கே.ஏ.திலகரத்ன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பெற்றோர்களை இழந்து அநாதையான 26 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு மட்டுமே அநாதைகளுக்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. எனினும் தொழில் இன்மை, நோய் வாய்ப்படல் போன்ற காரணங்களால் வாழ வசதியில்லையெனக் கூறி 26வயதுக்கு மேற்பட்ட 5 ஆயிரம் பேர் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

இந்த விண்ணப்பதாரிகளில் சிலர் 60 வயதைத் தாண்டியவர்கள், மாதாந்தம் இத்தகைய நூறு விண்ணப்பங்கள் ஓய்வூதியத் திணைக்களத்துக்குக் கிடைக்கின்றன.

திணைக்களத்தில் நியமிக்கப்பட்ட மருத்துவர் குழுவின் பரிந்துரைக்கமைய அங்கவீனர்களான பிள்ளைகளுக்கு ஆயுள் முழுவதும் அநாதைகள் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் இத்தகைய 20 ஆயிரம் அங்கவீனர்கள் அநாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்று வருகின்றனர்.

புதிய விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகள் பரிசீலிக்கப் பட்டு ஆவன செய்யப்பட்டு என்று ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

# பளைப் பிரதேசத்தில் குடியமர்ந்த பாதிப்புற்ற குடும்பங்களுக்கு உதவி

தென்மராட்சி, நவ. 14

பளைப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கவென மாவட்டத்தில் உள்ள பல்வேறு அமைப்புகள் உதவிப் பொருள்களை வழங்கிவருகின்றன.

யாழ். வை.எம்.சீ.ஏ நிறுவனத்தினர் குடும்ப உழைப்பாளியை இழந்த குடும்பங்களுக்கு வழங்கவென இரண்டு தையல் இயந்திரங்களையும், தீவக லயன்ஸ் கழகத்தினர், மிகவும் வறுமை நிலையில் உள்ள இரண்டு குடும்பங்களுக்கு வழங்கவென இரண்டு சைக்கிள்களையும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திக் கழகத்திடம் வழங்கி ... லிங்கம் தெரிவித்தார். (த-207)

# ஆண்டு விழாவும் பாலர் தின நிகழ்வும்

யாழ்ப்பாணம், நவ. 14

வல்வெட்டித்துறை, நெடியகாடு கணபதி படிப்பகத்தின் 43 ஆவது ஆண்டு விழாவும் பாலர் தின நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நெடியகாடு பிள்ளையார் கோயில் வீதியில் நடைபெறவுள்ளன.

சமாதான நீதிவான் பூ.அகமணிதேவர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி பரமேஸ்வரி யோகராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய முன்பள்ளிகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன், பருத்தித்துறை பிரதேச செயலக அரச முகாமைத்துவ உதவியாளர் திருமதி ஏகாந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-204)

# அரிசி விலையை கட்டுப்படுத்த அரசு அவசர நடவடிக்கை

கொழும்பு,நவ.14

அரிசி விலையைக் கட்டுப்படுத்துமுகமாக அவசர நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

நுகர்வோரின் நன்மைகருதி அரிசி விலையைக் கட்டுப்படுத்துமுகமாக நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல், அரிசியாக்கப்பட்டு பொறளைச் சந்தையில் விநியோகிக்கப்படும். இதனால் அரிசியின் விலை சீராக இருக்கும் -

அத்துடன் 2 லட்சம் மெற்றிக்தொன் நெல் அவசர தேவையின் பொருட்டு இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. இந்த நெல் அமைச்சுக்குச் சொந்தமான அரிசி உற்பத்தி நிலையங்களூடாக அரிசியாக்கப்பட்டு விநியோகிக்கப்படும்.

அத்துடன் பண்டிகைக் காலங்களில் அரிசியின் விலை உயராமல் தடுக்கும் பொருட்டு இந்த இருப்பிலுள்ள நெல் பயன் படுத்தப்படுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் பதவியேற்புக்கு 1000 மூக்குக் கண்ணாடிகள்

யாழ்ப்பாணம், நவ.14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலத்துக்கான பதவியேற்பை ஒட்டி வடக்கில் தமிழ், முஸ்லிம், மக்களுக்கு ஆயிரம் மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மீள்குடியமர்வு விவகார அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ, சுதேச வைத்திய பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க, இலங்கை - இந்திய வம்சாவழி மக்கள் முன்னணியின் தலைவர் அன்னமலை முத்தப்பன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இலங்கை - இந்திய வம்சாவளி மக்கள் முன்னணி, கம்பஹா மாவட்ட ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் நந்தசிறி களுபோவில, ஆனைக்கோட்டை எம். சீ.மொகமட் அமீன் ஆகியோர் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடுசெய்துள்ளனர்.(ஒ-ஐ)

# மனநோயினால் பாதிப்புற்ற எனது மகனை ஓமந்தை முகாமில் கண்டதாக அறிகிறேன்

## எப்படியாவது தேடித் தாருங்கள் என்கிறார் தாய்

குடத்தனை,நவ.14

போரின் இறுதிநாள்களில் காணாமற் போன - மனநோயால் பீடிக்கப்பட்ட - என்னுடைய மகனை மீட்டுத் தாருங்கள் என்று தங்கராஜா சித்திராதேவி என்ற தாய் நல்லிணக்க ஆணைக் குழுவினரிடம் வேண்டிக் கொண்டார்.

நேற்று குடத்தனையில் நடைபெற்ற ஆணைக்குழு அமர்வின் போது சாட்சிய மளிக்கையிலேயே இந்த வேண்டுதலை அவர் முன் வைத்தார். இதன் போது அவர் தெரிவித்தவை வருமாறு:

என்னுடைய மகன் நீண்ட நாள்களாக மனநோயால் அவதிப்பட்டு வந்தார். இதன் காரணமாக அவரின் செயற்பாடுகள் சற்று வித்தியாசமாக இருக்கும். ஒருமுறை அவரைப் புலிகள் பலவந்தமாக ஆயுதப் போராட்டத்தில் இணைத்துக் கொண்ட போது அவர் ஒரு மனநோயாளி என்பதை அறிந்த பின்னர் இரு மாதங்களிலேயே விடுவித்துவிட்டனர். இந்நிலையில் இறுதிக்கட்ட போரின் போது அவர் காணாமற் போய் விட்டார். கடைசியாக அவரை ஓமந்தை முகாமில் காயங்களுடன் கண்டதாக எனது உறவினர்கள் சிலர் கூறினர். அவர் மனநிலை சீரில்லாத காரணத்தால் தான் யார் என்பதையோ அல்லது தனது இருப்பிடம் பற்றியோ எதையுமே சரிவரத் தெரிவிக்க முடியாத நிலையில் இருப்பார். எனவே என்னுடைய மகனை எப்படியாவது மீட்டுத் தாருங்கள்- இவ்வாறு அவர் கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்தார்.

(ஒ-எ-15)

# தந்தையின் முகத்தையே பார்த்தறியாத மகனுக்காக ஒரு காலை இழந்த கணவரை மீட்டுத் தாருங்கள்

## குடத்தனையில் நேற்று வத்திராயன் பெண்மணி உருக்கம்

குடத்தனை,நவ.14

என் கண் முன்னே படையினரிடம் சரணடைந்த முன்னாள் போராளியான எனது கணவரது நிலை பற்றி எதுவுமே தெரியாதுள்ளது. அவர் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து மீட்டுத் தாருங்கள். தனது தந்தையின் முகத்தை ஒருமுறை கூட பார்த்தறியாத எனது இளைய மகனுக்கு அவரது முகத்தைக் காட்ட உதவுங்கள்- இவ்வாறு நேற்று குடத்தனையில் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் கண்ணீரும் கம்பலையுமாக மன்றாடிக் கேட்டுக் கொண்டார் வத்திராயனைச் சேர்ந்த பத்மநாதன் கமலேஸ்வரி.

அவர் அங்கு தொடர்ந்து சாட்சியமளிக்கையில்:

எனது கணவனான கோபால் பத்மநாதன் (இயக்கப்பெயர் -விமல் மாஸ்டர்) புலிகள் அமைப்பில் இணைந்து செயற்பட்ட போது எறிகணை வீச்சால் வலது காலை இழந்தார். அதன் பின்னரும் புலிகள் அமைப்பில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார். இதனால் அவரை எல்லோரும் 'மாஸ்டர்' என்றே அழைப்பர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி இரவு முள்ளிவாய்க்காலில் படையினரிடம் எனது கண் முன்னாலேயே எனது கணவர் சரணடைந்தார். அவரை இராணுவத்தினர் பிடித்துக் கொண்டு சென்ற போது அவரை விட்டுவிடும் படி நான் கெஞ்சி மன்றாடினேன். அப்போது நான் எனது இளைய மகனை வயிற்றில் சுமந்து கொண்டிருந்தேன். எனது நிலையைப் பார்த்த இராணுவத்தினர் அவரை விசாரித்துவிட்டு விரைவில் விடுதலை செய்வதாகக் கூறினர். அன்று சென்றவர் தான். இன்னமும் அவரைத் தேடிக் கொண்டிருக்கிறோம்.

இராணுவ முகாம்கள் யாவற்றிலும் அவரைப் பற்றிய எந்தத் தகவலும் தெரியாதென்றே கூறுகிறார்கள். செஞ்சிலுவைக் குழு உள்ளிட்ட பல அமைப்புகளிடமும் கணவரைக் கண்டு பிடித்துத் தருமாறு முறையிட்டேன். ஆனாலும் பயன் ஏதும் இல்லை. எனது இளைய மகன் இதுவரை தனது தந்தையின் முகத்தை பார்த்தறியான். இந்தப் பிஞ்சுகளின் ஏக்கத்தைப் போக்கவாவது படையினரிடம் சரணடைந்த - ஒரு காலை இழந்த - எனது கணவர் எங்கிருக்கிறார் என்பதையறிந்து அவரை மீட்டுத் தாருங்கள்- என்றார். (ஒ-எ-15)

# கருணா குழுவினரால் கடத்தப்பட்டதாக நெல்லியடியில் நேற்று இருவர் சாட்சியம்

கருணா குழுவைச் சேர்ந்த குணசிங்கம் ஜெனதாஸ் என்பவருடன் வந்த 10 பேர் கொண்ட ஆயுதக் குழுவினர் கொழும்பில் வைத்து எனது கணவரை கடத்திச் சென்றனர்.இவ்வாறு கடத்தப்பட்டவரது மனைவியான பாலகுமார் ரோகினி நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் நேற்றுச் சாட்சியமளித்தார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணைகள் நெல்லியடி முருகமூர்த்தி திருமண மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவிக்கையில்:-

2008 ஆம் ஆண்டு 8ஆம் மாதம் 15ஆம் திகதி கொழும்பு புது செட்டித் தெரு வீதியில் வைத்து பகல் 2 மணியளவில் கருணா குழுவைச் சேர்ந்த ஆயுதக் குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டார். பின்னர் இது தொடர்பாக கப்பம் கோரப்பட்டது.

இதன் போது குறுக்கிட்ட ஆணைக்குழு உறுப்பினர் சாட்சியை ''நீங்கள் இரகசியமாக சாட்சியத்தை பதிவு செய்ய விரும்புகிறீகளா?'' எனக் கேட்டார். அதற்கு அவர் சம்மதித்தார். அதன் பின்னர் அவரது சாட்சியம் இரகசியமாகப் பதியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சாட்சியமளித்த சிவஞானம் செல்வதீபன்:-

கருணா குழுவின் இனியபாரதி குழுவினரால் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி மொனராகல வெள்ளவாயப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டேன். பின்னர் 3 மாதகாலம் வெலிகந்தை காட்டுப் பகுதியில் வைத்து என்னைச் சித்திரவதை செய்தார்கள்.

இதன் பின்னர் 2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதி 75 லட்சம் ரூபா கப்பம் கட்டிய பின்னர் விடுவித்தார்கள். எனது சகோதரன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமற் போயுள்ளார்.எனது மாமாவை இராணுவ குற்றப் புலனாய்வு பிரிவினர் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். இருந்தபோதும் எனது குடும்பம் எந்த வகையிலும் எல். ரீ.ரீயுடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. - என்றார். (ஓ-14-15)



# சந்தியடிச் சோமு

## அருளாட்சியும் நல்லாட்சியும்

றோட்டில போறவன் வாறவனெல்லாம் என்ன சோமண்ணை போன கிழமை காணேல்லை எண்டு வம்பிழுக்கிறாங்கள் பாருங்கோ! தீபாவளிக் கொண்டாட்டம் கொஞ்சம் கூடிப் போச்சு. பேனா பிடிக்க நேரம் வரேல்லை. '.... கொட்டில்' பக்கம் போனாத்தானே நெஞ்சுக்கை கிடக்கிறத கொஞ்சம் காரசாரமாக் கொட்டித் தீக்கலாம்...

சரி! அத விடுங்கோ. போன கிழமை ஒரு நல்ல காரியம் நடந்திருக்குது பாருங்கோ! நல்லூர்க் கந்தனுக்கு அருகில நல்லூர் பிரதேச செயலர் அலுவலகம் வந்திருக்கு. எல்லாம் கந்தன் அருள்தான் எண்டு எல்லாரும் பேசிக் கொண்டிருந்தினம். கோயிலுக்குப் போன நானும் கொடிகள், கெடுபிடிகளப் பாத்துப் போட்டு என்னதான் நடக்குது எண்டு விடுப்புப் பாக்கிறத்துக்காக உள்ளுக்க போனனான். எல்லாத்தையும் அமைச்சர் 'திறந்து விட்டார்'. மண்டபம் நிறைஞ்ச சனம். இப்பத்தைய பிரதேச செயலர் ஒரு நல்ல மனுசன்; அவற்றை அழைப்பைத் தட்டேலாது எண்டு வந்திருந்தவை பேசிக்கொண்டினம்.

என்ன சொன்னாலும் ஏற்பாடுகள் எல்லாம் வலும் திறம். அங்க நடந்துகளிலயே அம்மாமாரின்ரை பேச்சுக்களத்தான் எனக்கு நல்லாப் பிடிச்சுக் கொண்டுது. ஒரு அம்மா, ஐயாவைப் புழுகோ புழுகெண்டு புழுகினா. ''அவராலதான் இந்தக் கட்டிடமே வந்தது'' எண்டா. க்ஹூம்.. நான் அந்தக் காலத்தில சரோஜாதேவிக்கே மயங்கினதில்ல, இந்தம்மான்ர கதைக்கே மயங்கப் போறன்!

விசயம் என்னென்டு விசாரிச்சன். நல்லூர் பிரதேச செயலகம் கட்டச் சல்லிக்காசும் ஐயான்ர அமைச்சில இருந்து கிடைகேல்லையாம். ஆனால், அவராலதான் ''எல்லாமெண்டு'' அம்மா சொன்னா. ''குடுத்துவச்ச மாநகரம் பாருங்கோ'' இது. அதால இப்பிடி எல்லாத்தையும் நாங்கள் கேட்டுத்தான் ஆகவேணும். அந்தம்மா அத மட்டும் சொல்லேல்ல, நாங்கள் தோத்துப்போன சமூகமில்லை எண்டத அங்க வந்திருந்த மக்களப் பாக்கேக்க தெரியுதாம் எண்டும் சொன்னா. எனக்கு வலும் ஆச்சரியம். புலிகள்தான் போரில தோற்றவை எண்டும் புலி வேற மக்கள் வேற எண்டும் சொல்லுற கட்சித் தலைவருக்குக் கீழ (அவர் இப்ப தன்னைத் தலைவர் எண்டுறார்; கொஞ்ச நாளில தேசியத் தலைவர் எண்டாலும் நீங்கள் சிரிக்கக்கூடாது. அது வேற விசயம்) இருந்து கொண்டு ''நாங்கள் தோத்துப்போகேல்லை'' எண்டது தெரியுதெண்டு சொல்லுறத்துக்கு உந்த மனிசிக்கு வலு துணிச்சல் இருக்கத்தான் வேணும்.

''புலிகளின் தோல்வி தமிழ் மக்களின் தோல்வி'' எண்ட தோரணையில வந்த அம்மான்ர கருத்து வெறுமனே நாவிலயிருந்து வந்துதா இல்லாட்டில் நெஞ்சில இருந்து வந்துதா எண்டது தெரியேல்ல. அடுத்து மற்ற அம்மா எழும்பி, அபிவிருத்தித் திட்டங்களப் பட்டியலிட்டா (...!) சாதனைப் பட்டியல் தொடரும் எண்டும் கட்டியம் கூறினா (...?). கேட்டுக் கொண்டிருக்க நல்லாத்தான் இருந்துது. நடக்குமோ எண்டத இருந்துதான் பாக்க வேணும். அதுவரைக்கும் நானும் இருப்பனோ தெரியாது... அங்க வெளியிட்ட நூலின்ர முதல் பிரதியை வாங்கிறத்துக்கு வரவேண்டிய ஆள் வராததால அவசரத்துக்கு ஐயாட்டை இருந்து அதையும் வாங்கி உதவிச்சுது மனிசி. நல்ல பிள்ளை...!

அங்க இன்னொரு விசயமும் நடந்தது பாருங்கோ! அதுவும் எனக்கு வலு ஆச்சரியமான விசயமாப் போச்சுது. நல்லூரில முன்னம் பிரதேச செயலரா இருந்த அம்மா பேசுறத்துக்கு எழும்பி வந்தா, எல்லாருக்கும் மாதிரி அவவுக்கும் ஒரு மாலை போடுறத்துக்கு ஒருத்தர் ஓடோடி வந்தார். ஆனால் அந்தம்மா வேண்டாம் எண்டுபோட்டா. மாலையைக் கண்டாலே கழுதை நீட்டுற இந்த உயர் சமூகத்தில இப்பிடியும் ஒரு மனுசியோ எண்டு எனக்கு வேர்த்து விறுவிறுத்துப் போச்சு. எல்லாரும் அதிகாரத் துதியா ஐயாவையே புகழ்ந்து தள்ளிப் போட்டுப் போன இடத்தில கம்பீரமா நிண்டுகொண்டு, புதுப் பிரதேச செலயகக் கட்டடம் அமைக்கிறத்துக்கு காணி கிடைக்க உதவினது சி.வி.கேயர்தான் எண்ட உண்மையை மனிசி போட்டுடைச்சுது. அதுக்காக அந்தாளுக்கு நன்றியும் சொல்லிச்சு மனிசி. என்ன இருந்தாலும் அந்த மேடையில அதச் சொல்ல தனியொரு துணிவு வேணும்தான் பாருங்கோ! உண்மையச் சொல்லுறன் நானென்டால் சொல்லியிருக்க மாட்டன்; அங்கயிருந்த மற்றவயப் போல 'பம்மி' இருப்பன்.

இதுக்கிடையில புத்தக வெளியீட்டுக்கு ஆய்வுரை சொல்ல வந்த ஆசிரியர் கலாசாலை வாத்தியார் ஒருத்தற்ரை கருத்து எனக்குப் பக்கத்தில இருந்த பெண் உரிமைப் போராளியள்(?) சிலபேரை கோபப்பட வச்சிட்டுது. இவ்வளவுக்கும் அந்தாள் சொன்னது, ''வடிவான பொம்பிளையளுக்கு சின்னதொரு நகையணிந்தாலும் வடிவாய் இருக்கும். வடிவில்லாத பொம்பிளையளுக்கு நகைக்கடையப்பூட்டினாலும் வடிவிராது'' எண்டதத்தான். புத்தகத்தில போட்டிருந்த அட்டையப் பாத்துப் போட்டு மனசில வில்லங்கம் இல்லாம அந்தாள் அப்பிடிச் சொல்லிப் போட்டுது. ''அதென்னண்டு அப்பிடிச் சொல்லலாம்'' எண்டு எனக்குப் பக்கத்தில இருந்த அம்மா வீறுகொண்டா. நான் நல்லாத் தள்ளி இருந்திட்டன். பிறகு பேசேக்க, இந்த 'மேலதிக' அம்மா நல்லூரான் அருளாட்சி செய்கிற இடத்தில 'நல்லாட்சி' நடக்க வேணுமெண்டு ஒரு உயர் தத்துவத்தச் சொல்லிப் போட்டு இருந்தா.

நல்லாட்சிக்கு நல்ல எதிர்க்கட்சியும் அவசியமெல்லோ? இங்க எதிர்க் கட்சிகளக் கண்டால் பயப்பிடுற நிலைமைதானே இருக்குது! அந்த விழாவிலயும் இந்த மக்கள் பெரும்பான்மையாத் தெரிவு செய்த மக்கள் பிரதிநிதிகளக் காணக்கிடைக்கேல்ல. இதப் பற்றி பக்கத்தில இருந்தவர மெல்லக் கேட்டன். ''ஏக ஆட்சியில நல்லாட்சியோ...!'' எண்டு ஒரு பார்வை பாத்துது மனுசன். நான் 'கப் சிப்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்வேயை புறக்கணித்தது போன்று ஏன் இலங்கையையும்.....

**போர் குற்றச்சாட்டுக்காகவும் இனவெறி நடவடிக்கைகளுக்காகவும் ஆஸ்திரேலியர்கள் சிம்பாப்வேயைப் புறக்கணித்தனர். ஆனால் இலங்கையை அவர்கள் அப்படிச் செய்யவில்லை.**

இவ்வாறு ஆஸ்திரேலிய ABC News இணையத்தளத்தில் ஆஸ்திரேலிய தமிழ்ப் பேரவையை சேர்ந்த SAM PARI யால் எழுதப்பட்டுள்ளது. அதனை மொழியாக்கம் செய்தவர் தி.வண்ணமதி.



ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் தீவிர ரசிகன் என்ற வகையில், இலங்கை அணியைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு முறையும் 'சிக்ஸ்' அடிக்கும்போதெல்லாம் நாங்கள் சலித்துக் கொள்கிறோம்.

போர்க் குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டது எனக் குற்றம் சுமத்தப்படும் நாடொன்றுடன் நாங்கள் கிரிக்கெட் விளையாடுவதையிட்டு நாங்கள்தான் வெட்கப்படவேண்டும்.

விளையாட்டையும் அரசியலையும் ஒன்றுடன் ஒன்று கலக்கக் கூடாது எனச் சிலர் வாதிடலாம். ஆனால், சிம்பாப்வே கிரிக்கெட் அணி ஆஸ்திரேலிய மண்ணுக்கு மேற் கொள்ளவிருந்த சுற்றுப் பயணத்தை ஆஸ்திரேலியர்களான நாங்கள் புறக்கணித்ததைத் தொடர்ந்து இந்த நிலை மாறிவிட்டது எனலாம்.

இதற்கும் ஒருபடி மேலே சென்ற அப்போதைய ஆஸ்திரேலியப் பிரதமர் அலெக்சான்டர் டௌனர், சர்வதேச கிரிக்கெட் சபையிலிருந்து சிம்பாப்வே அணியைத் தடைசெய்யப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

சிம்பாப்வேக்கு எதிராக நாங்கள் அவ்வாறு புறக்கணிப்புப் போராட்டத்தினை நடாத்த முடியுமெனில், ஏன் இலங்கைக்கு எதிராக அதனைச் செய்யக்கூடாது என நான் கேட்கிறேன்.

உண்மையைக் கூறப்போனால் இலங்கையில் அரசியலும் விளையாட்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர்களான சனத் ஜெயசூரிய மற்றும் அர்ச்சுனா ரணதுங்க ஆகியோர் அரசியலுக்குள் நுழைந்து விட்டார்கள். அஜந்த மெண்டிஸ் இலங்கை இராணுவத்தின் 'ஆட்லறிப்' படைப்பிரிவில் பணியாற்றுகிறார்.

சர்வதேச சமாதானப் பட்டியலில் இந்த ஆண்டு இலங்கைக்கு 133ஆவது இடமே கிடைத்தது. பர்மாவினைவிடக் கடை நிலையிலேயே இலங்கை உள்ளது. அதன் மனித உரிமை நிலைமைகள் ஒன்றும் பெருமைப்படும் வகையில் இல்லை.

25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்த இனப்போரை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டதாக மார்தட்டும் இலங்கை அரசு, போர்க் குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுதந்திரமான அனைத் துலக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என மனித உரிமைக் கண்காணிப்பகம், அனைத்துலக மன்னிப்புச் சபை மற்றும் அனைத்துலக நெருக்கடிகளுக்கான குழு போன்ற மனித உரிமை அமைப்புக்கள் அழைப்பு விடுத்திருக்கின்றன.

போரின் இறுதி நாள்களில் இலங்கை அரச படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சித்திரவை செய்து கொலை செய்யப்பட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுவதற்கான ஆதாரங்களைக் கொண்ட 'வீடியோ' படங்கள் மற்றும் ஒளிப்படங்களும் வெளியாகியுள்ளன. இவற்றை இலங்கை அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

ஏன் இலங்கை இராணுவத்தினர் இத்தகைய குற்றங்களைப் புரிந்தார்கள் என அவர்களது தளபதிகளும் களமுனைச் சிப்பாய்களும் வழங்கிய வாக்குமூலங்கள் கூட ஒலிப்பதிவில் உள்ளன எனக் கூறப்படுகிறது. இலங்கைப் படையினரால் பொது மக்கள் செறிவாக இருந்த பிரதேசங்கள் மற்றும் மருத்துவமனைகள் என்பன வேண்டுமென்றே இலக்கு வைக்கப்பட்டதைக் காட்டும் போதிய ஆதாரங்களும் உள்ளன.

சிம்பாப்வேயின் ஜனாதிபதி முகாபேயினைப் போலவே இலங்கையின் ராஜபக்ஷ அரசும் அனைத்துலகின் அக்கறைகளை, கவலைகளை ஏற்பதற்குத் தொடர்ந்தும் மறுத்து வருகிறது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணை மற்றும் பொறுப்புச்சொல்லும் தன்மை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைத்திருந்த வல்லுநர்கள் குழுவின் உறுப்பினர்கள் கொழும்பு வருவதற்கு இலங்கை அரசு விஸா வழங்க மறுத்து விட்டது.

ஐ.நா. செயலாளர் நாயகம், இலங்கை விவகாரம் தொடர்பில் தனக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழு ஒன்றை நியமித்ததை எதிர்த்து இலங்கை அரசில் அங்கம் வகிப்பவர்கள் வீதிக்கு இறங்கி போராட்டங்களில் ஈடுபட்டனர். கொழும்பிலுள்ள ஐ.நா. செயலகத்திற்கு முன்னால் அமைச்சர் விமல் வீரவன்ச போராட்டத்தில் ஈடுபட்டதன் மூலம் ஐ.நா. செயலகத்தின் செயற்பாடுகளை முடக்கினார். அத்தோடு ஐ.நா. பணியாளர்கள் செயலகத்திற்குச் செல்லாதவாறும் செயலகத்திலிருந்து வெளியேறாதவாறும் அமைச்சரது ஆதரவாளர்கள் தடுத்தனர்.

ஐ.நாவிற்கு எதிரான சுவரொட்டிப் பரப்புரையினை மேற்கொண்ட அரச அமைச்சர்கள், பான் கீ மூனின் உருவ பொம்மையினைக் கூட நடுவீதியில் வைத்து எரித்திருக்கிறார்கள்.

சிம்பாப்வேயின் எதிர்க்கட்சித் தலைவர்; மோர்கன் ஸ்வங்கிறாயைப் போல இலங்கையின் எதிர்க்கட்சிகளும் பல மற்றவையாகவே காணப்படுகின்றன.

இலங்கை அரசில் அங்கம் வகிக்கின்ற அதிகாரிகள் சிலர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்றும் அது தொடர்பான ஆதாரங்கள் தன்னிடமிருக்குமிடத்து அவற்றை தொடர்புடைய அனைத்துலக விசாரணையாளர்களிடம் வெளிப்படுத்துவதற்குத் தயங்கமாட்டேன் என்றும் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்டவருமான சரத் பொன்சேகா குறிப்பிட்டிருந்தார்.

அவர் இந்தக் கருத்தினைத் தெரிவித்த சில மணிநேரங்களுக்குள் அவர் கைது செய்யப்பட்டுத் தடுப்பில் வைக்கப்பட்டார். இராணுவ நீதிமன்றின் முன்னால் நிறுத்தப்பட்ட சரத் பொன்சேகாவிற்கு 30 மாத காலக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அவர் தற்போது சிறையில் உள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் போன்றோர் இன்னமும் பாதுகாப்பற்றதொரு சூழலிலேயே இருக்கின்றனர் என அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

தடுப்பில் வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மோசமாக நடத்தப்படுகின்றனர் எனவும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுகின்றன. இலங்கையில் ஊடக சுதந்திரம் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

அவ்வளவு ஏன்? மஹிந்த ராஜபக்ஷவினது அரசினை விமர்சித்து பத்திகளை எழுதியிருந்த, மேற்கிலிருந்து வெளிவரும் ஆங்கில சஞ்சிகையான 'த எக்கொணமிஸ்ட்' பத்திரிகையின் பிரதிகள் சுங்க அதிகாரிகளால் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

சிம்பாவேயின் மகூபேயினைப் போல மஹிந்த ராஜபக்ஷ அதிக அதிகாரங்களைத் தன் பிடியில் வைத்திருக்கிறார். இலங்கையினது நாடாளுமன்றில் கடந்த செப்ரெம்பரில் கொண்டு வரப்பட்ட 18ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்தினால், ஒருவர் இரண்டு முறைதான் இலங்கையின் அதிபராக ஆட்சியில் இருக்கலாம் என்ற நிலைமை மாற்றப்பட்டிருக்கிறது.

அத்துடன் பொலிஸ்மா அதிபர், உயர் நீதிமன்ற நீதியரசர்கள், தேர்தல் ஆணைக் குழு மற்றும் மத்திய வங்கியின் பணியாளர்களை நியமிக்கும் விடயத்திலும் ஜனாதிபதி ராஜபக்ஷவிடமே அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன.

18ஆவது அரசமைப்புச் சீர்திருத்தமானது ஆட்சி அதிகாரத்தின் மீதான ராஜபக்ஷவின் பிடியினை மேலும் அதிகரித்துவிட்டது. அதிபர் ராஜபக்ஷவின் மூன்று சகோதரர்கள் முக்கிய அமைச் சுப் பொறுப்புக்களை வகிக்கிறார்கள். அதிக அதிகாங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் நாட்டினது பாதுகாப்புச் செயலாளராகவும் மஹிந்தவின் சகோதரரே உள்ளார்.

ராஜபக்ஷவின் மகன் நாமல் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் அதேநேரம் அவரது குடும்ப அங்கத்தவர்கள் பலர் அரசின் முக்கிய பதவிகளுக்கும் பொறுப்புக்களுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாட்டினது மொத்த செலவீனத்தில் 75 வீதமான நிதியினைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு ராஜபக்ஷ குடும்பத்தினரிடமே இருக்கிறது.

"ஜனநாயக நிலைமை மோசமாகிப் போயிருக்கும் இலங்கையினைக் கொடுங்கோல் ஆட்சிக்கு இட்டுச் செல்லும் ஒரு முனைப்புத்தான் 18ஆவது அரசமைப்புச் சீர்திருத்தம்'' என மனித உரிமைக் கண்காணிப்பகம் வர்ணித்திருந்தது.

இலங்கையில் உண்மையான ஜனநாயகம் எப்போதோ மரணித்து விட்டது என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான முன்னாள் மூத்த அதிகாரியாக விளங்கிய கோல்டன் வைஸ் கூறியிருக்கிறார்.

இந்தப் புறநிலையில் சிம்பாப்வேயினைப் புறக்கணித்த ஆஸ்ரேலியா ஏன் இலங்கைக் கிரிக்கெட் அணியினைப் புறக்கணிக்கக்கூடாது எனக் கேட்கத் தோன்றுகிறது.

ஆஸ்திரேலியாவிலுள்ள அகதிகளுக்கான தடுப்பு முகாம்கள் நிரம்பி வழிவதற்கான முழுமுதற் காரணம் இலங்கை அரசேயன்றி வேறு எவரும் அல்லர். ஆதலினால் எங்களது தேசத்தினை நோக்கி ஆயிரக்கணக்கான அகதிகள் படகுகள் மூலம் படையெடுப்பதற்கு வழிசெய்த இலங்கையுடன் நாங்கள் கிரிக்கெட் விளையாட வேண்டுமா?

பர்மாவின் யுண்டா அமைப்பினரோ அன்றி ஆப்கானிஸ்தானின் தலிபான்களுடனோ நாங்கள் கிரிக்கெட் விளையாடுவோமா? ஆதலினால் இலங்கை கிரிக்கெட் அணியுடன் விளையாடமாட்டோம் எனக் கூறுவது ஒன்றும் தவறன்று.

சிம்பாப்வே அணியினை நாங்கள் எவ்வாறு புறக்கணித்தோமோ அவ்வாறே இலங்கை அணியையும் நாம் புறக்கணிக்கத் துணியவேண்டும். அப்போதுதான் மனித உரிமைகளைப் பற்றிப் படிக்க வேண்டியதன் அவசியத்தினை இலங்கை அரசு விளங்கிக்கொள்ளும்.

இலங்கை அரசின் மீது அழுத்தத்தினைத் திணிப்பதற்கு இதுதான் தகுந்த வழி.

ஆபிரிக்காவின் இனவெறி ஆட்சியாளர்களுக்கு எதிராக அனைத்துலக அளவில் முன்னெடுக்கப்பட்ட புறக்கணிப்புப் போராட்டங்கள்தான் அவர்களை அடிபணிய வைத்தது என்பது இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

இலங்கையின் தமிழ்ச் சமூகத்துக்குரிய மதிப்பு வழங்கப்படுவதோடு பத்திரிகையாளர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் தங்களது பணியினைத் தங்குதடையின்றி முன்னெடுப்பதற்கு வழிசெய்யப்பட வேண்டும் எனில் இலங்கை அரசின் மீது காத்திரமான அழுத்தம் பிரயோகிக்கப்படவேண்டும்.

சிப்பாப்வேக்கு எதிராக இதுபோன்ற புறக்கணிப்புப் போராட்டத்தினை முன்னெடுக்க முடியும் எனில் ஏன் சிறிலங்கா விற்கு எதிராக அதனைத் திருப்ப முடியாது?

*நன்றி: புதினப்பலகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு உதவுவார் யார்...?

நாட்டின் சகல பகுதிகளிலும் அரிசியின் விலை கிடு கிடு என்று ஏறிவருகிறது. சில ரக அரிசிகளுக்கு அரசாங் கத்தால் விலை நிர்ணயம் செய்யப்பட்டபோதிலும் அவற் றின் விற்பனை விலைகள் திடீர் திடீரென உயர்வதாக - வர்த்தகர்களால் உயர்த்தப்படுவதாக - தெரிவிக்கப்படு கிறது.

நாடளாவிய ரீதியில் அரிசி விலை உயர்வதைக் தடுக் கும் பொருட்டு, நெற்சந்தைப்படுத்தும் சபையிடம் உள்ள நெல்லைக் குற்றிச் சந்தையில் விட நடவடிக்கை எடுக் கப்படுவதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார். அவ்வாறு செய்வ தன் மூலம் சந்தையில் அரிசியின் விலை உயர்வதைத் தடுக்கமுடியும் என்று அமைச்சர் கூறுகிறார். நல்லது.

உலகச் சந்தையில் கோதுமை விலை உயர்ந்துவிட் டது. அதனைக் காரணமாக வைத்து கோதுமைமா இறக்கு மதியைக் கட்டுப்படுத்தவேண்டிய தேவை அரசுக்கு. அதன் விளைவு பாண் மற்றும் கோதுமைப் பண்டங் களின் விலைகள் அதிஉச்சத்தை எட்டிவிட்டன. அத னால், மக்கள் அரிசியை நாடுகிறார்கள். இது இயல்பு!

அரிசி உணவையே மக்கள் முன்னரைவிட அதிகம் நாடுவதால் அரிசிக்குக் கிராக்கியும் விலை உயர்வும் ஏற் பட்டுள்ளன. அதன் விலை உயர்வைக் கட்டுப்படுத்து வதற்காக, மட்டுப்படுத்துவதற்காக கூட்டுறவுத்துறை அமைச்சர் களஞ்சியங்களில் உள்ள நெல்லைக் குற்றி நியாய விலையில் சந்தைக்கு விடுவதற்கு ஏற்பாடு செய் யப்போவதாகத் கூறுகிறார்.

அமைச்சரின் இந்த முயற்சி அவசியமானதே. ஆனால் இத்தனைக்கும் மத்தியில் -

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகத்தில் விளைந்த நெல்லைக் கொள்வனவு செய்வதை விவசாயத் திணைக் களம் நிறுத்திவிட்டது! அங்கு அறுவடையான நெல்லை உத்தரவாத விலைக்கு வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய் யப்பட்டிருந்த போதிலும் இறுதிக் கட்டத்தில் கொள்வ னவு நிறுத்தப்பட்டுவிட்டதாக கிளிநொச்சி விவசாயிகள் முறைப்படுகின்றனர்.

விவசாயத் திணைக்களமும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் சிறுபோக நெல்லைக் கொள்வனவு செய் வதை நிறுத்திவிட்டதால், தனியார் வியாபாரிகள் ஒரு மூடை நெல்லை 1,650 ரூபாவுக்கே கொள்வனவு செய்கி றார்கள். அதனால் 2,030 ரூபாவுக்கு விற்பதற்கு எதிர்பார்த்த விவசாயிகள் நஷ்டமடைந்து விரக்தியடைந்துள்ளனர்.

இடப்பெயர்வினால் சொல்லொணா அவலங்களை யும் கஷ்டங்களையும் அனுபவித்த பின்னர், தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள கிளிநொச்சி மக்களுக்கு, தமது நெல்லை எடுத்து வீடுகளில் களஞ்சியப்படுத்தி வைக்கவும் வசதி இல்லை.

வீடுகள் இன்றி தறப்பாள் கூடாரங்களிலும் தகரக் கொட்டகைகளிலும் வசிக்கும் அவர்கள் கடின உழைப் பின் மூலம் கிடைத்த நெல்லை எங்கே சேமித்துவைப் பது? அதனை விற்றுத் தீர்க்க முடியாத நிலைமையை விவசாயத் திணைக்களம் ஏற்படுத்தியுள்ளது. விவசாயத் திணைக்களம் அரசாங்கத்தின் ஓர் அங்கமே. தமது நெல் லைக் குறைந்த விலைக்கு விற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள கிளிநொச்சி விவசாயிகள், சிறுபோக விளைச்சலில் ஏற் பட்ட நஷ்டத்தினால் அடுத்துவரும் பெரும் போக நெல் உற்பத்தியிலும் ஈடுபடமுடியாத மிகவும் கஷ்ட நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அரிசித் தேவை நாடெங்கிலும் அதிகரித்துள்ள இந்த வேளையிலும் கூட, கிளிநொச்சி - தமிழ் - விவசாயிகள் விளைவித்த நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு விவ சாயத் திணைக்களம் பின்னிற்பது ஏன்?

விவசாயத் திணைக்களம் கொள்வனவு செய்வதற்கு களஞ்சிய வசதிகள் குறைவென்று சட்டடெனக் 'காரணம்' கூறப்படும் என்பது தெரிந்ததே.

அது உண்மையான காரணமாக இருந்தாற் கூட, தெற்கில் விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய் யும் நெல் சந்தைப்படுத்தும் சபை எங்கே போய்விட்டது? கிளிநொச்சி விவசாயிகளுக்குக் கைகொடுத்து, நெல்லைக் கொள்வனவு செய்து தெற்கில் உள்ள தனது களஞ்சியங் களில் சேமிக்கலாமே?

அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெற்கில் உள்ள நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியங் களில் உள்ள நெல்லை ஆலைகளில் குற்றி சந்தைப் படுத்த ஆரவாரமாக வேலையைத் தொடங்கப்போகிறார்.

அதனால் கிளிநொச்சி விவசாயிகளின் நெல்லைக் கொள் வனவு செய்து அந்தக் களஞ்சியங்களில் வைப்பதன் மூலம் அவர்களுக்கு உதவ வாய்ப்பும் வசதியும் உண்டு.

மனம் உண்டெனில் இடமுண்டு. சிங்களப் பிரதேச விவசாயிகளின் நலனிலும், வாழ்வாதார மேம்பாட்டிலும் கரிசனை காட்டும் அரசாங்கத்திற்கும் நெல் சந்தைப்படுத் தும் சபை போன்ற அதன் அங்கங்களுக்கும், அவற்றில் பணி செய்யும் அதிகாரிகளுக்கும் கிளிநொச்சி விவசாயி களின் நலனில் அக்கறை கொள்ள முடியாதிருப்பது ஏன்?

இத்தகைய பாரபட்சமும் பாகுபாடும் இந்த நாட்டில் பல்வேறு துறைகளிலும் நீண்டகாலமாவே உண்டு.

அதனைச் சற்று மறந்தாலும் -

போரின் விளைவுகளாலும் இடப்பெயர்வினாலும் நொந்துபோயுள்ள கிளிநொச்சி விவசாயிகளுக்கு மனித நேய உணர்வுடனாவது உதவ முடியாத அரசு -

கமநெகும, வடக்கின் வசந்தம், வன்னியின் மீள்புனர மைப்பு என்று அலங்காரப் பதங்களை உச்சரித்து, வன்னி மக்களின் புனர்வாழ்வுக்கு உதவுவதாகக் காட்டி சர்வதேச நாடுகளிடம் பீற்றிக்கொண்டு, அவற்றிடம் நன்கொடை களையும் கடன்களையும் வாரிக்கொள்ளும் அரசுக்கு, கிளி நொச்சி விவசாயிகளுக்கு உதவ மனமில்லாதிருப்பது ஏன்?

நொந்துபோயுள்ள தமிழ் விவசாயிகளுக்கு உதவமுடி யாத அரசு, அவர்களுக்கு மீள்வாழ்வு தரும் என்று எதிர் பார்ப்பது எப்படி?

இந்த உதவியைச் செய்ய முடியாத அரசு, தமிழர்களின் உரிமைகளை 'அள்ளி' வழங்கும் என்று வாய்ப்பந்தல் கட் டும் தரப்பினர், இதற்கு என்ன பதில் சொல்வார்களோ....?....!

# யுத்தத்தினால் ஆவணங்களை இழந்தோர் அவற்றை விரைவில் மீளப்பெற முடியும்

## காணி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு,நவ.14

வடக்கு, கிழக்கில் யுத்தத்தின் காரணமாகத் தமது வீடுகள் அல்லது சொத்துக்களின் உறுதிகள், ஆவணங் கள் என்பனவற்றை இழந்தவர் களுக்கு அவை திரும்பவும் வழங் கப்படுமெனக் காணியமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டு காலம் நீடித்த போர் காரணமாக வடக்குக் கிழக்குப் பகுதி களில் ஏராளமானோர் தமது வீடுகள் அல்லது சொத்துக்களின் உறுதிகள், ஆவணங்கள் என்பனவற்றை இழந்து அல்லது வேறு இடங்களில் தவறு தலாக வைத்து விட்டுத் தவிக்கின்ற னர். இவர்களுக்கு அரசாங்கத்தி னால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 'பிம்சவிய' திட்டத்தின் கீழ் காணி உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப் படவிருக்கின்றன.

இந்தத் திட்டம் 2011இற்கும் 2013 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதி யில் நடைமுறைப்படுத்தப்படவிருக் கின்றது. இதன்கீழ் பல காணிப் பிரச் சினைகளுக்குத் தீர்வு காணப்படு மெனவும் அமைச்சர் மேலும் கூறி னார்.

இந்த மக்கள் மீள்குடியேற்றப் படும் போதும் அதிக சிரமங்கள் தோன்றுகின்றன. எனவே உரிய பதிவுகள் மூலம் சரியான உரிமை யாளர்களைக் கண்டுபிடித்து இந்தக் காணி உரிமைச் சான்றிதழ்கள் வழங் கப்படுமெனவும் இதற்காக 'பிம்ச விய' திட்டத்தை முன்னெடுப்ப தற்கு ஏதுவாக வவுனியா, யாழ்ப்பா ணம், முல்லைத்தீவு, மன்னார், கிளி நொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த திணைக்களங்களின் உத்தி யோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட விருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(க)

## இலங்கை வரலாற்றில் முதன் முறையாக தேயிலை வில்லை உற்பத்தி வெற்றி கண்டது

கொழும்பு,நவ.14

இலங்கை வரலாற்றில் முதன் முதலாக தேயிலை வில்லையைத் தயாரிப்பதில் இரத்தினபுரி செமிரின் நெச்சுரல் புரொடக்ட்ஸ் சிலோன் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனம் வெற்றி கண்டுள்ளது.

இவ்வில்லைக்கு டீ பொட் (Tea Pot) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இவ்வில்லையை தயாரிப்பதில் எவ்வித இரசாயனமும் பயன்படுத் தப்படவில்லை. ஒரு கோப்பைத் தேநீரைத் தயாரிக்க கோப்பையில் எடுக்கப்பட்ட சுடுநீரில் ஒரு வில்லை யைப் போடுவது போதுமானது. நீரில் மண்டி விழாதபடியால் தேநீரை வடிக்க வேண்டிய அவசியமும் ஏற் படாது.

இப்புதிய வில்லையை அறிமு கப்படுத்துவதற்கான வைபவம் கொழும்பு-3 இல் உள்ள தேயிலைச் சபை கேட்போர் கூடத்தில் பெருந் தோட்டத் தொழில்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் தலைமை யில் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளதாக அந்த நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-5)

## இலங்கையில் இந்திய அரசின் அபிவிருத்தி அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கத் தயார்

கொழும்பு, நவ.14

இலங்கையின் வடக்குக் கிழக் குப் பிரதேசங்களில் இந்தியா மேற் கொண்டு வரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக அமெ ரிக்க அரசு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெரிவித்துள்ளார்.

உயர் மட்டத்து ராஜதந்திர வட் டாரங்களின் தகவல்கள் தெரிவித் துள்ளமைக்கு அமைய, இந்தியா ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந் தர உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக இந்தியத் தலைவர், ஜனாதிபதி பராக் ஒபாமா வுடன் நீண்ட நேரமாகக் கலந்துரை யாடியுள்ளார்.

அத்துடன் அங்கு பாகிஸ்தானி லும் இலங்கையிலும் தென்படும் சீன அரசியல் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாடல்கள் தொடர்பாக விரி வாக அலசப்பட்டுள்ளது.

மேலும் சீன அரசினால் தென்னா சிய வட்டகையில் மேற்கொள்ளப் பட்டு வரும் பல்வேறு விதங்களிலான நடவடிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்ப் பது தொடர்பாக இந்தியாவுக்கு உதவி ஒத்தாசைகளை வழங்குவதற்கும் ஒபாமா நிர்வாகம் இணக்கம் தெரி வித்துள்ளதாகவும் தகவல்கள் தெரி விகின்றன.

(ம-22)

## சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழா சைவ மாநாடு

யாழ்ப்பாணம், நவ. 14

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழா சைவ மாநாடு எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியா லயத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலை மையில் இடம்பெறவுள்ள இந்நிகழ் வில் யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் போராசிரியர் என்.சண்முக லிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் சைவநாதம் பொன் மலர் வெளியீடும் இடம்பெறவுள் ளது. இதன் அறிமுக உரையை யாழ். பல் கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி மா.வேத நாதன் நிகழ்த்துவார்.

சைவப் பணியாற்றுவோர் கௌர விப்பும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

(ம)

## நாளை

ஐப்பசி 29 15.11.2010

| | | |
|---|---|---|
| | | திங்கட்கிழமை |
| திதி: | : | நவமி |
| | | பி.ப.03.13 வரை |
| நட்சத்திரம் | : | சதயம் |
| | | மு.இ.09.50 வரை |
| சுபநேரம் | : | 12.07-01.37 வரை |
| ராகுகாலம் | : | 07.37-[illegible] வரை |

## எருசலேம் கோவில் அழிவும் இறுதி நாள்களும்

இன்றைய நற்செய்தி வாசகத்தில் எருசலேம் கோவில் அழிவு பற்றி யும் இறுதிக்காலத்தில் நிகழப்போகும் சம்பவங்கள் பற்றியும் இயேசு முன் னறிவிப்பதை நாம் (லூக் 21: 5-19) அறிந்து கொள்கின்றோம்.

இந்த எருசலேம் கோவில் கவின்மிகு கற்களாலும், நேர்ச்சைப் பொருள் களாலும் அழகுபடுத்தப்பட்டிருந்தது. இதனை அவதானித்த சிலர் இந்த ஆலயத்தின் வடிவமைப்பைப் பற்றி பேசிக் கொண்டிருந்ததை அவதா னித்த இயேசு ''இவற்றையெல்லாம் பார்க்கிறீர்கள் அல்லவா? ஒருகாலம் வரும் அப்போது கற்கள் ஒன்றின்மேல் ஒன்று இராதபடி இவையெல் லாம் இடிக்கப்படும்'' என்று கூறுகின்றார். இயேசு இப்படிக் கூறியது தமது காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு மட்டுமல்ல எமக்கும் சேர்த்தே கூறியுள் ளார். காரணம் அன்று வாழ்ந்த மக்கள் மட்டும் கோவில்களின் அழகினை, பெருமைகளை புகழவில்லை. இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாமும்தான் எமது கோவில்களின் அழகையும், பெருமைகளையும் பற்றிப் பேசுவதுடன் திருவிழாக்கள், யூபிலி ஆண்டுகள் போன்றவற்றின் போது கோவிலை அழகுற அலங்கரித்து ஆடம்பரமாகவும் களியாட்டமாகவும் கொண்டாடுகின்றோம். ஆனால் இயேசுவோ ''இந்த ஆலயம் எல்லாம் இடிக்கப்படும் '' என்கிறார். ஏனெனில் கடவுளின் கோவில் எது என்பதை




திருத்தூதர் பவுல் எமக்கு அழகாக எடுத்துரைக்கின் றார். அதாவது ''நீங்கள் கடவுளுடைய கோவிலென் றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கின்றார் என்றும் உங்க ளுக்குத் தெரியாதோ? ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் கட வுள் அவரை அழித்துவிடுவார். ஏனெனில் கடவுளின் கோவில் தூயது. நீங்களே அக்கோவில் (1 கொரி 3: 16- 17) ஆகவே எமது உள்ளமே கட வுளின் கோவில் அதனைத் தான் தூய்மைப்படுத்த வேண்டும்; அழ குபடுத்த வேண்டும்.

ஆனால் நாமோ நமது உள்ளத்தை உலக சிற்றின்ப ஆசைகளால் மாசு படுத்தி அழித்துக் கொண்டு மனித சிந்தனையுடன் கட்டப்பட்ட கோவில்களை அழகுபடுத்தியும், தூய்மைப்படுத்தியும், பெருமை பாராட் டியும் வருகின்றோம். நாம் இதிலிருந்து விடுபட்டு எமது உடல் கடவு ளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவியார் தங்கும் கோவில் என்பதை உணர்ந்து எமது உள்ளத்தால் கடவுளுக்கு பெருமை சேர்த்து எங்கள் வாழ் வைக் காத்துக் கொள்வோமாக இருந்தால் இறுதிநாளில் ஏற்படும் அனைத்து நிகழ்வுகளிலிருந்து மீட்கப்பட்டு இறையரசில் நாமும் ஒருவராக வாழ லாம்.

க.அருள்நேசன்
குருநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் படை அதிகாரி கைது

துப்பாக்கியின் சில பாகங்களை தன் வசம் வைத்திருந்த ஓய்வு பெற்ற இராணுவ லெப்டினன்ட் ஒருவர் தந்திரிமலை, துப்பிட்டியாகம பிரதேசத்தில் மஹாவிலச்சிய பொலிஸாரால்கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார். சம்பந்தப்பட்ட லெப்டினனின் வீடு சோதனையிடப்பட்டபோதே துப்பாக்கியின் பாகங்கள் கைப்பற்றப்பட்டன. (ஒ-5)


## தேவை

எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்துக்கு அனுபவமுள்ள அல்லது அனுபவமற்ற பூச்சி/கிருமி கட்டுப்பாட்டு தொழில்நுட்பவியலாளர்கள் (Pest Control Technician) மற்றும் வாகன சாரதிகள் தேவை.

தொடர்புக்கு துதிராஜ் குக் 0777679017
மோகன் 0773591791
ஒலிவர் 0777681679
இல.102, 3ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
(இ/572376)

## STUDENT VISA AND WORK PERMIT
Free Counselling

இதோ யாழ். மண்ணில் உங்களுக்கோர் வரப்பிரசாதம்
13ஆம் 14ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் உங்களை நேரில் சந்திக்க வருகிறோம்.

எந்தக்கட்டணமும் அறவிடப்படமாட்டாது
WORK PERMIT& STUDENT VISA
WORK PERMIT FOR UK& SINGAPORE
HOTEL FIELD
Engineers, Electricians, Plumbers, Welders, Mechanics, General Workers.

TWO YEARS EXPERIENCE IN THE RELEVANT FIELD.

கல்வியுடன் வேலைவாய்ப்பு
UK/ Cyprus& Zealand
Course Period One Year (6 Month Study 6 Month
Work After1 Year (Permanent Residence)
Students Who Have UK Degree Of Master Level Qualification will have an Opportunity

NOVEMBER, DECEMBER, JANUARY INTAKE

FUTURE EDUCATION CONSULTANTS
Chandraleka Mawatha
Borella, Colombo- 08
Contact - 011- 7631505/6
Mobile - 072 7955911,
072 2222610, 072 2222611

யாழ்ப்பாணத்தில் உதயன் கெஸ்ட் கவுஸ், இல. 392/6, கைலாச பிள்ளையார் கோவில் அருகில், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 4838331

## விற்பனைக்கு

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் கடையோடு சேர்ந்த நிலம் (காணி) பரப்பு ஒன்று (1) குளி பதினொன்று (11) விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு தொலைபேசி எண் - 0770770529

## மணமகள் தேவை

சித்திரை நட்சத்திரம் கன்னி இராசி யாழ். இந்து கௌரவ அரச சேவை SLTS (SPECIAL) தொழில் புரியும் மணமகனுக்கு 39 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. சீதனம் எதிர் பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு: JEEVA
521/3,Galle Road, Wellawatte, Colombo-06

## வீடு விற்பனைக்கு

பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணியில் 3 அறைகள், 2 ஹோல், சமையல் அறை, சாப்பாட்டு அறை, குளியல் அறை என்பவற்றுடன் அமைந்த வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0775016848

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், லோட்டன் வீதியில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் - 0752138616

Automotor Club Lanka (pvt) Ltd.
Manthikai Junction, Puloly South
Te. No. 0778739485

"நீங்களும் பாடலாம்"
இன்னிசை நிகழ்ச்சி
டிக்கற்றுக்கள் விற்பனை செய்வதற்கு, ஆள்கள் தேவை
நிகழ்ச்சி முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.
முதலாவது பரிசு - ஓட்டோ
2 ஆவது பரிசு - மோட்டார் சைக்கிள்
3 ஆவது பரிசு - பெண்களுக்கான மோட்டார் சைக்கிள்
கொமிசன்:
200/= டிக்கற் ஒன்றிற்கு - 30/=
100/= டிக்கற் ஒன்றிற்கு - 15/=



## ௬௦ ஆவது பிறந்த நாள் வாழ்த்து



திரு.பொன்னையா வியாகேசு (உடுப்பிட்டி)
மகத்தான உலகில் மிகப்பல சேவைகள் செய்யும் உங்களுக்கு மணிவிழாக் காண்பதில் (இன்று 14.11.2010 ஞாயிறு) மகிழ்வடைகின்றோம்.

மகன், மருமகன்,
பேரப்பிள்ளைகள்
அமிர்தகி, ஆர்த்திகன்.

## 60ஆவது பிறந்த நாள் வாழ்த்து

திரு.பொன்னையா வியாகேசு (J.P)
நிர்வாக இயக்குநர் (Beacon Study Center, Vathiry & Uduppiddy)



இன்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை மணிவிழா காணும் எங்கள் Beacon கல்வி நிறுவன இயக்குநரை சகல சௌபாக்கியமும் தேக ஆரேக்கியமும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

மாணவர்கள், ஆசிரியர்கள்,
Beacon Study Center,
Vathiry.
(572844)



நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி துணை




# கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்

## புதிய இருமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழாச் சிறப்பிதழ் 14.11.2010

இந்து சமுத்திர நடுவினிலே- எழில்
பொங்கும் இலங்கை எம் நாட்டில்
செந்தமிழ் சிங்களம் பொலிந் திலங்க-நற்
சேவைகள் நன்றாய்த் துளிர்த்தெழவே
சுந்தர பதுளை மொனராகலை-என
சேர்ந்த நல்லுவா மாகாணம்
அந்தமில் புகழொடு என்றென்றும்
அன்பினில் உயர்ந்து வாழியவே

கணவாய் சுாடுகள் நீர்வீழ்ச்சி-என
கவின்பெறு இயற்கை காத்திடவே
குணமுயர் மக்கள் சமுதாயம்-கொண்ட
குன்றா அன்பால் நிதிதரவே
இணங்கிடும் அமைச்சர் ஆளுநர் -கல்விச்
செயலாளர் என்ற யாவருமே
வணங்கிடும் தெய்வ அருள்பெற்று
வாழ என்றும் வாழ்த்துகிறோம்

இடர்கள் எத்தனை வந்தாலும்
எடுத்த காரியம் இறையருளால்
தொடரும் என்ற உறுதியுடன்
இரண்டு மாடிக் கட்டடமமைக்க
அடிக்கல் நட்டு எம்மிடையே
அன்பின் உயர்வைக் காட்டிடவே
துடிக்கும் ஊவா மக்களை நாம்
தூய மனத்துடன் வாழ்த்துகிறோம்

பூவும் நீரும் மணம் வீச
பொங்கும் அருவி பாய்ந்தோடும்
கூவும் குயிலும் மயிலோடு
கூட்டமாய்ச் சேர்ந்தே திரிகின்ற
காவும், கைத்தொழிற் சாலைகளும்
கவின்பெறு பூங்கா என்றனைத்தும்
மேவும் வளங்கள் மேன்மேலும்
பெற்று என்றும் வாழியவே

'வடக்கு மாகாண சமூகத்துக்கு ஊவா மாகாண சமூகத்தின் அன்பளிப்பு'

ஊவா மாகாணத்தினால் யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்துக்கு வழங்கப்பட்ட கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா கௌரவ ஊவா மாகாண முதலமைச்சரினால் இன்று 14.11.2010 ஞாயிற்றுக்கிழமை சுபநேரமான மு.ப.9 மணி தொடக்கம் 10.30 மணிவரை நடைபெறும். பாடசாலைச் சமூகம் அன்புடன் அழைக்கின்றது.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள்.



விளம்பர அனுசரணையாளர்கள்

கைக்கடிகாரங்கள், வானொலிப்பெட்டிகள், மணிக்கூடுகள், ரி.வி, டெக், கணினி, உதிரிப்பாகங்கள், ஓடியோ, வீடியோ, டி.வி.டி, சி.டி., பிளேயர்கள் என்பவற்றை நியாய விலையில் பெற்றிட



## அல்டி எலக்ரோனிக்ஸ்

15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021222 2676,
E-mail: aldielec@sltnet.lk



(இ-572837)



ஜவுளி உலகின் சாம்ராஜ்யம்

## வாணி ரெக்ஸ்

81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212225578


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு இலகுகடன் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.14

பாரம்பரிய கைத்தொழில்கள் சார்ந்து தேசிய கொள்ளையொன்று வகுக்கப்படும் எனவும் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு இலகுகடன் வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்காவின் ஏற்பாட்டில் பாரம்பரிய கைத்தொழிலாளர்கள் மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்களை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூலப்பொருள்களின் தட்டுப்பாடு வெகுவிரைவில் நீக்கப்பட்டு பாரம்பரிய கைத்தொழில்கள் முன்னேற்றப்படும்.

அனுமதிப் பத்திரங்கள் பெறுவது முதலான சிக்கல்கள் அனைத்தும் உரிய தரப்பினருடன் கலந்துரையாடித் தீர்க்கப்படும்.

எமது அமைச்சின் நோக்கத்தின்படி சிறுதொழில் முயற்சியாளர்களது முன்னேற்றம் மத்தியதர தொழில் முயற்சியாளர்கள் வரையிலும் மத்தியதர தொழில் முயற்சியாளர்களது முன்னேற்றம் பாரியதொழில் முயற்சியாளர்கள் வரையிலும் முன்னேற்றப்படும்.- என்றார்.

கண்டி மாவட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்களுக்குப் பெயர்பெற்ற உடுநுவர பகுதி சார்ந்த பித்தளை, வெள்ளி, தங்கம், தோற்கருவிகள் உட்பட பல்வேறு கைத்தொழில்கள் சார்ந்த உற்பத்தியாளர்களும் சிறுதொழில் முயற்சியாளர்களும் இதில் கலந்துகொண்டு தங்களது தொழில்சார் பிரச்சினைகளை முன்வைத்தனர்.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர், அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் உயரதிகாரிகள், மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சர், அமைச்சின் செயலாளர், அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

(ம-201)

# நல்லூர் பொது நூலகத்தில் வசதிகள் ஏற்படுத்தக் கோரிக்கை

கொழும்புத்துறை,நவ.14

யாழ்.மாநகர சபையின் நல்லூர் பொது நூலகத்தில் வாசகர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறைந்தளவு காணப்படுவதால் வாசகர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு வாசகர்கள் மாநகர சபை நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாணவர்கள் மற்றும் வாசகர்கள் தமக்குத் தேவையான ஆவணப்பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான போட்டோ பிரதி இயந்திர வசதி ஏற்படுத்தப்படவில்லை.

இதேவேளை, தேவைப்படும் துறைசார்ந்த நூல்களை இலகுவாகத் தெரிந்து கொள்வதற்கான கணனி வசதிகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

எனவே, யாழ். நகரப் பகுதியில் இரண்டாவது பெரிய நூலகமான இந்நூலகத்தில் கல்வித் தேடலுக்கான அடிப்படை வசதிகளை மாநகர சபை நிர்வாகம் விரைவில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-201-135 )

# குடாநாட்டின் 4 பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்க ஏற்பாடு

## ஜனாதிபதியின் பிறந்ததினத்தையொட்டி நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.14

குடாநாட்டில் குடிதண்ணீர் இன்றிச் சிரமம் அடையும் நான்கு பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் வழங்க தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அனுமதி வழங்கியுள்ளார் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திட்டப்பணிப்பாளர் எந்திரி தி. பாரதிதாசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதியின் பிறந்த தினமான எதிர்வரும் 18 ஆம் திகதி குடா நாட்டில் நான்கு பிரதேசங்களுக்குமான குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து வைக்க அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் தென்மராட்சி, வேம்பிராய் குடிதண்ணீர் திட்டத்தையும் கட்டுடை, நவாலி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தையும் விஸ்தரித்து வழங்குவதுடன் பொக்கணை நீரூற்றுத் திட்டமும் விஸ்தரித்து வழங்கப்படவுள்ளது.

இதேவேளை- வவுனியா செட்டிக்குளம் பகுதிக்குக் குடிதண்ணீர் திட்டம் புதிதாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 5 ஆயிரம் மரங்களை நடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (ம-201-302)

# தொகுப்பு நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,நவ.14

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோரால் தொகுக்கப்பட்ட 'பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்' என்ற கருத்தரங்குக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் அறிமுகவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் கோயில் வீதியிலுள்ள கம்பன் கோட்டத்தில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது..

இந்த நிகழ்வில், நூலின் அறிமுகவுரையை தென்.கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் க.இரகுபரனும் நயப்புரையை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனனும் நிறைவுரையை கலாநிதி மனோன் மணி சண்முகதாசும் ஆற்றவுள்ளனர்.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# பண்பாடு, விழுமியம் சார்ந்தும் சிந்திக்க வேண்டியது ஊடகத்துறை மாணவர்கள் ஒவ்வொருவரதும் கடமை

## யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,நவ.14

ஊடக மாணவர்கள் வெறுமனே அரசியல் சார்ந்து சிந்திக்காமல் எமது பண்பாடு, விழுமியம் சார்ந்தும் சிந்திக்க வேண்டும் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கை மாணவர்களின் ''பல்கலையான்'' இதழ் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:



யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கை மாணவர்களின் இந்த முயற்சி பாராட்டுக்குரியது. இன்றைய சமூகத்தில் ஊடக அறிவு பூச்சியத்திற்கு அண்மித்ததாகவே உள்ளது. இந்த அறிவை வளர்க்கும் படைப்புக்களாக இத்தகைய படைப்புகள் அமைய வேண்டும். சமூகத்திற்கிடையிலான ஊடக அறிவு மேம்படுத்தப்படவேண்டும்.

ஊடக மாணவர்கள் தனியாக அரசியல் சார்ந்து மட்டும் சிந்திக்காமல் பண்பாடு, விழுமியம் சார்ந்தும் சிந்திக்க வேண்டும். பண்பாட்டுக்கு ஏற்ப ஊடகங்கள் செயற்படவேண்டும்.

ஊடக மாணவர்கள் வெளிக்கள ஆய்வுகளில் ஈடுபட வேண்டும். வீதிகள், கோயில்கள் எனப் பரந்து விரிந்துள்ள களங்களில் வெளிக்கள ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும்.

ஊடகத்துறை மாணவர்கள் ஆல்போல் தளைத்து அறுகு போல் வேரூன்றி வளர வேண்டும்- என்றார். (ம-319)

# சமுர்த்தி அதிகாரசபை நடத்திய போட்டி; யாழ். மாவட்டத்துக்கு ஆறு முதலிடங்கள்

யாழ்ப்பாணம், நவ. 14

இலங்கை சமுர்த்தி அதிகார சபை நடத்திய கலாசார மற்றும் இலக்கிய தேசிய மட்டப் போட்டிகளில் யாழ். மாவட்டத்துக்கு ஆறு முதலிடங்கள் கிடைத்துள்ளன.

கடந்த செப்ரெம்பர் மாதம் கொழும்பில் இடம்பெற்ற இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து போட்டிகளில் பங்கு பற்றிய 12 மாணவர்கள் தேசிய மட்டத்தில் வெற்றிபெற்றுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு;

**பாடல்**

ஆரம்ப பிரிவு - செல்விர.அமுதா (முதலாமிடம் - காரைநகர்), மத்திய பிரிவு - ப.கபில்ராஜ் - (இரண்டாமிடம் - சண்டி லிப்பாய்), மேற்பிரிவு உ.உஷானா (முதலாமிடம் - சங்கானை),

**குழு நடனம்**

ஆரம்பப் பிரிவு - பிள்ளை நிலா சிறுவர் கழகம் (மூன்றாமிடம் - சண்டிலிப்பாய்).

**அறிவிப்பாளர்**

ஆரம்பப் பிரிவு - பி.அனுஷா (முதலாமிடம் - சண்டிலிப்பாய்), மேற்பிரிவு - இ.அனிக்ஸ் மாலா (முதலாமிடம் - சண்டி லிப்பாய்).

**நடனம்-மத்திய பிரிவு**

இ.தேவிகா (முதலாமிடம் - சங்கானை), மேற்பிரிவு - இ.அனிக்ஸ்மாலா (மூன்றாமிடம் - சண்டிலிப்பாய்), ஆரம்பபிரிவு - பி. கேதுஷா (மூன்றாமிடம் - சங்கானை), மத்திய பிரிவு - என்.டினோஜா (மூன்றாமிடம் - காரைநகர்), மேற்பிரிவு - எஸ்.லோகவதனி (நான்காமிடம் - காரைநகர்).

குறு நாடகப் போட்டியில் முதலாமிடத்தை சங்கனைப் பிரதேச செயலகம் பெற்றுக் கொண்டது. (ம-250)

# சங்கானையில் திருட்டு அதிகரிப்பு

சங்கானை,நவ.14


சங்கானைப் பகுதியில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சங்கானை சந்தைப் பகுதியில் தீபாவளித் தினத்துக்கு முதல்நாள் சூட்டிபெப் மோட்டார் சைக்கிள் ஒன்றும், தீபாவளிக்கு மறுநாள் சங்கானை மக்கள் வங்கிக்கு அருகாமையில் விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருட்டுப்போயுள்ளன.

இதேவேளை- நகைக்கடை ஒன்றினுள் சென்றவர் அங்கு கைச்சங்கிலி வாங்குவது போல் பாசாங்கு செய்து அதனை கையில் அணிந்து பார்த்து உறவினரிடம் காட்டுவது போல் நடித்துவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளார். இவருடன் வந்தவரை கடை உரிமையாளர்கள் மடக்கிப் பிடித்த பின்னர் சுன்னாகம் பொலிஸாரின் உதவியுடன் குறித்த திருடன் கைது செய்யப்பட்டார். அத்துடன் சங்கானை பஸ் நிலையத்தில் லுமாலா சைக்கிள் ஒன்றும் அதே வாரம் களவாடப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடர்ந்து திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதால் மக்கள் தமது சைக்கிள், மோட்டர் சைக்கிள்களை வீதி யோரங்களில் நிறுத்துவதற்கு அச்சம் அடைகின்றனர். இதனால் பெரும் சிரங்களையும் அவர்கள் எதிர்கொள்வதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. (ம-29)

## மக்கள் சேவை...



உதவி- காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுப் பொலிஸ் நிலையங்களுக்கு உட்பட்ட மக்களுக்கான நடமாடும் சேவை நேற்று தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த நடமாடும் சேவையில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண பொலிஸ்மா அதிபர் காமினி ... யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி அமரக்கோன், ... உட்பட விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பெண் ஒருவருக்கு வடமாகாண பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா சக்கர நாற்காலி வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(86 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## நவம்பர் 14 முதல் நவம்பர் 20 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

எதிலும் பொறுமை, நிதானமாக செயற்பட வேண்டும். தண்டச் செலவுகள் நேரும். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். கோபம், வேகம், மனக்குழப்பம் அதிகரிக்கும். வீண் விவகாரங்களில் தலையிட்டு தலையிடிக்கு ஆள்படலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர் கொள்ளலாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். எடுத்தோம், முடித்தோம் என, எந்த வேலையையும் செய்து முடிப்பீர்கள். பல நாள்களாக இழுத்தடித்த கடன் மிகுதிகள் வரலாம். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். பதவி உயர்வு வாய்ப்புகள் சாதகமாகும். வழக்கு விவகாரங்களில் சுமூகமான நிலைமை காணப்படும். முன்னேற்ற தடைகள் விலகும். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். பெண்கள், தகப்பனார், அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கத் திட்டம் போடுவீர்கள். தேக ஆரோக்கிய விடயத்தில் அக்கறை அவசியம். இழுபறி காரியங்கள் முடிவுக்கு வரும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். சந்தோஷ செய்தி கேட்கலாம்.

### இடபம்

ஊக்கம், உற்சாகம் கூடும். நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பால், அவர்கள் வழியில் கிடைக்கும் உதவியால் மகிழ்ச்சி அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். எதிலும் பொறுமையுடனும் நிதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் செயல்பட வேண்டும். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். தடை, தாமதங்கள் நேரிடும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமான முடிவுக்கு வரும். அரசியல்வாதிகள் சந்திப்பால், அவர்கள் மூலம் நினைத்தது நடப்பதால் சந்தோஷம் அடைவீர்கள். மருத்துவச் செலவுகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். தந்தை வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். விருந்து, உபசரிப்புகளில் கணிசமான பணம் கரையலாம். சகோதரிகள், உறவுப் பெண்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். எந்த விடயத்திலும் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் தவிக்கலாம். நினைத்ததற்கு மாறாக சில விடயங்கள் நடக்கலாம். முதலீடு செய்த தொகையில் கணிசமான வருவாய் வராமல் இழப்புகள் ஏற்படலாம். மருத்துவச் செலவுகளையும் சிலர் சந்திக்கலாம். சில பிரச்சினைகளை நினைத்து பெரியளவில் பயம் கொள்வீர்கள். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும்.

### மிதுனம்

எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும். உறவினர்கள் சிலர் கேட்ட உதவிகளைச் செய்து பெருமை அடைவீர்கள். சில வேலைகளை சிரமம் இல்லாமல் சுலபமாக முடிப்பீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிரியமான உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு நிகழும். அலைச்சல் இருந்தாலும் திட்டமிட்ட வேலைகளை எப்படியாவது முடிப்பீர்கள். பொழுதுபோக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். சகோதரர்கள், பங்காளிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்களுக்காக சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். முகவர் தொழில் புரிவோர், விவசாயம் செய்வோருக்கு வருமானம் அதிகரிக்கும். சொத்துக்களை வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் அனுகூலம் உண்டு. கையில் காசு, பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம், தகப்பனார் தொடர்பான வகையில் தொல்லைகள் சிரமங்கள் நேரும். வெறுப்பு, விரக்தி ஆள் கொள்ளும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். தண்டச் செலவு நேரும்.

### கடகம்

சிறிய விடயங்களுக்குப் பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ சிலருக்கு நல்ல யோசனைகள் சொல்லலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றமான நிலைமை காணப்படும். விலகிச் சென்ற சொந்தங்கள் திரும்பி வந்து சேரலாம். நெடுநாள்களாகச் செல்ல நினைத்த இடங்களுக்கு செல்லும் வாய்ப்பு உருவாகும். பயணங்கள் அதிகரிக்கும். உறவுப் பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பொழுது போக்கு விடயங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். பிள்ளைகளின் செயற்பாட்டால் பெருமை அடைவீர்கள். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் முன்னேற்றம் உண்டு. தடைப்பட்ட கட்டடப் பணிகளை முடக்கி விடுவீர்கள். பொலிஸ் தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. கடன் மிகுதிகளை தீர்க்கும் வாய்ப்பு உருவாகும். மாற்று மதத்தினரால் அனுகூலம் உண்டு. பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். பழகிய சிலர் மூலம் ஆதாயம் பெறலாம். இனிய அனுபவம் உண்டு.

### சிங்கம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வகையில் செலவு, சிரமங்களைச் சந்திக்கலாம். கடும் வேலைப்பளுவாலும் அவதிப்படலாம். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம்.தன, குடும்பச் செலவுகள் கட்டுக் கடங்காமல் செல்லும். நினைத்தவற்றை வாங்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களிலும் திருப்தியற்ற நிலைமை காணப்படும். அரசு காரியங்கள் அனுகூலமாக முடியும். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள், விருந்து உபசரிப்புக்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள்களாக வராத உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் கடிதங்கள் மூலம் வந்து சேரலாம். போட்டிகள், எதிர்ப்புகள் விலகும். நினைத்த காரியங்களை எளிதாக சாதிப்பீர்கள்.

### கன்னி

அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டு செய்து வெற்றி காண்பீர்கள். கடன் மிகுதிகள் வசூலாகும். உங்களுக்குப் பிடித்தமான சில பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம். நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி, சந்தோஷம் அடைவீர்கள். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறலாம். அவர்களிடம் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். கடன் பெற மேற்கொண்ட முயற்சிகள் பலிக்கும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. செலவுகள் அதிகரித்தாலும், அதற்கேற்ப பணவரவுகள் வந்து சேரும். குடும்ப பெரியவர்களுடன் வாக்கு வாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். பெண்களுக்கு பிறந்த வீட்டின் உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். கடன் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். பெரிய மனிதர்கள் உதவி கிடைப்பது தள்ளிப் போகும். திடீர் செலவுகள் நேரும். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். வீண் பயம் உண்டாகும்.

### துலாம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட காரியம் ஒன்றைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலருடன் வாக்கு வாதங்களில் ஈடுபடலாம். பணிபுரிவோர் திடீர் விடுமுறை எடுக்க நேரிடலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவுகளைப் பெறலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். இழுபறி காரியங்கள் முடிவுக்கு வரும். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதிலும், கேளிக்கை கொண்டாட்டங்களில் பணத்தை செலவழிப்பதிலும் நாட்டம் செல்லும். மற்றவர்கள் பாராட்டும் வகையில், எந்தக் காரியத்தையும் செய்வீர்கள். அதே நேரத்தில், சில விடயங்களில் பிடிவாதமாக, கோபமாக நடந்து மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். தந்தை தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். வரவுகேற்ற செலவுகள் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். நிலம், பூமி வாங்க விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும். நினைத்ததை செய்ய முடியாமலும், வாங்க முடியாமல் பணப்பற்றாக்குறையை எதிர் கொள்ளலாம். தொழில் ரீதியான விடயங்களில் அதிக கவனம் அவசியம். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. உறவால் செலவுகள் நேரும்.

### விருச்சிகம்

சந்தோஷமான அனுபவங்களை எதிர் கொள்ளலாம். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். மற்றவர்கள் மத்தியில் உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். பண வரவுகளைப் பெறலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சோர்வு, சோம்பலால் திட்டமிட்ட வேலைகளை ஒத்தி வைப்பீர்கள். நீண்ட நாள்களாகத் தள்ளி வைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றமான நிலைமை காணப்படும். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு, சம்பள உயர்வு வாய்ப்புகள் சாதகமாகலாம். தகப்பனார், அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான வகையிலும், சகோதரிகளின் தேவைகளை நிறைவேற்றுவதாலும், வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவதாலும், செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவும் சில காரியங்களைச் செய்வீர்கள். கோபம், வேகத்தை குறைத்து எதிலும் பொறுமையாக செயற்பட வேண்டும். சகோதரர்கள், உடன் பிறப்புக்களின் செயல்பாடுகளால் எரிச்சல் அடையலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களாலும் ஆதாயத்தை விட அல்லல்களே அதிகம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். உதிரி வருமானம் பெறலாம். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

### தனுசு

நினைத்த காரியங்களுக்கு அதிகமாக செலவாகும். வீண் பிடிவாதங்களால், குசும்புத்தனமான செயல்பாடுகளால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். எதிர்பாராத சில காரியங்கள் நடக்கலாம். மதிப்பு, கௌரவத்தை மேம்படுத்திக் கொள்வீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். பெற்றோர் வழியில் உதவிகள் கிடைக்கும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். மருத்துவச் செலவுகள் குறைந்து, மன நிம்மதி பெறுவீர்கள். பெண்கள், சகோதரிகள், உறவுப் பெண்கள் வழியில் உதவிகள் கிடைக்கும். பயணங்கள் சந்தோஷம், மகிழ்ச்சி தருவதாக அமையும். பொழுது போக்கு விடயங்களாலும் மகிழ்ச்சி அடைவீர்கள். பழைய வாகனங்களை மாற்றி, புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். சகோதரர்கள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் திடீர் செலவுகள் உண்டாகலாம். அவர்களின் அத்தியாவசியத் தேவைக்கு கொடுத்து உதவ நேரிடலாம். வீடு, மனை பராமரிப்பதற்காக கணிசமான தொகையை செலவிடலாம். பிள்ளைகளின் ஏட்டிக்குப் போட்டியான செயல்பாடுகளால் எரிச்சல் அடையலாம்.எதிர்பாராத தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம்.

### மகரம்

உருப்படியான சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பணம் வரலாம். கடன் மிகுதிகள் வசூலாகலாம். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறப்பீர்கள். செலவுகள், அலைக் கழிப்புகள் அதிகரிக்கும். திட்டமிட்டபடி எதையும் செய்ய முடியாமல் தவிக்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். எந்தக் காரியங்களையும் தொய்வின்றி, சுறுசுறுப்பாக செய்து முடிப்பீர்கள். பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு, உதவி கிடைக்கும். அரசு ஒப்பந்தம் பெற முயற்சிப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ் தாபம் நீங்கி பாசம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். மாமன், மைத்து னர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் பெறலாம். தரகு மற்றும் முகவர் தொழில் புரிவோர் புதிய முயற்சிகளில் இறங்கலாம்.வருமானம் அதிகரிக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். விவசாயிகள் விளை பொருள்கள் விற்பனை மூலம் இலாபம் பெறலாம். மாண வர்கள் போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பர். மனைவிக்கு உடல் நலக்குறைவு, பெண் களால் சிரமம், தொல்லை, தம்பதியர் இடையே கருத்து வேறுபாடு போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். ஆறுதலான, மாறுதலான அனுபவங்களை எதிர் கொள்ளலாம்.

### கும்பம்

கலகலப்பான அனுபவங்களை எதிர் கொள்ளலாம். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். வேலைப்பளு அதிகரிக்கும். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால், அவர்கள் வழியில் கிடைக்கும் உதவியால் சந்தோஷம் அடைவீர்கள். விருந்து, விசேஷங்கள், கேளிக்கை, கொண்டாட்டங்கள் உண்டு. தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் திருப்தியற்ற நிலைமை காணப்படும். வாங்கிய கடனுக்கு வட்டி கட்டுவதாலோ அல்லது எதிர்பார்த்த அளவுக்கு வருமானம் இல்லாததாலோ பிரச்சினைகளைச் சந்திக்கலாம். சில பிரச்சினைகளை நினைத்து அடிக்கடி கவலைகளுக்கு ஆள்படலாம். குடும்ப உறுப்பினர்களும் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடக்கலாம். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் முன்னேற்றம் உண்டு. பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு வருமானம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்கள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் பெறலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். செலவு, அலைச்சல் உண்டு, எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

### மீனம்

செலவுகள், அலைச்சல்கள் அதிகரிக்கும். முடிவடையாத சில வேலைகளை நினைத்து வருத்தம் அடைவீர்கள். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மருத்துவச் செலவுகள் நேரும். மனதில் நல்ல சிந்தனைகள், எண்ணங்கள் குடிகொள்ளும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த இடத்திற்கு செல்லலாம். ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த காரியங்களில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம். வரவுகளை மிஞ்சிய செலவுகளைச் சந்திக்கலாம். வீட்டு உபயோகப் பொருள்களைக் கவனமாகக் கையாள வேண்டும். இல்லையெனில், அவற்றால் பிரச்சினைகள் உருவாகலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடிவது சிரமமே. தந்தையுடன் வாக்குவாதங்களை தவிர்க்கவும். பெண்கள், பயணங்கள், வாகனங்கள் வழியில் செலவுகள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் பெறலாம். இளைய உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். சொத்து வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். வீண் செலவுகள் அதிகரிக்கும். தேக ஆரோக்கிய விடயங்களிலும் அதிக அக்கறை காட்ட வேண்டும். பணவரவு உண்டு. சந்தோஷ அனுபவம் உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குமுழமுனைப் பாடசாலையைத் தரமிறக்க பொது அமைப்புக்களும் மக்களும் எதிர்ப்பு

முல்லைத்தீவு,நவ.14

குமுழமுனைப் பாடசாலையைத் தரம் குறைத்து அளம்பில் பாடசாலையைத் தரமுயர்த்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை குமுழமுனையைச் சேர்ந்த பொது அமைப்புக்களும், பொது மக்களும் எதிர்த்துள்ளனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளருக்கு இவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், தமது பாடசாலை போருக்கு முன் 850 பிள்ளைகளுடன் இயங்கி வந்தது எனவும் தற்போது இடம்பெயர்ந்த மக்கள் இந்தப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்ததால் ஒருதொகுதி மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

''ஆனால் தங்களினால் நியமிக்கப்பட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகள் குமு ஆரம்பப் பாடசாலையாக இருந்த அளம்பில் பாடசாலையை இடைநிலைப் பாடசாலையாகத் தரமுயர்த்தத் தீர்மானித்துள்ளதாக அறிகின்றோம். இதனை இக்கிராம மக்களாகிய நாம் பின்வரும் காரணங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளோம்'' - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

* தங்களால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைக்குரிய காணி தனியாருக்கு சொந்தமாது.
* இந்தப் பாடசாலைச் சுற்றாடல் சுனாமி அபாயத்தைக் கொண்டது.
* எமது குமுழமுனைப் பாடசாலை 850 மாணவர்களுடன் இயங்கி வந்த 1சி தரமுடைய பாடசாலையாகும்.
* குமுழமுனைக் கிராமம் நான்கு கிராமசேவகர் பிரிவுகளையும், 850 குடும்பங்களையும் கொண்டது. இக்கிராமப் பாடசாலையைச் சுற்றி நான்கு ஆரம்ப பாடசாலைகள் உள்ளன.
* எமது பிரதேசத்திலே போதிய நிலம் இருப்பதனால் எதிர்காலத்திலே மக்கள் தொகை அதிகரிக்கும் சாத்தியம் உண்டு.
* குமுழமுனைப் பாடசாலைக்கு ஏற்கனவே 15 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான காணிகளைப் பெற்றுக் கொள்ளலாம். ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு உங்களது தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்வதோடு எமது பாடசாலையை இடைநிலைப் பாடசாலையாகத் தரமுயர்த்துமாறு கோருகின்றோம் என்று- தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் ஆளுநர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு அரச அதிபர், துறைமுகப்பற்று உதவி அரசாங்க அதிபர், குமுழமுனை மகாவித்தியாலய அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க)

## சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை

கிளிநொச்சி,நவ.14

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான எழுத்துப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாக கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்காக முன்கூட்டியே தமது அலுவலகத்தில் பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே இன்றைய தினம் பரீட்சைகள் நடைபெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)




## கிளிநொச்சியில் மருத்துவ சிகிச்சை முகாம்

கிளிநொச்சி,நவ.14

தீவகம் லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் மருத்துவ சிகிச்சை முகாமும் நலத்திட்டங்கள் வழங்கலும் இன்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ள மருத்துவ பரிசோதனை முகாமில் நீரிழிவு, இரத்தப் பரிசோதனை, பொது மருத்துவம் ஆகியவை மேற்கொண்டு மருந்துகளும் வழங்கப்படவுள்ளன. கண் பரிசோதனையில் பார்வைக் குறைபாடு காணப்படும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் செல்வி செல்வராசா தீபிகாவின் அனுசரணையுடன் கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்துணவு வழங்கல், மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு பழமரக் கன்றுகள் வழங்கல் ஆகியனவும் பாஸ்ரர் றோகித வர்ணகுலசூரியவின் அனுசரணையுடன் 20 பேருக்கு சக்கர நாற்காலி வழங்கலும், கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழக அனுசரணையுடன் 10 பேருக்கு வெள்ளைப் பிரம்புகள் வழங்கலும் இடம்பெறவுள்ளன.

கழகத் தலைவர் லயன் கே.சாந்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகச் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட இரண்டாவது உதவி ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராசாவும் சிறப்பு விருந்தினராக லயன் கே.கங்கைவேணியனும் கலந்து கொள்வர். (க-207)

## கிளி. கந்தசுவாமி ஆலய ஆதனங்களைத் தரக்கோரி ஜனாதிபதி செயலகம் பாதுகாப்பு அமைச்சுக்குக் கடிதம்

கிளிநொச்சி,நவ.14

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் ஆதனங்களை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து ஆலய பரிபாலன சபையினரிடம் ஒப்படைப்பது தொடர்பான கடிதம் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்குரிய அன்னதான மடம், குருக்கள் மடம், கிணறு என்பன தற்போது இராணுவத்தினரின் பாவனையில் உள்ளன. இவற்றைத் தம்மிடம் ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்தனர். இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே ஜனாதிபதி செயலகத்தால் மேற்படி கடிதம் ஆலய பரிபாலன சபையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சிக்கான இராணுவத்தலைமையகத்தினரும் மேற்படி ஆதனங்களை ஆலயத்தினர் பயன்படுத்துவதில் தமக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லையெனவும் இதற்கான ஏற்பாடுகளை 57 ஆம், 58 ஆம் படைப்பிரிவினர் செய்து தருவார்களெனவும் ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் மக்கள் மீள் குடியேறிய பின்னர் இந்த ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் ஜனவரி மாதம் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் கிளிநொச்சிக்குப் பயணம் செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி விஜயகலா மகேஸ்வரனிடமும் இந்தக் கோயில் ஆதனங்களை மீட்டுத் தருமாறு ஆலய பரிபாலன சபையினர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-405)

## அருளும் இருளும்.....



விடிவு எப்போது?: கற்சிலைமடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முகப்புத் தோற்றமும் ஆலயத்தைச் சூழ்ந்திருக்கும் அகற்றப்படாத மண் அணைகளும்.

## புதிய அதிபர் நியமனம்

கிளிநொச்சி,நவ.14

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பளை கல்விக் கோட்டத்திற்குட்பட்ட கோயில் வயல் தமிழ்க் கலவன் பாடசாலைக்குப் புதிய அதிபராக கோபாலரத்தினம் சண்முககுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

முகாமைத்துவப் பட்டதாரியான இவர் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய வராவார். கடந்த மாதம் 18 ஆம் திகதி இவர் தனது கடமைப் பொறுப்புக்களை ஏற்றுள்ளார்.

இப்பாடசாலையானது மீள்குடியேற்றத்தின் பின்னர் கடந்த செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டது. வகுப்பறை வசதிகள், அடிப்படை வசதிகள் எதுவுமின்றிக் குறைபாடுகளின் மத்தியில் இப்பாடசாலை இயங்கி வருகின்றது. (க-405)

## முல்லை செயலக வளாகத்தில் நீதிமன்றம்

முல்லைத்தீவு,நவ.14

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருவதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (க)

# காவல் தெய்வமாக வீற்றிருந்து அருள்புரியும் கற்சிலைமடு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

கிளிநொச்சி,நவ.14

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' கற்சிலைமடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் அதிக சக்தி வாய்ந்தது. மிகவும் தொன்மை வாய்ந்தது. கற்சிலைமடு மக்களின் விவசாய நிலங்களையெல்லாம் காவல் காக்கும் தெய்வமிது.

ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன் வயல் வெளியிலே கட்டடங்கள் எதுவுமின்றி ஓலைக் குடிலிலே விநாயகர் வீற்றிருந்தார். அப்போது அயலிலுள்ள மக்கள் அனைவரும் பொங்கல் வைத்துப் போற்றி வணங்கி வந்தனர். மிகவும் சக்தி வாய்ந்த சித்தி விநாயகர் வேண்டுவோர்க்கு வேண்டியதையெல்லாம் அள்ளி வழங்கி வந்தார். வயல் விதைப்பு வேலைகள் முடிந்ததும் பொங்கல் வைத்துத் தீர்த்தத்துடன் தேங்காய் ஒன்றினை எடுத்துச் சென்று கோயிலை மூன்று முறை சுற்றி வலம் வந்து தீர்த்தத்தைத் தெளித்தபின் தேங்காயைத் தூக்கிவிட்டு வந்தால் வயலில் எவ்வித அழிவும் ஏற்பட மாட்டாது. அப்படியானதொரு சக்தி வாய்ந்த தெய்வமிது.

பின்னர் விநாயகரை ஒரு மேட்டு நிலத்தில் வைத்துக் கோயில் அமைக்க வேண்டுமென மக்கள் விரும்பினார்கள். அவர்களின் விருப்பம் வீண் போகவில்லை. அவ்வூர் வாசியான ஆறுமுகம் சேனாதிராசா என்பவர் நிறைபக்தியுடையவர். விநாயகர் மீது தீராத நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருந்தார். ஒருநாள் விநாயகர் அவரின் கனவிலே தோன்றி கோயில் கட்டுவதற்கு அனுமதி வழங்கினார். இதனைத் தொடர்ந்து அவ்வூரிலுள்ள சில பெரியார்கள் நல்லதொரு சுப முகூர்த்த நாளில் விநாயகருக்கு ஆலயம் அமைக்கத் தொடங்கினார்கள். இந்த ஆலயம் அமைக்கப்பெற்று 25 வருடங்களுக்கு மேலாகியுள்ளது. தற்போது இந்த ஆலயத்திலே சதுர்த்தித் திருவிழா, கந்தசஷ்டி, திருவெம்பாவை, பிள்ளையார்கதை, சிவராத்திரி பூசை, நவராத்திரி பூசை என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன. நித்திய பூசைகளை வாசன் ஐயாக்குருக்கள் செய்து வருகின்றார்.

இந்த ஆலயத்தைச் சுற்றி வயல்களும், குளங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றிற்கிடையில் குடிமனைகள் அமைந்திருக்கின்றன. இவை காண்போர்க்குக் கண்கொள்ளாத காட்சியாக அமைந்துள்ளன. மேலும் இந்த ஆலயத்திலே கொடியேற்றத்துடன் கூடிய 10 திருவிழாக்கள் ஆவணி மாதத்திலே நடைபெறும். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொள்வர்.

இத்தகைய பெருமை வாய்ந்த

- சிலையூர் தனம் -

இந்த ஆலயத்திலே இராணுவத்தினர் ஆட்டிலறித்தளம் அமைத்துள்ளதோடு பல மண் அணைகளையும் அமைத்துள்ளனர். ஆலயத்தைச் சுற்றி வீதி முழுவதும் மண் அணைகள் உள்ளதால் ஆலயத்தின் செயற்பாடுகளுக்குப் பெரும் இடைஞ்சலாக உள்ளது.

இதனை ஆலய பரிபாலன சபையினரும், பொது மக்களும் உதவி அரசாங்க அதிபருடாக உரிய இராணுவ அதிகாரிக்குத் தெரிவித்தபோதும் இதுவரை மண் அணைகள் அகற்றப்படவில்லை. தற்போது பெய்து வரும் மழை காரணமாக ஆலய வளாகம் குளம் போலக் காட்சி தருகின்றது. அத்துடன் வீதிகளில் நீர் நிறையும் ஆபத்தும் உண்டு.

எனவே உரியவர்கள் இனியும் தாமதம் செய்யாது இடைஞ்சலாகவுள்ள மண் அணைகளை அகற்ற வேண்டுமெனப் பரிபாலன சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டகலாத 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**இராமலிங்கம் கந்தையா**
(ஓவசியர்)

மலர்வு
1928.04.23
உதிர்வு
2010.10.15





பாசமிகு தந்தையாய்
அன்பை ஊட்டி அறிவைப்புகட்டி
அரவணைத்த என் அப்பாவே!
ஒரு கூட்டுக்கிளியாய் ஒன்றாகக் கூடியிரு ந்தோம் நாம்
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்த மாயம் தான் என்னவோ?
எத்தனை ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே எம்மருகில்
மருமகள் என்றென்னாது தன்மகள்போல்
என்னை நேசித்து அறிவுரைகள் பல கூறுவீர்களே மாமாவே
விவரம் அறியாத பேரப்பிள்ளைகள் தினம் தினம்
தேடுகின்றனர்-- எங்கே சென்றீர்கள்
ஆண்டுகள் பல போனாலும் அழியாது எம்மைவிட்டு உங்கள் நினைவுகள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நெழுவினிப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு மேற்கு,
T.P: 021 3207560

ஆறாத்துயரில்,
மகன்- யோகேந்திரா (யோகு)
குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

புத்தம்புதிய SHARP Fax இயந்திரம் (GQ-72) ஒரு வருட உத்தரவாதத்துடன் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0776647486

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையிலுள்ள நல்ல நிலையிலுள்ள LML FREEDOM மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 322 3084 (2 மணிக்குப் பின்னர்)

## பராமரிப்பாளர்கள் தேவை

CARE KLEEN (PVT)க்கு சாவகச்சேரியில் திறக்கப்பட இருக்கும் வங்கிக்கு 2 பராமரிப்பாளர்கள் உடன் தேவை. சாவகச்சேரி பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 148, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 4528818
(ஜ/572883)

## ALL DIGITAL IMAGING SOLUTION

XEROX DIGITAL PRESS
அச்சகத்துறையினருக்கு
ஓர் வரப்பிரசாதம்



1440DPI



2400DPI

100 பிரதிகளிற்கு மேல்
பிரதியாக்கம் செய்வோருக்கு

| | |
|---|---|
| A4 Paper Print | - 25/= |
| A4 Sticker | - 35/= |
| visiting Card | - 3/= |
| 10x15 (2 side ALBUM) | - 80/= |

(அச்சகத்துறையினருக்கு விசேட சலுகை)

ALBUM REXSIN COVER-100/=
பனர் - 25/= முதல்
ஸ்ரிக்கர் -60/= முதல்



மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்,
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## விஞ்ஞான வினாடிவினாப்போட்டி

யாழ்ப்பாணம், நவ.14

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையேயான வினாடிவினாப் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெறும். (204)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.14

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்குத் துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் குழு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

## ஆங்கில டிப்ளோமா தேர்வுப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.14

அரச உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில டிப்ளோமா 2010 இற்கு விண்ணப்பித்தவர்களுக்கு முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தால் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் 11.30 மணிவரை தேர்வுப் பரீட்சை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது. (204- 15)


**YANMAR**
*marine*

## மலிவு விற்பனை

உலகிலேயே 1ம் தரம் வாய்ந்த யன்மார்
என்ஜின் அசல்
உதிரிப்பாகங்கள் மற்றும் கருவிகளுக்கான
ஆண்டிறுதி மலிவு விற்பனை

**2010 நொவெம்பர் 22 - 26 வரை**

மு.ப.9.00 - பி.ப.4.00 வரை
பிரவுண்ஸ் க்ரூப் இன்டஸ்ட்ரீஸ்
இல. 17A, கங்கதர மாவத்தை
கல்கிஸ்ஸையில் நடைபெறும்.
**ஆர்வமுள்ள வாடிக்கையாளர்கள்
பொருட்களை முன்
கூட்டியே வந்து ஒதுக்கிக்கொள்ளுங்கள்.**

மேலதிக தகவல்களுக்கு
அழையுங்கள் : 0777-598316

வ/ப பிரவுண்ஸ் க்ரூப் இன்டஸ்ட்ரீஸ் (தனி)
இல.17A, கங்கதர மாவத்தை கல்கிஸ்ஸை

BG **Browns**






## பொறியியல் பட்டப்படிப்பு கற்கை நெறி @ CINEC

- ஐக்கிய இராஜ்ய (UK) பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கற்றைநெறிக்கு ஆரம்பத்திலேயே நீங்கள் நேரடியாக பதிவு செய்து இணைத்துக்கொள்ளப்படுவீர்கள்
- பட்டப்படிப்பு கற்கை நெறியை இலங்கையிலேயே நிறைவுசெய்துகொள்ளலாம்
- உள்வாரி பட்டப்படிப்பு கற்கை நெறி
- ஐக்கிய இராஜ்ய (UK) அரச பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டப்படிப்பு
- UGC இனால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டப்படிப்பு
- IET இனால் அங்கீகாரிக்கப்பட்டது
- எந்த நிலையிலும் நேரடியாக UK பல்கலைக்கழகத்திற்கு மாற்றம் செய்யகூடிய கற்கை நெறி முறைமை

www.adinnovationsk.com

**இலங்கையில் முழுமையான UK பொறியியல் பட்டப்படிப்பு கற்கை நெறியை வழங்கும் ஒரே வளாகம் CINEC மட்டுமே**

இப்பொழுது பெப்ரவரி உள்வாங்கலுக்கான பதிவுகள் ...

## BEng (Hons)

- Electronics and Communications Engineering
- Mechatronics
- Mechanical Engineering
- Engineering Design Management
- Automotive Systems Engineering

CINEC
Maritime Campus


Colombo International Nautical & Engineering College
Millennium Drive, IT Park, Malabe, Sri Lanka.
Tel: +94 11 4486400 Fax: +94 11 2413505 E-mail: engsc@cinec.edu
Hot Line: 011 4 486 586 / 0770770678

WORLD CLASS EXCELLENCE IN EDUCATION AND TRAINING... WWW.CINEC.EDU


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1967
02
05

மறைவு
2008
12
05



**பரராஜசிங்கம் ஸ்ரீகுமார் (வவி)**
(பனை அபிவிருத்திச் சபை ஊழியர்)

ஆலமரமாய் எமக்கெல்லாம்
நிழல்தந்து காத்த எம் தந்தையே
இரு ஆண்டுகளென்ன
ஈராறு ஜென்மம் எடுத்தாலும்
நாம் என்றும் மறவோம் உம்மை

என்றும் நினைவில்:
மனைவி, மக்கள்.

தற்காலிக முகவரி:
இல.49/1, வில்வந் தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
இல.16/1, நவரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ஜப்பான் ரூ.4கோடி 20லட்சம் நிதி

கொழும்பு, நவ. 14

வடக்கு, கிழக்கில் நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக ஜப்பானிய அரசு 4 கோடி 20 லட்சம் ரூபா நிதி உதவியை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த் நிதி கிளிநொச்சி மாவட்டத்தில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக பயன்படுத்தப்பட உள்ளது எனத் தெரியவருகிறது.

அடிப்படை மனித பாதுகாப்பு அமைப்பின் ஊடாக இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படுவதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஐயாயிரம் பேர் நன்மை அடைவார்கள் என ஜப்பானியத் தூதுவர் குயினோ தக்காஷி தெரிவித்துள்ளார்.

அடிப்படை மனித பாதுகாப்பு அமைப்பு 1989ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தொண்டுகளை மேற்கொண்டு வருகிறது எனவும், அது 208 திட்டங்களுக்காக 280 கோடி ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணி வெடி அகற்றுதல், வாழ்வாதாரத்தை உயர்த்துதல், கிராம மக்களின் பொருளாதார இயலுமையை மேம்படுத்தல் போன்றவற்றுக்காக குறித்த ஜப்பான் நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(சி)

# இலங்கை அகதிப் படகுகள் குறித்து ஆஸ்திரேலியத் தூதரகம் விளக்கம்

கொழும்பு.நவ,14

'இலங்கை அகதிகளுடன் மேலும் 7 படகுகள் ஆஸி. சென்றன' என்ற தலைப்பிலான 10.11.2010 திகதிய செய்தி குறித்து கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகம் பின்வரும் விளக்கத்தை அளித்துள்ளது.

இலங்கை அகதிகளைச் சுமந்து கொண்டு 7 படகுகள் ஆஸ்திரேலியாவை வந்தடையவில்லை. உண்மையில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இத்தகைய படகுகள் எதுவும் ஆஸ்திரேலியாவுக்கு வரவில்லை.

இலங்கையர்களை ஏற்றி வந்த கப்பலொன்று அண்மையில் இடருக்குள்ளாகி இந்தோனேசியாவுக்குப் பக்கத்தில் காப்பாற்றப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். இக் கப்பலில் வந்த பலர் கடற் பிரயாணத்தின் போது இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதில் உயிர் தப்பியவர்கள் தங்களது பணத்தையும் இழந்து இப்போது இந்தோனேசிய குடிவரவுத் திணைக்களத்தின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பரிதாப சம்பவமானது மனித உயிர்களுக்கு எவ்வித முக்கியத்துவத்தையும் கொடாமல் பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் ஆள் கடத்தல்காரர்களை நம்புவதால் விளையும் ஆபத்துக்களை மீண்டுமொரு முறை நினைவூட்டுகிறது.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

# ஜனாதிபதி பிறந்த தினத்தில் சிறாருக்கு கற்றல் உபகரணம்

யாழ்ப்பாணம், நவ.14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 66 ஆவது பிறந்த தினம் இரண்டாவது தடவையாக ஜனாதிபதி பதவியேற்பு ஆகியவற்றை முன்னிட்டு 66 குழந்தைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இவற்றை வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு சங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கலந்து கொள்வார்.

சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பொதுச் செயலாளரும் இணை அமைப்பாளருமான அருள்நேசன் ரவிக்குமார் மானிப்பாய் மக்கள் சார்பாக இவற்றை இலவசமாக வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 279 செல்போன்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 14

துபாயிலிருந்து சட்ட விரோதமாகக் கையடக்கத் தொலைபேசிகளை இலங்கைக்கு கொண்டு வர முயன்ற நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்பது லட்சம் பெறுமதியான 279 கையடக்கத் தொலைபேசிகளை சட்டவிரோதமாகக் கொண்டுவரமுற்பட்டபோது சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் மாத்தறையைச் சேர்ந்தவர் என விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. (சி)

## இவர்களும் பெயர்ந்தனர்...



உதவி:-கொழும்பில் கொட்டித் தீர்த்த மழையினால் பாதிக்கப்பட்ட மாளிகாவத்தை பிரதேச மக்களுக்கு இடர்முகாமைத்துவ அமைச்சு தற்காலிகக் கூடாரங்களை வழங்கியதைப் படத்தில் காணலாம்.

# 18ஆவது திருத்தச் சட்டமூலத்தால் நீதிமன்ற சுயாதீனத்துக்குப் பாதிப்பு

## சரத் என். சில்வா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 14

18 ஆவது திருத்தச் சட்டமூலம் நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத் தன்மைக்கு மாபெரும் அச்சுறுத்தலாகும் - என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

18ஆம் திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் ஜனாதிபதியின் கைகளில் சகல அதிகாரங்களும் மையப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றக்கட்டமைப்பு மட்டுமன்றி ஏனைய சகல சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் புதிய திருத்தச் சட்டமூலத்தால் பாதிப்பு ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசின் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் வரவேற்கப்பட வேண்டியது. புதிய தேர்தல் திருத்தங்களின் மூலம் தொகுதி வாரியாக சிறு சிறு அலகுகளை வேட்பாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்த முடியும். சிறுபான்மைக் கட்சிகளும் தொகுதிவாரி முறைமையின் மூலம் நன்மை அடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவால் சர்வதேச நீதிமன்றங்களில் முறைப்பாடு செய்ய முடியாது என்றும், இலங்கையின் உச்ச நீதிமன்றின் தீர்ப்பை வேறு எந்தவொரு நீதிமன்றக் கட்டமைப்பும் எதிர்க்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசமைப்பின் அடிப்படையில் இந்த நிலைமை காணப்படுகிறது என்றும், சரத் பொன் சேகாவிற்கு நியாயம் கிட்டவில்லை என்றும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். (சி)

# காதலியின் நிர்வாணப் படங்களை "பேஸ்புக்"கில் வெளியிட்ட காதலனுக்கு விளக்கமறியல் உத்தரவு

## குளியாப்பிட்டிய நீதிமன்றம் பிறப்பிப்பு

கொழும்பு,நவ.14

காதலியின் நிர்வாணப் படங்களை 'பேஸ்புக்' இணையத்தளத்தில் வெளியிட்ட காதலனை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குளியாப்பிட்டிய நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சந்தேக நபருக்கு எதிராக கொழும்பு சிறுவர் மற்றும் மகளிர் அதிகாரசபை முறைப்பாடு செய்திருந்தது எனவும், இதையடுத்தே அவர் குளியாப்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார் என்றும் தெரியவருகிறது.

இதேவேளை, காதலி மீது ஏற்பட்ட கோபம் காரணமாகவே தாம் இத்தகைய செயலில் ஈடுபட்டார் என காதலன், நீதிமன்றில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

மேற்படி சந்தேக நபர் கிரியுல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், அவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டிய பொலிஸாரும் கொழும்பு சிறுவர் மற்றும் மகளிர் அதிகார சபையினரும் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

# நடைபாதை வியாபாரிகளுக்கு கொழும்பில் மாற்றிடம் அமைக்கும் வேலைத்திட்டம்

## விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு,நவ.14

தலைநகர் மற்றும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நடைபாதை வியாபாரிகளுக்கு சிறந்த இடங்களை அமைத்துக் கொடுக்கும் வேலைத் திட்டத்தை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்மந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

சுயதொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் ,ஜனாதிபதிக்குமிடையில் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் பிற்பகல் சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் ஊடாக சுயதொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது குறித்து ஆராயப்பட்டது.

சில நகரங்களில் நடைபாதை வியாபாரிகளுக்கு சிறந்த இடங்கள் இதுவரை அமைத்துக் கொடுக்காமை, அந்த நடவடிக்கைகளை ஆராய்வது தொடர்பிலும், நடைபாதை வியாபாரிகளது இடங்களை அகற்றும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் முரண்பாடுகள் குறித்தும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு இதன்போது ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் நடைபாதை வியாபாரிகளுக்கான முறையான வர்த்தக மையங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டதன் பின்னர், அவ்வியாபாரிகளின் விற்பனை வருமானம் அதிகரித்துள்ளது என சுயதொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று நாட்டிலுள்ள ஏனைய பிரதேசங்களிலும் இத்திட்டம் முன்னெடுக்கப்படுமாயின் நடைபாதை வியாபாரிகள் அதிக நன்மை அடைவார்கள் என்றும், சுயதொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கூறினர்.

இந்தச் சந்திப்பில் நிதியமைச்சின் செயலாளர் பீ.பீ.ஜயசுந்தர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (சி)

# அரசைச் சார்ந்தோர் சொகுசு வாழ்க்கை பெரும்பாலான மக்கள் வறுமையில்

## சஜித் எம்.பி.தெரிவிப்பு

கொழும்பு,நவ.14

அரசைச் சார்ந்தவர்கள் சொகுசு வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர் என்றும், நாட்டில் பெரும்பான்மையான மக்கள் வறுமையில் வாடுகின்றனர் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

நாட்டின் அநேகமான மக்கள் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சுதந்திரமாக அரசியல் கூட்டமொன்றை நடத்துவது மட்டும் மனித உரிமையாக கருதப்பட முடியாது. பட்டினியின்றி வாழ்வதற்கான பின்னணியை ஏற்படுத்துதலும் முக்கிய மனித உரிமையாகும்.

பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அரசு பிரசாரம் செய்து வருகின்ற போதிலும் மக்கள் அன்றாட வாழ்க்கையை முன்னெடுப்பதில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் வெளிநாடுகள் வழங்கிய உதவிகள் இன்றும் மக்களுக்குச் சென்று சேரவில்லை. ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு 15 ஆயிரம் ரூபா மட்டுமே நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் அரச ஆதரவாளர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

-இப்படி அவர் தெரிவித்தார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் நடுகை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 14

நாடளாவிய ரீதியில் மரநடுகையை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை யாழ். சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை யில் அதிபர் திருமதி லோ.மகேஸ்வரன் தலைமையில் மர நடுகை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு முற்பகல் 11 மணிக்கு முன்னர் நடைபெற வேண்டும் எனவும் அத்துடன் புதிய பாடலும் இசைக்கப்பட வேண்டும் என்றும் வலயக்கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ம-313-311)

* * *

தென்மராட்சி, நவ. 14

நாட்டினைப் பசுமையாக்குவோம் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள மரக்கன்றுகள் நடுகைக்கான மரக்கன்றுகள் விவசாயத் திணைக்களத்தினால் வலயக் கல்வி அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் மரக்கன்றுகளைப் பெற்று நாளை மு.ப.10.07 மணிக்கு இவற்றை நடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)

* * *

குருநகர், நவ. 14

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு நாடுமுழுவதும் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள மரநடுகைத் திட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை வளாகத்திலும் மரநடுகை நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அருண புண்ணியமூர்த்தி தலைமையில் காலை 9.30 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையால் 50 மரக்கன்றுகள் இந்த வைத்தியசாலைக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-51)


## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம், St. Patricks வீதி, Bankshall வீதி சந்தியில் St. Patricks College க்கு முன்பாக நான்கு கடைகள், நான்கு அறைகள் கொண்ட மேல்மாடி கட்டடம் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0512233078 0776271996


## தேடுகின்றோம்



**சின்னத்தம்பி மயில்வாகனம்**

(வயது-81) என்பவரைக் கடந்த 05.07.2010 முதல் காணவில்லை. மனநோயாளியான இவரைக் கண்டவர்கள் அல்லது இவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்.

தற்காலிக முகவரி:
காலையடி, பண்டத்தரிப்பு.
நிரந்தரமுகவரி:
பெரிய தம்பனை, வவுனியா. (105921)

கு.குமாரதாசன் (மருமகன்).
தொ.பே.: 0214903955.

# தகனம் செய்த சடலங்களின் எச்சங்கள் குடிமனைகளுக்குள்

தென்மராட்சி, நவ. 14

மயானத்தில் தகனஞ்செய்யப்பட்ட சடலத்தின் எச்சங்கள் நாய்கள் காவிக் கொண்டு குடியிருப்புப் பகுதிகளுக்குள் வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கெற்பேலி ஈச்சங்காடு மயானத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்ட சடலத்தின் எச்சங்களை நாய்கள் குடியிருப்புப் பகுதிக்குள் கொண்டு வந்ததால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அவ்வூர் மக்கள் உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளனர். (201-207)




## வாக்காளர் பதிவு 2010

### வாக்களிப்பதற்குப் பதிவு செய்து விட்டீர்களா?

- ✓ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் 2010 நவம்பர் 30ம் திகதி வரை தொடரும்.
- ✓ மேலதிகத் தகவல்கள் மற்றும் படிவங்களைப்பெற்றுக் கொள்ள இன்றே உங்கள் கிராம சேவை அலுவலர் அல்லது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை அணுகுங்கள்.

இத் தகவலை உங்களுக்கு வழங்குவோர்:

CPA

minority rights group international

# உதுல் பிரேமரட்னவுக்கு 26 வரை விளக்கமறியல்

கொழும்பு, நவ. 14

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் பிரேமரட்னவை மேலும் 14 நாள்கள் விளக்கமறியலில் (வரும் 26 வரை) வைக்குமாறு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முற்பகல்10 மணியளவில் உதுல் பிரேமரத்தினவின் வழக்கு விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த விளக்கமறி யல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி மாணவர் ஒன்றியத்தினால் கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது அமைச்சின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டுக்கு அமைய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரிந்ததே. (சி)

# மாற்றுத் திறனாளர்களுக்கு பட்டறை

யாழ்ப்பாணம், நவ.14

மாற்றுத் திறனாளர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை ஒன்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை சிவன் ஆலய பர்வதவர்த்தினி கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதம் உளவள நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.


## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்-வ.து கடைகள்/கட்டடங்கள் வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்துடன் கூடிய கீழ்க்காண் கடைகள்/கட்டடங்கள் வாடகைக்கு விடப்படவுள்ளன. சங்க வர்த்தக நடவடிக்கைகள் தவிர்ந்த வர்த்தக நடவடிக்கைகளுக்காக அல்லது சேவை முயற்சிகளுக்காக இக் கடைகள்/கட்டடங்களை வாடகைக்குப் பெற விரும்புகின்ற நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. நிலத்துடன் கூடிய கீழ்த்தளத்தில் உள்ள கடைகள் - (15'X45')
02. முதலாம் தளத்திலுள்ள கட்டடத்தின் அரைவாசிப் பகுதி - 75'X45' (06 அறைகளுடன்) (காரியாலய பாவனைக்கு உகந்தது).

மேற்படி கட்டடத்தைப் பயன்படுத்த விரும்புகின்ற நிறுவனங்கள் அலுவலக நேரத்தில் இவற்றினைப் பார்வையிட்டு, தங்களால் செலுத்தக்கூடிய மாதாந்த வாடகையின் உச்ச அளவு, வருடமொன்றுக்கான முற்பணம் ஆகியவற்றினைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் 19.11.2010ஆம் திகதிக்கு முன்னதாக- *தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இல.127, கே. கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கடைகள்/கட்டடங்கள் வாடகைக்குப் பெறுவதற்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்.



## யாழ்.நகரில் நேர்முகத் தேர்வு மிக விரைவில்

## சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

வீட்டு உதவியாளர்கள் (பெண்கள்) வெற்றிடம்

சம்பளம் S$ 325 இலிருந்து 350 (ரு. 30,000)

இலவசம்

- ◎ தங்குமிடம், உணவு, அடிப்படை சுகாதார சேவைகள்
- ◎ 2 வருட சேவையின் பின் விமான டிக்கட்
- ◎ கட்டாய விடுமுறை மாதாந்தம் ஒருநாள்
- ◎ 2 வருட சேவை ஒப்பந்தம்
- ◎ சாதரன ஆங்கில அறிவு விரும்பத்தக்கது
- ◎ அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

Travel Asia Overseas (Pvt) Limited.
No. 278/2, 2nd Floor, R. A. De Mel Mawatha, (Duplication Road) Colombo 03, Sri Lanka.

உடனடியாக பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளவும் :
Tel: 011 - 5515551, 011 - 5769620, 011 - 5769622
Hotline : 0777 - 363192, 011 - 5515551

அனுமதி இல.AL/2365/Advt/3/10



## கணினி உதவியாளர்கள்தேவை

Ms Office, மற்றும் Page Makerல் அனுபவமுள்ள பெண்கள் தேவை. (மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள்விரும்பத்தக்கது) தொடர்பு: 0779310845

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள HYUNDA கார் (A/C) விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே:-0777176843

## Pharmacy உதவியாளர்கள் தேவை

மானிப்பாயில் Pharmacy இல் வேலை செய்ய அனுபவம் உள்ளவர்கள் தேவை.
தொடர்பு: Dr.சுரேஸ்குமார் 0771275264.
(105896)

## உடன் தேவை

நல்லூர் சரவணா ரெக்ஸ்

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் கிளை நிறுவனத்துக்கு புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் மற்றும் பழகவிரும்புபவர்கள் உடன் தேவை (ஆண்கள் மட்டும்) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 0778146931



## மிக், மக் வெல்டிங் தொழில்நுட்ப சான்றிதழ் கற்கைநெறி

இக் கற்கைநெறி பாடசாலை படிப்பை முடித்தவர்கள், வெல்டிங் தொழில்துறையில் பயிற்சி பெறுபவர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்பவர்கள் மற்றும் வெல்டிங் தொழில்துறையில் விருப்பமுள்ளவர்கள் அனைவருக்கும் பொருத்தமானதாகும்.

இடம்: UTE தொழில்நுட்ப பயிற்சி நிலையம், வத்தளை.

திறமையான மிக் வெல்டிங் தொழில்நுட்பவியலாளர் ஆவதற்கான முழுமையான பாடக்குறிப்பு மற்றம் பிரயோக தொழில்நுட்ப பயிற்சி இக்கற்கை நெறியில் அடங்கியுள்ளது.

ஆரம்ப வெல்டிங் தொழில்துறை அனுபவம் அவசியமில்லை.

மிகவும் பிந்திய வெல்டிங் தொழில்நுட்ப முறைகளில் மிகுந்த அனுபவமும் பயிற்சியும் பெற்ற பயிற்றுவிப்பாளர்களால் இக்கற்கைநெறி நடாத்தப்படும்.

கற்கைநெறியின் அடக்கம்

- வெல்டிங் தொழில்துறையில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகள்.
- அடிப்படை வெல்டிங் முறைமைகளின் அறிமுகம்.
- வாயு மற்றம் உலோக வெல்டிங் முறைமைகள் சம்பந்தமான பாடக்குறிப்பு.
- அனைத்து பயிற்சியாளருக்கும் தனித்தனியான பிரயோகப் பயிற்சிகள்.
- திறமைகான் பரீட்சை.

அனைத்துப் பயிற்சியாளருக்கும் தொழில்துறையில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். கற்கைநெறிக்கான கட்டணம்: ரூபா 9000.00 (இக்கட்டணம் மதிய போசனம், கற்கைநெறிக்கான உபகரணங்கள் மற்றும் சான்றிதழ் போன்றவற்றை அடக்கும்)

மேலதிக தகவல்களுக்கு: 0772 753 146

யுனைட்டட் ட்ரக்டர் இக்விப்மன்ட் (தனியார்) நிறுவனம்.
683, நீர்கொழும்பு வீதி, மாபோளை, வத்தளை, இலங்கை.
தொலைபேசி: +94112932109 / தொலைநகல்: +94112931550
வெப்தளம் : www.utequip.com

United Tractors CAT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதையின் கற்புத் திறன்



இலக்கியக் காட்சி 65

நமது சமூக அமைப்பிலே வாழ்க்கைத் துணை என்ற நிலையில் பெண்களே இருந்து வருகின்றார்கள். கணவனும் மனைவியுமான இல்லற வாழ்க்கையில் மனைவிதான் இல்லறத் தலைவியாகக் கருதப்பெறுகிறாள்.

அதனால் மனைக்குத் தலைவி 'மனைவி' ஆகிறாள். இல்லத்தின் தலைவி ' இல்லாள்' ஆகிறாள். இங்கே மனைவி, இல்லாள் என்னும் இரண்டு பெண்பால் சொற்களுக்கும் ஆண்பால் சொற்கள் இல்லை என்பதும் நம் கவனத்துக்குரியது.

இந்த வாழ்க்கைத்துணையைத் திருவள்ளுவர்,

'மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'

என்று இலக்கணப்படுத்துகின்றார்.

மாண்புடைய பெண்ணுக்குப் பல பண்புடைமைகள் இருக்க வேண்டியது அவசியம். அவற்றுள்ள முக்கியமானது அவளின் கற்புத்திறன்.

' பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்'

எனக் கற்பின் மேன்மைக்கு இலக்கணம் வகுக்கிறார் திருவள்ளுவர்.

இல்லத்திலிருந்து ஆற்ற வேண்டிய கருமங்களுக்குரிய ஒழுக்கமும் கல்வி அறிவும், மனம், வாக்கு, காயம் மூன்றிலும் கலங்காத திண்மையும் தெய்வத்தன்மையுங் கொண்டவளாக இல்லாள் இருந்து விட்டால் அந்த இல்லாளது இல்லத்தில் இல்லாத சிறப்புக்கள் எதுவுமே இல்லை என்கிறார் தெய்வப்புலவர்.

'' இல்லதென் இல்லவள் மாண்பானால்?'' என வினா எழுப்புகின்றார்.

இந்த வகையில் கற்புக்கரசியாக விளங்கும் சீதா பிராட்டியைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கற்பு நிலையில் கற்பின் கனலியெனக் கண்ணகியும் கற்புக்கரசி எனச் சீதையும் நமது இலக்கியங்களிலே போற்றப்படுகின்றனர். ஆயினும் இவர்கள் இருவரும் வெவ்வேறான நிலையில் இருப்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். அதாவது சீதை அறக்கற்பு உடையவளாகவும் கண்ணகி மறக் கற்பு உடையவளாகவும் விளங்குகின்றனர் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

மதுரை மாநகரிலே தனது ஒரு காற்சிலம்பை விலை கூறி விற்க முயன்ற தனது கணவன் கோவலனைக் கள்வனென ஆராய்வின்றிப் பழி சுமத்திக் கொலை செய்வித்த பாண்டியன் நெடுஞ்செழியனின் செயலினால் அவன் மீது பொறுக்க முடியாத கோபங்கொண்டாள் கண்ணகி; தனது கணவனைக் கள்வனென அரசனிடஞ் சொல்லி அவனது வளையாத செங்கோல் ஆட்சிக்கு ஊறு விளைத்த தீயவரை அழிக்கவும் முற்பட்டாள் கண்ணகி. தனதும் தனது கணவனதும் குடிப்பிறப்புக்குப் பங்கம் வந்ததே என்பதனால் மதுரை நகரத்தையே எரித்தாள் கண்ணகி. அரசனுடன் வழக்குரைத்து, அவனைக் குற்றவாளியாக்கியதால் அவன் இறந்துபடவும் அதனால் அவனது மனைவி இறக்கவும் செய்து தன் கணவனை நிரபராதி ஆக்கினாள் கண்ணகி. அதனால் கண்ணகியின் கற்பு மறக்கற்பு ஆகிறது.

ஆனால் சீதையின் நிலை வேறு.

' தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என இராமன் வனவாசஞ் செய்யப் புறப்பட்ட போது நின் பிரிவினும் சுடுமோ காடு' எனக் கூறித்தானும் அவனுடன் சென்றவள் சீதை.

பன்னிரண்டு ஆண்டு இல்லற வாழ்வில் அரண்மனையின் சுகபோகத்தை அனுபவித்த அதே மனநிலையில் இராமன் புறப்பட்ட போது அதே பக்குவத்தில் சீதையும் அவனுடன் சென்றவள்.

விதியின் விளைவால் இராவணன் சீதையைக் கவர்ந்து சென்று இலங்கையில் சிறைவைத்த போது இராமனைப் பிரிந்த கவலையில் சீதை இருந்தாளேயன்றிச் சிறைவாழ்வை எண்ணித்துக்கப்படவில்லை.

மேலும் இராவணன் சீதைக்கு அவமானம் வரத்தக்கதாக அவளது விருப்பத்துக்கு மாறாக எதையும் செய்யத் துணியவில்லை. அதனால் அவனுக்குத் தண்டனை வழங்க வேண்டிய அளவுக்குச் சீதை கோபங்கொள்ளும் வாய்ப்பு இருக்கவில்லை என்பதும் நம் சிந்தனைக்குரியதே.

தனது எண்ணத்துக்கு இயைந்து வரச் செய்வதற்காகக் கடுஞ் சொற்களைக் கூறிச் சீதைக்குத் துன்பத்தைக் கொடுத்தானேயன்றி அவளது கற்பு நிலைக்கு ஊறு விளைவிக்கவில்லை இராவணன். அதனால் இராவணனது வேண்டுதலைப் புறக்கணித்துத் தன்னைப் பாதுகாக்க முடிந்தது சீதைக்கு.

இவ்வாறு தனது பொறுமையினால் மனத்திண்மையினால் தன்னைக் காத்துத் தனது கணவனையும் பேணி, வேறு பழிச் சொற்கள் வராமல் புகழ்பெற்றவளான சீதையின் கற்பு அறக்கற்பு ஆகின்றது.

அசோக வனத்தில் சீதையைக் கண்ட அனுமான் தன்னை இராமதூதன் என அறிமுகஞ்செய்து இராமனது கணையாழியைக் கொடுத்து சீதைக்கு நம்பிக்கையை உண்டாக்கிய போதும், அனுமானுடன் புறப்பட்டுச் செல்லச் சீதை உடன்பட்டாளில்லை. தனது கற்பு நிலையும் இராமனின் வில்லின் மகிமையும் பாதிக்கப்பெறும் எனக் கூறி அனுமானுடன் நயமாகப் பேசித் தனது அறக்கற்பை வெளிப்படுத்துகிறாள்.

அரச வம்சத்தில் (தசரதன் வரை) பலதார மணஞ் செய்பவர்கள் என்ற முறையை மாற்றி மிதிலையில் திருமணத்தின் போது உன்னையன்றி வேறொரு பெண்ணை மனதாலும் எண்ணேன் என இராமன் தன்னிடம் கூறிய இரகசியத்தை இராமனுடைய காதில் ஓதும் படி அனுமானிடம் வேண்டுதல் செய்கிறாள் சீதை.

சீதையைச் சந்தித்த பின்னர் இராமனிடம் திரும்பிச் சென்ற அனுமான், தனது பயணம் வெற்றிபெற்றதைக் களிப்புடன் கூறும் போது,

'' கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்...'' எனச் சொற்களைக் கையாளும் முறையும், சீதையின் கற்பு நிலையை இராமன் எவ்வளவு தூரம் சிந்தித்திருப்பான் என்பதற்குக் கம்பர் நற்சாட்சியப் பத்திரம் வழங்குவதாக இருப்பது நயத்திற்குரியதே.

கற்பு எனப்படுவது சொற்றிறம்பாமை, மனந்திறம்பாமை, கற்புடைய மகளிருக்கு அருள் செய்யும் மென்மையும் உண்டு;கற்பின் வழுவாத திண்மையும் உண்டு;பொறுமையும் தியாகமும் உண்டு.

இராவணவதம் முடிந்தபின் , விபீசணன் சீதையைச் சிறையிலிருந்து அழைத்து வந்த போது, இராமன் அவளை ஏற்கவில்லை. இவ்வளவு காலமும் பிறனுடைய இல்லத்தில் சீதை இருந்தாள் என உலகம் பழிக்கும் என்பதால்!

சீதை உடனே இலக்குமணனைத் தீ

(20 ஆம் பக்கம் பார்க்க)



நா. நல்லதம்பி
மட்டுவில்

# வீரத் தமிழ் நங்கை

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை 173

*1950 களில் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் துறையில் இணைந்து கொண்டவர் ந.சிவபாதம் 'புத்தொளி' என்ற புனைபெயர் அவரது இயற்பெயரின் முன்னால் இணைந்து கொள்ளும் அளவுக்குக் கவிதை, கட்டுரை, சிறுகதை எனப் பல துறைகளிலும் கால் பதித்தவர். சிறிதும் பெரிதுமாக இருபது வரையான நூல்களை வெளியிட்டுள்ளார்.*

*யாழ். இலக்கிய வட்டத்தின் முக்கிய பதவிகளை வகித்த இவர் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அமரராகிவிட்டார்.*



*சுதந்திரன் சிறுகதைகள் தொகுதியில் இடம்பெற்றுள்ள இவரது 'வீரத்தமிழ் நங்கை' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.*



கி.பி 1799 ஆம் வருடம் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி பாஞ்சாலங் குறிஞ்சியில் வீர பாண்டியனின் தம்பி ஊமைத்துரையும் வீரரிற் பெரும் பகுதியினரும் திருச்செந்தூர் செந்தில்லாண்டவன் திருவிழாவிற்குச் சென்று விட்டனர். இதனால் பாஞ்சாலங் குறிஞ்சியின் படைபலம் குறைந்துவிட்டது. இதையறிந்த வெள்ளையர் இரவோடு இரவாகப் பாஞ்சாலங் குறிஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்டனர். எட்டயபுரத்து எட்டப்பனின், புதுக்கோட்டை தொண்டமானின் குலத்துரோக வஞ்சகக் கூட்டம் கட்டப் பொம்மனின் போர்வீரரைக் காட்டிக் கொடுக்க இன்னொரு புறம் சதி....

வாள் முனையில் வரி கொடுப்பதாக உறுதி பூண்ட பாண்டியன் பரதேசி வெள்ளையரின் இரத்தச் சேற்றால் சுதந்திர தேவிக்குக் கோயில் கட்டச் சங்கற்பம் செய்தான். பாஞ்சாலங் குறிஞ்சிக் கோட்டையெங்கும் வீரமறவர் முற்றுகையிட்டனர்.

அன்று; அவளுக்கும்- அவனுக்கும் திருமணம் நடக்க இருந்தது. அவன் அந்த நாட்டு மன்னனின் வளர்ப்புப் பிள்ளை- படைத்தளபதி- இலட்சிய வீரன்.

மான் வீரமும் மறக்குலப் பண்பும் பொருந்திப் பொலிவுறும் அந்த எழில் மங்கை தன் அன்புக் காதலன் வரவை எதிர்நோக்கி, உள்ளத்தில் உவகை இன்பம் ஊற்றெடுக்கக் காத்துக் கிடக்கிறாள்.

அப்பொழுது குதிரையின் குழம்போசை கேட்டது. அவன் வருகிறான். அவளுக்குத் தெரிந்துவிட்டது. அகமும் முகமும் மலர்ந்தன. அவள் எண்ணச் சிட்டு இன்ப லோகத்துக்குச் சிறகடித்துப் பறந்தது.குதிரையை ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு அவன் அவளருகிற் சென்று அமர்ந்தான். அவளோ அவன் வந்திருப்பதைக் காணாதவள் போலத் தானும் தன்பாடுமாகப் பாராமுகமாக இருந்தாள். விசமத்தனத்தின் வெற்றி உருவாக வீற்றிருந்தாள்.

''சொக்கம்மா! சொக்கம்மா! '' அவன் இவ்வாறு அழைத்தான் அன்புக்குரியவளை. அவள் விசமத்தனம் கட்டவிழ்ந்தது, கலகலவெனச் சிரித்தாள்.

'' சொக்கம்மா ஏன் மௌனமாக இருக்கிறாய்'' அவன் கேட்டான். அப்பொழுது மேகம் கறுத்து இருண்டது. இடையிடையே மின்னல்; இடி. வானத்தில் திடீரென ஒரு குமுறல்; குழப்பம். இனி நடக்க இருக்கும் துக்ககரமான சம்பவத்தின் அறிகுறி!

''அந்நிய நாட்டு வெள்ளையருடன் போருக்குப் போகிறேன் விடைகொடு'' அவன் அவளிடம் அவசர தொனியில் சொன்னான். அவள் இடியேறு கேட்ட சர்ப்பம் போல சலவைக் கற் சிற்பமானாள்.

'' என்ன..?'' இப்படிக் கேட்ட அவளால் மேலே பேசமுடியவில்லை. வாயடைத்துப் போனாள்.

'' உண்மைதான் அன்பே! பாஞ்சாலங் குறிஞ்சியைப் பரதேசி வெள்ளையர் முற்றுகையிட்டு விட்டனர். இன்றிரவு கோட்டையையும் பிடித்துவிடுவர். அதற்கு முன்னர் நான் அங்கு செல்ல வேண்டும். போரிட்டு மாற்றானின் மூட்டறுத்து - மூலபலத்தை முறித்து புற முதுகிட்டு ஓடச் செய்ய வேண்டும். இது என் அவா. இப்போதைய இலட்சியம்'' ஆவேசத்துடன் சொன்னான்.

''அத்தான்....! நமது நல்வாழ்வின் உதயமல்லவா இன்று. திருமணம் என்பதையும்.....''

'' அன்பே ! நம் நாட்டை அடிமையாக்கி அரசோச்ச மினத்தையும் காப்பாற்றிய பின் வெள்ளையத் தேவன் கட்டாயமாக உன் கழுத்தில் மாங்கல்யம் மிளிர்வதைக் காண்பான்.''

''உங்கள் உயிர் என்கிறீர்களே. என்னைப் [illegible] எப்படிப் பிரிந்து...!''

'' சொக்கம்மா! என் சிந்தனைக்கினியவளே! மறக்குல மங்கையவளே! நீ மானம் பெரிதென வாழ்ந்த மங்கை. நல்லார் பரம்பரையல்லவா? மானம் போனபின் வாழாமை முன் இனிது என்று எடுத்துரைத்த தமிழ் மகனின் சந்ததியல்லவா நீ? இப்படி ஏங்கித் தவிக்க வெட்கமில்லையா உனக்கு. நான் பிறந்த பொன்னாட்டை மறந்து உன்னுடன் தங்கியிருப்பதா- இந்த நாட்டை வெள்ளையன் சூறையாடி வெற்றி முறுவலுடன் ஆட்சி செய்ய நான் உன்னுடன் காதற்கதை பேசிக் கொண்டிருப்பதா? இதுதானே உன்னுடைய தீரம்...?''

''அத்தான்! போதும். உங்களை நான் என்னுடன் இருக்கச் சொல்லவில்லை. என்னையும் உங்களுடன் போர்க்களம் அழைத்துப் போங்கள் என்றுதான் கேட்டேன்.''

'' சொக்கம்மா! என் மறத்தின் மாண்பே! உன் உள்ளத்தின் எண்ணத்தை உணராது உளறிவிட்டேன். என்னை மன்னித்துவிடு. நீ போர்க்களம் புகவேண்டாம். முதலில் நான் போகிறேன். நான் போரில் மடிந்தால் என் பங்கை நீயும் உன் குலமும் ஏற்று வெள்ளையனை வெட்டி வீழ்த்தி அவனுக்குச் சமாதி கட்டுங்கள் கண்ணே! இப்போ எனக்கு விடை கொடு.''

'' என்னை இரவோடு பகலாக வளர்த்து வாலிபமாக்கிய தமிழ்த்தாயே! தங்கத்திருவிடமே! நீ வளர்த்து விட்ட வீர குலத்துதித்த கூட்டத்துள் என் அத்தானுக்கும் இடம்கொடு'' இப்படி அவள் விக்கலுடனும் விம்மலுடனும் கூறினாள். இல்லை, அவளை அறியாமலே அவள் வாய் குழறியது.

இவ்வார்த்தைகளைக் கேட்டுக் குதூகலித்தான் வெள்ளைத்தேவன். அகமும் முகமும் மலர அவளை அன்புடன்

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

ஒருநாள் பைரகா, புறொயிலர் கோழிக்குஞ்சுகள் 19.11.2010ஆம் திகதியும், பிரவுன் பேட்டுக் குஞ்சுகள் 21.11.2010ஆம் திகதியும் விநியோகம் செய்யப்படும்.

எஸ்.கிருஷ்ணகுமார்
மானிப்பாய். தொ.பே.:0772338084.

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அண்மையில் 5 அறைகள், பெரிய ஹோல், சமையலறை, Visiters ஹோல், வாகனத் தரிப்பிட வசதிகளைக் கொண்ட வீட்டின் மேல்மாடி வாடகைக்கு விடப்படும்.
அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஏற்றது.

தொடர்பு: 0213219743. (105884)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணித் தைலம்


பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(C/564561)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 08 . 09 . 1938



உதிர்வு 14 . 10 . 2010

### அமரர் திருவேங்கடம் தில்லைநாதன்

கடந்த 14.10.2010 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.11.2010) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

19/10, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர். (சி/ 572790)

## சமூக பராமரிப்பு நிலையம் தொடர்பான செயலமர்வு

நாவற்குழி,நவ.14

யுனிசெவ் நிறுவனம் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து சமூக பராமரிப்பு நிலையம் தொடர்பான இருநாள் செயலமர்வை நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் நடத்தவுள்ளது.

நாவலர் வீதி, நல்லூரில் உள்ள தியாகி அறக்கொடை நிதியத்தின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற வுள்ளது.

சமூக பராமரிப்பு நிலையச் செயற்பாட்டுடன் தொடர்புடைய சமூக சேவைகள் அதிகாரிகள், சமூக சேவைகள் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர்கள், உளவளத்துணை உதவியாளர்கள், ஆரம்பப்பிள்ளை அபிவிருத்தி உதவியாளர்கள், மகளிர் அபிவிருத்தி அதிகாரிகள் ஆகியோர் இதில் பங்கேற்கவுள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மேற்படி உத்தியோகத்தர்களே இதில் பங்குகொள்ளவுள்ளனர். (ம-

## மணமகள் தேவை

1966ஆம் ஆண்டு பிறந்த லண்டனில் தொழில் புரியும் பதிவு திருமணம் மட்டும் நடந்து சில மாதங்களில் விவாகரத்துப் பெற்ற உயர் இந்து மணமகனுக்கு மணமகள் தேவை. இலங்கையில் வாழ்வதற்கும் விருப்பம் உடையவர்.

தொடர்பு:- 0776180675
(மதியத்திற்கு பின்பு) (105868)

## விநியோகத்தர்கள் தேவை



எமது நிறுவனம் PREMIER என்ற பெயரில் குடிநீர் / பழரசம் /அயடின் கலந்த உப்பு/ மலிகை பொருட்கள் / சோயாமீட்/ சோஸ் வகைகள் என்பன சந்தைக்கு விடப்பட்டுள்ளன. இது ISO/SLS/HACCP மற்றும் சுகாதார அமைச்சின் சான்றிதழ் பெற்ற உற்பத்திகளின் முன்னணி நிறுவனமாகும் எமது சந்தைப்படுத்தல் துறையை நாடு பூராகவும் பரவச் செய்வதற்காக வடக்கு / கிழக்கின் எல்லா பிரதேசங்களிலும் விநியோகத்தர்கள் தேவை.

பிரதேசம் : யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை, வவுனியா உட்பட வடமேற்கு அனைத்து பிரதேசங்கள்

தேவைப்படுவது :
பிணைக் கட்டணம் செலுத்தக்கூடிய வசதி
சொந்தமான வாகனம் / களஞ்சிய வசதி
பிரதேசம் பற்றிய அறிவு

உயர்ந்த பிரதிபலன் மற்றும் விசேட சலுகைகள், மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள் அல்லது விண்ணப்பியுங்கள்

**Premier Water Marketing (Pvt) Ltd**
1067, 3ம் மாடி, பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை.
Tel : 0777-641946, 0776-424393 Fax : 011 - 2774125

STANDARDS CERTIFIED COMPANY
SLS 894

## CAS எலக்ரோனிக் டிஜிற்றல் தராசுகள்

உலகப் பிரசித்தி பெற்றதும், அரசாங்க அங்கீகாரமும், ஒரு வருட WARRANTY உத்தரவாதமும், உள்ள CAS 15 கிலோ எலக்ரோனிக் டிஜிற்றல் தராசு வகைகள் உடன் விற்பனைக்கு உள்ளன.

**அபிராமி எலக்ரிக்கல்ஸ்**
62/34, ஸ்ரான்லி பக்க வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2227989. (சி/572823)

## மரண அறிவித்தல்

### அப்புலிங்கம் பரிமளம்



எம். எஸ். வீதி, கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புலிங்கம் பரிமளம் (குஞ்சு) (11.11.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பொன்னம்மா தம் பதியரின் அன்பு மகளும் முருகேசு - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் அப்புலிங்கத்தின் அன்பு மனைவியும் விஸ்வலிங்கம், சண்முகராசா, செல்வராணி, தங்கராணி, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருநாமம், அப்புத்துரை, பூமணி ஆகியோரின் அன்பு மைத் துனியும் கணேசராசா, தவராசா, மகேந்திரராசா, குமாரராசா, கிருஷ்ணராசா, நாளயினி ஆகியோரின் பாசமிகு தாயும் பவானி, றேனுகா, மலர், குமுதா, ராஜி ஆகியோரின் அன்பு மாமியும் லக்சன், தனுஷ், லது, லதி, லக்சா, இந்துஷன், சிந்துஷன், றக்சனா, தக்ஷிகன், சிந்துஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு தகனக் கிரி யைக்காக எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எம்.எஸ். வீதி,
கோண்டாவில்.
T.P:0774047774 (105875)

தகவல்:
குடும்பத்தினர்.

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Federal Department of Foreign Affairs FDFA
**Swiss Agency for Development and Cooperation (SDC)**
Humanitarian Aid and SHA

# Swiss Agency for Development and Cooperation (SDC)

## FIELD OFFICE – JAFFNA

SDC, the representing Agency of the Swiss Government, is co-funding and implementing several post-conflict projects in Sri Lanka. SDC is currently is implementing an owner driven housing development programme in the Jaffna District. We are inviting applications from eligible candidates for the following position.

**Temporary Driver**

The ideal candidate should posses a valid Sri Lankan Driving licence (class A) with minimum of five years experience. Experience in similar position in an INGO/ NGO is an asset.

Other requirements

- High level of fluency in both, written and oral, in English and Tamil
- Ability to communicate in Sinhala is an advantage
- Ability to interact effectively with international and national personnel
- Excellent people interaction skills and demonstrated ability to support a team effectively
- Should be an active team member and be flexible to work under pressure and in response to changing needs

**FEMALE CANDIDATES ARE ENCOURAGED TO APPLY**

**Appointment will be on casual basis.**

Please submit your Curriculum Vitae with the motivation letter on or before 18th of November 2010 to the following address:
Swiss Agency for Development and Cooperation
521/11 Point Pedro Road,
Nallur, Jaffna.
e-mail address: jaffna@sdc.net

**Only short listed persons will be contacted**

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (105858)

## கணினி விற்பனைக்கு

P-IV, 1.7GHZ முழுமையான கணினி ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. விலை 15,750/= மற்றும் கணினி சம்பந்தமான Printer, UPS, Dongle, Pendrive என்பனவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: Sky Computer System
162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
(டேவிற் பீரிஸ் முன்பாக) 021 222 1417. (சி/572750)

## தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் கடமையாற்றக் கூடிய கட்டடத் தொழில் நுட்பவியலாளர் தேவை. 3 வருட அனுபவம் விரும்பத் தக்கது.

தொடர்பு:
"சர்மிளா போட்டோ"
710, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (105890)

## அருள் முருகன் திருமண சேவை

மிக நம்பகமானது; பாதுகாப்பானது! முக்கியமாக இது ஒரு சமூக சேவையுமாகின்றது!!Teachers, Doctors, Engineers, Accountants, Lecturers (Vegetavians & non Vege tarians) உட்பட எத்தகைய மணமக்கள் தேவைக்கும் முன்னணியில் நாம்! சுயமாகவும் எளிதாகவும் மணமக்களை தெரிவு செய்வது நீங்கள்!! 03. யாழ்.வீதி, சிறாம்பியடி ஒழுங்கை (ஆரிய குளச் சந்தி கிட்டவுள்ள ஒழுங்கை) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:2229334

## மணமகன் தேவை

பிரான்ஸில் பிறந்து அங்கு நல்ல வேலையில் இருக்கும் 27 வயதுடைய பெண்ணுக்கு பிரான்ஸில் வதிவு உரிமை (PR) உள்ள மணமகன் தேவை.

தொடர்பு:- 0033139826450
0033626092194( கைபேசி)
0771600507

## காணி, கட்டடம் விற்பனைக்கு

கொழும்புத்துறை மேற்கு ஐயா கடைச்சந்தியில் (இந்து மகா வித்தியாலயம் முன்பாக) 6 பரப்புக் காணியும் கடைக்கட்டடமும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773904011
நேரம் காலை6.00- முற்பகல் 10.00 மணி வரை
மாலை 6.00- இரவு 9.00 மணி வரை. (சி/572739)

## CeyLabs Solutions (Pvt) Ltd.

குறைந்த கட்டணத்தில் தரமான கண்காணிப்பு கமரா பொருத்தும் சேவை



வணிகநிறுவனத்தை பாதுகாக்க.

வேலையாட்களை கண்காணிக்க.

* இணையத்தினூடாக எங்கிருந்தும் கண்காணிக்கும் வசதி.
* 100m வரை தெளிவான வீச்சு.
* காட்சி சேமிப்பு வசதி.
* சுழற்சி கமராக்கள்.
* Remote Zooming.

உத்தரவாதம்.

CeyLabs Solutions (Pvt) Ltd.
204, Brown Road,
Jaffna.
Hotline : 021-2221807
General : 077-2517223
Web : www.ceylabs.com
Email : contact@ceylabs.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ மயப்படுத்தப்பட்ட இனவாத மேலாண்மை

அண்மையில் கடந்த கால அனு பவங்களிலிருந்து கற்றுக்கொள்ளல் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் விசாரணையின் போது சாட்சியமளித்த லெப்.கேணல் சுனில் அமரசேகர இலங்கை சிங்களவர்களின் தேசம் எனவும் இங்கு தமிழர்கள், முஸ்லிம்கள் என எவரும் கிடையாது எனவும் அனைவரும் 'சிங்களே' எனவே அழைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளூரிலும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமும் குறிப்பாக இந்தியாவிடமும் அளிக்கும் வாக்குறுதிகளின் அடிப்படையில் தமிழ் மக்கள் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வு எட்டப்படும் என எதிர்பார்த்துக் காத்திருக்கையில் இப்படியான ஒரு கருத்து அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இராணுவத்தில் உயர்பதவி வகித்து ஓய்வு பெற்றவர் இவர் என்ற அடிப்படையில் இவரின் கருத்தை எவ்விதத்திலும் அலட்சியம் செய்துவிட முடியாது.

அது மட்டுமல்லாமல் இதுபோன்ற கருத்துக்கள் ஏற்கனவே இராணுவத் தரப்பிலிருந்து வெளிவந்துள்ளமை இராணுவ மயமாக்கப்பட்ட ஓர் இனவெறி அரசியல் உள்ளூரப் புரையோடியிருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா தமிழர்களுக்கு என இந்தநாட்டில் எவ்வித உரிமையும் கிடையாது எனவும் சிங்களவர்கள் கொடுப்பதைப் பெற்றுக்கொள்ள மட்டுமே முடியும் என ஒரு வெளிநாட்டுப் பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்ததை நாம் மறந்து விடமுடியாது.

இவ்வாறே சில மாதங்களுக்கு முன்பு மன்னார் மாவட்டத்தில் ஓர் இராணுவ முகாமைத் திறந்து வைத்த போது உரையாற்றிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய வடக்கில் குடியேற்றங்களை அமைத்துச் சிங்கள இராணுவத்தினரின் குடும்பங்களைக் குடியிருத்தப் போவதாகவும், அவர்கள் கேட்டுக் கொண்டால் அவர்களுக்கு விவசாயம் செய்யவும் காணிகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்திக்கிறார்.

அண்மையில் திருகோணமலையில் தமிழ் மக்களின் தொன்மையான

**சந்திரசேகர ஆசாத்**

வரலாற்றுச் சின்னமான கன்னியாய் வெந்நீருற்று தொல்பொருள் திணைக் களத்திற்குக் கையகப்படுத் தப்பட்டதுடன் அதன் வரலாற்றை எடுத்துரைக்கும் அறிவிப்புப் பலகை திருமலை அரச அதிபரால் அகற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. இவரும் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக அமைச்சரவைப் பேச்சாளரான ஹெகலிய ரம்புக்வெல நாட்டில் எந்த ஒரு இனத்துக்கும் தனியான பிரதேசங்கள் இல்லையெனவும் இந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் ஒவ்வொரு அங்குல நிலமும் சொந்தம் எனவும் கண்டிப்பாக இன விகிதாசாரம் பேணப்படமாட்டாது எனவும் தெரிவித்திருந்தார். இவரும் முன்னாள் பாதுகாப்புத்துறைப் பேச்சாளராக விளங்கியவர் என்பதை மறந்து விட முடியாது.

இராணுவத்தின் சாதாரண தரப்பிலிருந்து இப்படியான கருத்துக்கள் வெளிவந்திருந்தால் அவற்றைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடலாம். ஆனால் இவர்களோ உயர்மட்ட அதிகாரிகள். முன்பு இராணுவத்தில் பணியாற்றியவர்கள் அல்லது இப்போதும் பணியாற்றுபவர்கள். எல்லாவற்றையும் விட இவர்கள் அனைவரும் இராணுவத்தில் பங்கு வகிப்பவர்கள் அல்லது அரச உயர்மட்டங்களுடன் அதிகாரபூர்வமான தொடர்புகளைப் பேணிவருபவர்கள்.

இதை நாம் குறிப்பிடும் போது அரசாங்க மட்டத்திலோ, புத்திஜீவிகள் மட்டத்திலோ, மதவாதிகள் மட்டத்திலோ இனவெறியர்கள் இல்லையென்று அர்த்தமாகிவிடாது. ஏற்கனவே வளர்க்கப்பட்ட இனவாத மேலாண்மைச் சிந்தனைப்போக்கு அண்மைக்காலங்களில் தீவிரமான முறையில் வளர்க்கப்படுவதுடன் மக்கள் மயப்படுத்தப்பட்டும் விடுகிறது.

ஆனால் ஆயுதப்படைகளுக்குள் நிலை நிறுத்தப்படும் இனமேலாதிக்கப் போக்கு நேரடியாகவும், பயங்கரமாகவும் தமிழ் மக்கள் மீதான ஓர் இன அழிப்பை நடத்தி முடித்திருந்தது என்பதுதான் கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம். இதற்கான சூழ்நிலைகள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுவிட்டன.

எவ்வளவுதான் ஜனாதிபதியும், அவரது அமைச்சர்களும் ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற கோஷத்தை மீண்டும் மீண்டும் உரத்த குரலில் கூறிவந்தாலும் இந்த நாட்டில் இருவிதமான நிர்வாகங்கள் நிலவுகின்றன என்பது யதார்த்தமாகும்.

தென்னிலங்கையில் அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒரு சிவில் நிர்வாகம் நிலவும் அதேவேளையில் இராணுவ மயப்படுத்தப்பட்ட ஒரு சிவில் நிர்வாகமே வடக்குக் கிழக்கில் நிலவுகிறது. எந்த ஒரு சிவில் நிர்வாகமும் இராணுவக் கண்காணிப்பின் கீழேயே வடக்குக் கிழக்கில் இடம்பெற்று வருகிறது.

தென்னிலங்கையிலும் பல இராணுவ முகாம்கள் பல இடங்களிலும் அமைந்திருந்த போதிலும் இங்கு படையினர் சிவில் நிர்வாகத்தில் தலையிடுவதில்லை. அங்கு இடம்பெறும் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி போன்ற கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை.

வடக்குக் கிழக்கில் நிலைமை நேர் மாறாகவே உள்ளது. எந்த ஒரு நிர்வாகம் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட கூட்டங்களிலும் சீருடையினரின் பிரசன்னம் இருக்கும். திறப்பு விழாக்கள் முதற்கொண்டு பாடசாலைப் பரிசளிப்பு விழா, கண்காட்சிகள், களியாட்டங்கள் எனச் சகல விதமான நிகழ்ச்சிகளிலும் சீருடையினர் கலந்துகொள்வார்கள். அரசியல்வாதிகளைப் போன்றே அவர்களுக்கும் மாலை மரியாதை எல்லாம் உண்டு.

இதில் ஒரு முக்கிய விடயம் என்னவெனில் வடக்குக் கிழக்கின் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட கூட்டங்கள் இடம்பெறும்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படுவதில்லை. ஆனால் அங்கு இராணுவ அதிகாரிகள் தவறாமல் கலந்துகொள்வார்கள்.

அதாவது மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து பறிக்கப்பட்டு இராணுவத் தரப்பிடம் கையளிக்கப்படுகிறது.

இதுமட்டுமன்றி வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களின் ஆளுநர்களும் முன்னாள் படையதிகாரிகளே, அரசாங்க அதிபர்கள், ஏனைய சிவில் நிர்வாக அதிகாரிகள் போன்ற அனைவருமே படையினரின் கட்டுப்பாட்டுக்குள் செயற்பட வேண்டிய நிலையே உள்ளது. பொதுமக்களின் காணி உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் கூட காணிஅதிகாரிகள் இராணுவ அதிகாரிகளை மீறி எதுவும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின் றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட தம்மைத் தெரிவுசெய்த மக்களை நேரடியாகப் போய்ச் சந்திப்பதில் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் மிரட்டல்கள், பயமுறுத்தல்கள் காரணமாக மக்கள் அவர்களைச் சந்திக்க அஞ்சும் நிலைமையே நிலவுகிறது.

அதாவது வடக்குக் கிழக்கில் இராணுவத் தின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஓர் இராணுவமயப்படுத்தப்பட்ட சிவில் நிர்வாகமே நிலவுகிறது.

இப்படியான ஒரு நிலையில் இராணுவத் தரப்பில் நிலை கொண்டிருக்கும் இனமேலாதிக்கச் சிந்தனைப் போக்கு எவ்வளவு ஆபத்து நிறைந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

## இனத் தனித்துவங்களை மறுப்பதன் மூலம் இனக் குரோதங்களை ஏற்படுத்தும் வியூகம்

இந்த நிலையில் முன்பு சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்தோ தற்சமயம் லெப்.கேணல் ஜெகத் ஜெயசூரியா, சுனில் அமரசிங்க, ஹெகலிய ரம்புக்வெல ஆகியோர் வெளியிட்டு வரும் கருத்துகளோ சில தனிப்பட்ட நபர்களின் கருத்துக்கள் எனப் புற மொதுக்கிவிட முடியாது. இவை நன்கு திட்டமிடப்பட்டுபடைய மைப்புகள் மத்தியில் விதைத்து வளர்த்தெடுக்கப்பட்ட இராணுவ மயமாக்கப்பட்ட இனவாதத் தின் வெளிப் பாடுகளே!

இவர்களின் வார்த்தைகள் வெவ்வேறு வடிவத்தில் வெளிவந்த போதிலும் இவை ஒரே அடிப்படையையே கொண் டிருக்கின்றன. அதாவது சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் நிலப்பகுதி ஆக்கிரமிக்கப்படுவதன் மூலம் தமிழ் மக்களின் தேசிய தனித்துவத்தைச் சிதைப்ப தாகும். அதாவது தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் என்ற தகுதியிலிருந்து கீழிறக்கி ஓர் இனக் குழுமம் என்ற நிலைக்குத் தள்ளுவதாகும்.

இஸ்ரேலின் படைத்தளபதியாகவும் பின்பு பிரதமராகவும் இருந்த மோசே தயான் அடிக்கடி ஒரு படையெடுப்பை விட குடியேற்றங்கள் பல மடங்கு பலன்களை நிரந்தரமாகவே வழங்கும் எனக் குறிப்பிடுவார்.

இப்படியான குடியேற்றங்கள் மூலம் ஓர் இனத்தின் பாரம்பரிய நிலம் ஆக்கிரமிக்கப்படுவதன்மூலம் அப்பகுதி யின் இனவிகிதாசாரம் மாற்ற மடைகிறது. இதன் மூலம் ஒரு தேசிய இனத் தின் பாரம்பரிய நிலப் பகுதி என்ற தகைமை சிதைக்கப் படுகிறது. அடுத்து ஒரு வலிமை வாய்ந்த , அரசாங்க இராணுவப் பின்னணியைக் கொண்ட ஒரு இனம் வலிமை குன்றிய இனத்தின் மத்தி யில் குடியேற்றப்படும். வெவ்வேறு கலாசாரங்களுக்கிடையே யுள்ள முரண்பாடுகள் மோதுகின் றன. இதன் விளைவாக வலிமை குன்றிய இனத்தின் கலாசாரத்தில் சிதைவு ஏற்படும் வாய்ப்புகளும் உண்டு.

இப்படியான குடியேற்றங்கள் மூலம்

> முன்பு சரத் பொன் சேகா வெளியிட்ட கருத்தோ தற்சமயம் லெப்.கேணல் ஜெகத் ஜெயசூரியா, சுனில் அமரசிங்க, ஹெகலிய ரம்புக் வெல ஆகியோர் வெளியிட்டு வரும் கருத்துகளோ சில தனிப்பட்ட நபர்க ளின் கருத்துக்கள் எனப் புற மொதுக் கிவிட முடியாது. இவை நன்கு திட்ட மிடப்பட்டுபடைய மைப்புகள் மத்தி யில் விதைத்து வளர்த்தெடுக்கப்பட்ட இராணுவ மயமாக்கப்பட்ட இனவாதத் தின் வெளிப் பாடுகளே

சிங்கள இனத்தின் பாரம்பரிய கலாசாரம் கூடச் சீரழிகிறது என்பதை இனவாதிகள் கணக்கில் எடுப்பதில்லை. வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த சிங்கள மக்கள் தங்கள் சொந்தக் கிராமங்களிலிருந்து தாங்கள் பிறந்தது முதல் பழகி வந்த சூழலிலிருந்து தங்களுடன் காலம் காலமாகப் பழகிவந்த சொந்தங்களிலிருந்து பிரிக்கப்பட்டு ஒரு புதிய சூழலுக்குக் கொண்டு வரப்படுகின்றனர். அதாவது அவர்கள் தங்கள் கலாசாரப் பண்பாட்டு வேர்களிலிருந்து வெட்டியெடுக்கப் படுகின்றனர்.

அவர்கள் தங்களின் புதிய குடியேற்றப் பிரதேசங்களுக்குஏற்ப தங்களைக் தகவமைத்துக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எனவே அவர்களின் சொந்த கலாசாரத் தனித்துவங்கள் சிதைகின்றன. அவர்கள் தங்களையறியாமலே ஓர் உதிரிக் கலாசாரத்திற்குள் தள்ளப்படுகின்

**ஞாயிறு காரம்**

றனர்.

ஏற்கனவே இவர்களிடம் விதைக்கப்பட்ட மேலாதிக்க மனப்பான்மை, இவர்களின் கட்டுக் கோப்பற்ற உதிரித்தன்மை என்பன இவர்களை ஏற்கனவே இங்கு வாழ்ந்து வரும் மக்களுடன் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. இவையே முற்றி மோதல்களாகவும் வெடிப்பதை எவராலும் தவிர்த்து விடமுடியாது.

எனவே இந்த இராணுவ மயப் படுத் தப்பட்ட மேலாண்மை என்பது தமிழ் மக்களின் இனத் தனித்துவங்களை மட்டுமன்றி சிங்கள மக்களின் இனத் தனித்துவங்களையும் சிதைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் இனங்களுக்கிடையேயான கசப்புணர்வும், மோதல்களும் நிரந்தரமாகவே நிலை பெறச் செய்யும் முகமாகவே ஒரு பெரும் வியூகம் வகுக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் ஒரு இராணுவ மயப் படுத்தப்பட்ட சிவில் நிர்வாகத்தை தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் தக்க வைத்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சகல களங்களையும் அழிப்பதும் தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க முடியாத ஒரு சூழலை உருவாக்குவதும் ஒரு நீண்ட நாள் திட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியே நீ கேள்.....!

## கிண்ணியா கண்டல் காட்டிலிருந்து யாழ். நாவற்குழி நோக்கி......

கிண்ணியா கண்டல் காடு
- ★ 57 முஸ்லிம் குடும்பங்கள் சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றம்.
- ★ கிண்ணியாஅல்.அதான் வித்தியாலயத்தில் தஞ்சம்.
- ★ தொழுகைக்காகப் போடப்பட்ட கூடாரம் கொளுத்தப்பட்டது.
- ★ எவ்வித முன்னறிவித்தலுமின்றி மக்களை வெளியேற்றிய பொலிஸார் மக்கள் தங்கியிருந்த தற்காலிகக் கொட்டில்கள் கூடாரங்களை எடுத்துச் சென்றனர்.

இத்தனைக்கும்-
- ★ இப்பிரதேசம் இம் மக்களின் பூர்வீகபூமி
- ★ சகல ஆவணங்களும் உள்ளன.
- ★ 1945 இல் எழுதப்பட்ட காணி உறுதிப்பத்திரங்கள்
- ★ 1990 இற்கும் முன்.உள்ள அனைத்து வாக்காளர் பதிவுகள்
- ★ 1965 இல் பதியப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களில் பிறந்த இடம் 'கண்டல்காடு' எனப் பதியப்பட்டுள்ளது.
- ★ 1989 இல் கண்டல்காடு பிரதேச ஜனசவிய அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இங்கே - யாழ்.நாவற்குழி:
- ★ யாரென்றே தெரியாத ஒரு தொகுதி சிங்கள மக்கள் யாழ். நகரில் குவிப்பு
- ★ பாதுகாப்புப் படை உதவி
- ★ மந்திரிமார் வருகை
- ★ நிவாரணங்கள், உறுதிமொழிகள், பாதுகாப்புகள்
- ★ உள்ளூர் அரசியல் நிர்வாகம் யாவும் செயலிழப்பு

இன்று
- ★ நாவற்குழி வீடமைப்பு அதிகார சபையின் காணியில் அத்துமீறிய குடியேற்றம்.
- ★ பாதுகாப்புப் படை துணையிருப்பு
- ★ உள்ளூர் அரச நிர்வாகம் செயலிழப்பு

எப்படி?
- ★ இந்த நாடகத்துக்கான இயக்குநர் யார்?
- ★ பிறர் பூமியில் அத்துமீறி அரங்கேற்றத் துணிவைத் தந்தவர் யார்?
- ★ இங்கு எதுவுமே தெரியாத சாதாரண சனத்துக்கு நாவற்குழிக் காணி இரகசியம் எப்படித் தெரியும்?
- ★ இரவோடு இரவாக இரைந்து சென்ற வாகனம் எவை?
- ★ விடிந்த பின் குவிந்திருந்த ஆயிரக்கணக்கான கம்பு தடி அங்கு வந்த மாயம் என்ன?
- ★ அன்றே 25 கொட்டில்கள் அமைக்கக்கப்பட்ட வேகம், விவேகம் தான் என்ன?
- ★ இக்குடியேற்றத்தின் பாதுகாப்புக்கருதி ஒரு இராணுவக் காவலரண் எழப்போவது உண்மை! இவையாவும் விடை கிடைக்கக் கூடிய வினாக்களே.

முன்னர்
- ★ வீடமைப்பு அதிகாரசபையின் இக்காணியில் 1990 களில் வாழ்ந்த பல தமிழ்க் குடும்பங்கள் போர்ச் சூழ்நிலை காரணமாக அங்கிருந்து வெளியேறினர். பின் அனுமதி கேட்க (2003- 2004 பகுதிகளில்), வீடமைப்பு அதிகார சபை மீள்குடியேற அனுமதி மறுத்தது.

அன்று தமிழ் மக்கள் தம் பிரதேசத்தைய இக்காணியில் அத்துமீறிக் குடியேறியிருந்தால்....? அரச நிர்வாகம், பாதுகாப்புத் துறை மிகத் துரிதமாகச் செயல்பட்டிருக்கும்.

இன்று உள்ளூர் தமிழ் மக்கள் நிலை:
- ★ பாதுகாப்பு வலய தமிழ் மக்கள் வீடின்றி அவதி.
- ★ யுத்தத்தால் வீடு மற்றும் இருப்பிழந்த மக்கள் சீரழிவு.
- ★ யாழ்.முஸ்லிம்களைத் தமது சொந்தப் பிரதேசங்களில் குடியேற்ற முடியாத அரசின், அரசியல்வாதிகளின் கையாலாகாத்தனங்கள்.
- ★ முகாம்களில் இருக்கும் மக்கள் மீளக்குடியேறமுடியாத நிலை, இவற்றுக்கு மத்தியில் யாரோ? எங்கிருந்தோ? என்ன நோக்குடனோ? அத்துமீறல்கள்.....!
- ★ அரச காணியில் யாரும் குடியேறலாம் என்றால்..... நாமும்.... முடியுமா....? அவர்கள் பரமசிவன் கழுத்துப் பாம்புகள். அவர்களால் முடியும் எம் புற்றுகளில் குடியேற....!
- ★ நம் தமிழ் அரசியல் வாதிகள், முஸ்லிம் அரசியல் வாதிகள் கூட தாமும் பரமசிவன் கழுத்துப் பாம்பாக இருக்கவே துடிக்கின்றனர். இவர்களால் என்ன செய்ய முடியும்....!
- ★ எமது சிறுபான்மை இன அரசியல்வாதிகளே... இதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நல்ல எம்.பிக்களாக இருக்கப்போகிறீர்களா? அல்லது...!!
- ★ ஆடி மாதத்தில் இருந்து மார்கழி வரையிலான காலப்பகுதியை ''தட்சிணாயனம்'' என்றும் இது தேவர்களுக்கு இராப்பொழுது என்றும் கூறுவர். இவ்விருள் காலப்பகுதியிலேயே- ''மகிஷாசுர வதம்'', ''நரகாசுர வதம்'', ''சூரசங்காரம்''போன்றவை நடைபெற்றன.

'' ஆமை பிடிப்பவன் அதனை மல்லாத்துவான்;
அதை நாம் சொன்னால் பாவம்''


ஏ.எம்.கமால்

## பெண்களின் விலை ஏறுகிறது

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடு சீனா. இங்கு 130 கோடி மக்கள் வசிக்கிறார்கள். 1960 இல் தொடங்கி 10ஆண்டுகளில் பிறப்பு விகிதம் உச்சத்தை தொட்டது. ஒரு பெண்ணுக்குச் சராசரியாக 7 குழந்தைகள் பிறந்தன. மக்கள் தொகையைக்குறைப்பதற்காக குடும் பக் கட்டுப்பாட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டு கண்டிப்புடன் அமுல் படுத்தப்பட்டது. ஒருகுழந்தை என்ற கொள்கை 1979 ஆண்டு முதல் நடை முறைப்ப டுத்தப்பட்டது. இதனால் சீனர்கள் கருவில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்று ஸ்கேன் செய்து பார்த்து பெண்குழந்தை என்றால் கருக்கலைப்பு செய்வது, பெண் குழந்தைகளைக் கொன்று விடுவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் சீனாவில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை கோடிக் கணக்கில் குறைந்துள்ளது. இதனால்பெண்களின் எண் ணிக்கையை விட2 கோடியே 30 லட்சம் ஆண்கள் அதிகமாக இருக் கிறார்கள். இவர்கள் வளர்ந்து ஆளாகிவிடும் போது இவர்களுக்கு திருமணம் செய்வதற்கு பெண்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வாணி.

## அபலையின் கண்ணீர்...



பூத்த கொடி பூத்து நின்றது ஒரு காலம்
அதில் பூவும் பிஞ்சும் காய்த்ததுவே தாராளம்
பூவும் பொட்டும் புழுதியிலே மறைந்ததனால்
அவள் வாழ்வில் இருள் சூழ்ந்ததம்மா கார் காலம்

கண்ணிறைந்த கணவன் கனவில் சிரிக்கின்றான்
கனவு கலைந்தவுடன் காரிகையில் மனம் துடிக்கிறாள்
விடியும் வரை நினைந்து நினைந்து அழுகின்றாள்
விரைவில் எம்மையும் அழை என்று அழைக்கின்றாள்
அவனை அழைக்கின்றாள்

கோழியோடு போகிறது குஞ்சுகளாம்
வசிக்க இங்கு கோடி இல்லை வாழுதெங்கள் பிஞ்சுகளாம்
வாழ்வைத் தேடி எங்கோ நாம் ஓடுகிறோம்
அங்கும் நாடி வருவோர் இல்லையம்மா வாடுகிறோம்
நாமும் வாடுகிறோம்

எம்மைத் தேற்றும் உள்ளம் கண்டு நாமும் சென்றாலும்
சிலர் தேக சுகம் கேட்கிறார் வாய்ச் சொல்லாலும்
இங்கு வாடி நாங்கள் வயிற்றுக்காய் அலைகின்றோம்
கரைவந்து போகும் கடல் அலைபோல் ஆகின்றோம்
தினம் வந்து போகும் கடல் அலைபோல் ஆகின்றோம்.

ஆக்கம்: மில் சிறீ
அளவெட்டி.

## பாலைவனத்திலோர் பனைநிழல்

மானுடத்தின்
மாண்பு
மாண்டுகொண்டிருக்கும் இம்
மண்ணில்
மனிதத்தின் சபலங்கள்
ஒன்றோடு ஒன்று
சங்காரமிட்டுக் கொள்கின்றன
பாலைவனமாகத்,தனித்துவிடப்பட்டிருந்த
எங்கள் நகரத்தில்
பனை நிழலும் உண்டென்று
இப்போதுதான்
புரிதல்களின் துளிர்
முளைவிடத் தொடங்கியிருக்கின்றது
என்றும் இல்லாத
ஆரவாரங்களும், படையெடுப்புகளும்
இப்போது என் நகரத்தில்
போர் அரக்கன் நிலையாக
எம்மிடத்தே வழங்கியுள்ள
ஆறாத ரணங்களும்
மாறாத வடுக்கள் நிரம்பிய எனது நகரம் தான்
இப்போது எல்லோருக்கும்
பார்வைப் பொருளாய்
இங்கு திணிப்புகள் அதிகம் தான்
ஆனாலும்
எங்கள் கணிப்புகள் மட்டும்
என்றும்
பிழைத்து விடப் போவதில்லை





வெற்றி துஷ்ந்தன்
அல்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்கள்: பிள்ளைகள் தரிசனத்தின் பதிவுகள்

காலம் மாறிப் போச்சு, எங்கட காலத்தில் அப்படி இருந்தது,இப்பத்த காலம் இப்படி இருக்குது.....

இச் சொற்கள் காலத்திற்குக் காலம் நடுத்தர வயதினரோ, முதிய வயதினரோ கூறுபவைதான். தலைமுறை இடைவெளியும், வாழ்க்கை முறை வேறு பாடும் நாம் பெருமை கொள்வதாகவோ, அலுத்துக் கொள்வதாகவோ தான் உள்ளது.

பெற்றோர்,பிள்ளைகளுக்கிடையிலான தலை முறை இடைவெளியொன்று இங்கே பதிவு செய் யப்படுகின்றது.

அண்மையில் சினிமாப் பாடலொன்றின் வரிகள் காதில் விழுந்தது.

**"வெளிச்சத்தில் நீ வாழ என் விழிகளில் விளக்கு வைப்பேன்"**

தாயை இழந்த மகனை வாழவைக்கும் ஆவலில் தந்தை ஒருவர் பாடும் காட்சி அது.

**பெற்றோர்கள் பிள்ளைகளுக்காகத் தம்மைத் தியாகம் செய்து அர்ப்பணித்து வளர்க்கும் முறை களில் உள்ள வேறுபாடுகள் பெரியோர்களின் கூற்றுகள் அவதானிப்பின் அடிப்படையில் இங்கே பதிவு செய்யப்படுகிறது.**

கடந்த 20,30,40 வருடங்களுக்கு முன்பு பெற்றோ ரின் பிள்ளைவளர்ப்பு முறையைப் பார்ப்போம்.

அன்றைய பெற்றோர்களில் பெரும்பாலானோர் தமது பிள்ளைகளின் நாளாந்த நடவடிக்கைகளில் மிகுந்த அக்கறை உடையவர்களாக இருந்தனர்.

குறிப்பாக நாளாந்தம் தமது பிள்ளைகளின் கல்வியில் காட்டிய அக்கறை இன்றைய காலப்பகுதியுடன் ஒப்பிட்டால் மிக உயர்வானதாகவே இருந்தது.

இரவில் பிள்ளை பாடம் படிக்கும் போது தாமும் அருகில் இருந்தனர். அல்லது வீட்டினுள் உறங்காது இருந்தனர்.பிள்ளையை உற்சாகப்படுத்தத் தேநீர் தயாரித்து வாஞ்சையுடன் கொடுத்தனர். குறிப்பாகச் சொல்வதானால் தாயின் அரவணைப்பே இவ்வாறு இருந்தது.

பிள்ளைகளும் தமது பெற்றோர் தமக்காக உறங்காமல் விழிக்கின்றனரே காத்திருக்கின்றனரே என்ற உணர்வுடன் கல்வி கற்றனர்.கல்வியின் மீது ஒரு பிடிப்பு இருந்தது. கற்க வேண்டுமென்ற ஆவலும் எழுந்தது.

**பெற்றோரின் தியாக சிந்தையால் பிள்ளையும் பெற்றோரின் மீது அன்பு கொண்டனர். இதனால் பிள்ளைகளும் நற்பண்பு மிக்கவர்களாக வளர்ந்தனர்.**

பெற்றோர் பிள்ளை உறவு ஆரோக்கியமாக இருந் ததால் நற்பண்பு ள்ள சமூகம் உருவாகியது. மக்க ளின் பொருளாதார வளமும் மிகவும் கஷ்டமாக இருந்த காலகட்டம் அது. பெற்றோர் பிள்ளையின் கல்விக் குப் பணம் செலவழிக்கும் போதும்,பணம் கொடுக் கும் போது பிள்ளை அப்பணத்தைப் பெற்றோர் உழைக்கப்பட்ட கஷ்டங்களை உணர்ந்து பெற்றனர்.

ஏழ்மையை உணர்ந்து கல்வி கற்றதனால் பிள் ளைகளும் கல்வியில் உறுதியாக உயர்ந்தனர். இன்று பெரிய பெரிய பதவிகளில் உள்ளோரைப் பார்ப்போமாயின் அவர்களில் பெரும்பாலானோர் இளமையில் வறுமையையோ அல்லது தேவை களை முழுமையாகவோ நிறைவு செய்ய முடியாது வளர்ந்தவர்களாகத் தான் உள்ளனர். ஏழ்மை மனிதர் களைப் புடம் போட்டது. திறம்பட வளர வைத்தது.

கூடுதலான பெற்றோர் அவ்வாறிருந்தாலும் பிள்ளைகளில் அக்கறை கொள்ளாத சில பெற்றோ ரும் இருந்ததை மறுப்பதற்கில்லை. பெற்றோரின் சொல்கேட்காது வளர்ந்து வாழ்க்கையைப் பழுதாக் கிக் கொண்ட பின்பு **" துள்ளித் திரிகையிலே துடுக்கடக்கி என்னைப் பள்ளிக்கு அனுப்பி**

> **சிறுவர் உரிமைகள், சிறுவரின் உயரிய நலன்கள் எனக் கூறும் மேற்கத்தைய கோட்பாடுகளை எமது மண்ணில் எமக்கேற்றவாறு உருமாற்றாது புகுத்தும் உத்தியோகத்தர்களாலும் நிறுவனங்களாலும் பண்புப் பிறழ்வுகள் ஏற்படுவதாகப் பெரியோர் குற்றம் சாட்டுகின்றனர்.**

**வைத்திலரே தந்தையாகிய பாதகரே......" எனப் பெற்றோரைக் கடிந்து கொண்ட பிள்ளைகளும் உள்ளனர்.**

பெற்றோரின் வருமானப் பற்றாக் குறையை உணர்ந்து சிமெந்து பாக் எடுத்து கடதாசிப்பை ஒட்டி தாய் செய்து தரும் இடியப்பம்,தோசை கடைகளுக்கு கொடுத்து,கூலி வேலைக்குபோய் தாம் உழைத்துப் படித்தவர்கள் பலர் உள்ளனர்.

அவர் ஒரு பெரிய அதிகாரி. அவரை அவரது பாட சாலைச் சக மாணவர்கள் காணும் போது " என்ன மச்சான் தோசை எப்படி இருக்கிறாய்" எனச் சுகம் விசாரிப்பார்கள். தாய் சுட்டுக் கொடுத்த தோசைகளை விற்றுவிட்டு ஓட்டமும் நடையுமாகப் பாடசாலை சென்று படித்து பின் பல்கலைக்கழகமும் சென்று படித்துப் பெரிய பதவிக்கு வந்த வர்.இப்படியான வரலாறு உள்ளவர்களில் பலர் பெரிய பெரிய பதவிகளை அலங்கரித்து உள்ளார் கள், அலங்கரித்து வருகின்றார்கள்.

இப்போது போல எதற்கெடுத்தாலும் ரியூசனுக்குப் போகும் பழக்கம் அப்போது கிடையாது. பெற்றோ ருடன் இணைந்து தோட்ட வேலைகள் செய்வது, ஆடு, மாடுகளுக்குத் தீவனம் தேடுவது,வயல் வேலைக ளில் ஈடுபடுவது எனப் பலவித வேலைகளையும் செய்து திடகாத்திரமாக வளர்ந்தனர்.

**பணத்தின் அருமை தெரிந்து வளர்ந்ததால் குணத்திலும் உயர்ந்தவர்களாகவே இருந்தனர்.** வறுமை,வருமானப் பற்றாக்குறை காரணமாக ஆடை, அணிமணிகளும் குறைவாக இருந்தது. ஒரே யொரு பாடசாலைச் சீருடையை ஒவ்வொரு நாளும் துவைத்து காய வைத்துப் பாடசாலை சென்றோர் பலர் இருந்தனர்.

இன்றைய காலப் பெற்றோரைப் பார்ப்போம். கல்வியியலாளர், சமூகவியலாளர் தரப்பில் கல்வி யின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாக சுட்டிக் காட்டப்படுவது தொலைக்காட்சி பார்ப்பதில் அதிக கவனம் செலுத்திப் பிள்ளைகளின் நலன்களை மறக் கும் பெற்றோரைப் பற்றியதாகவே உள்ளது.

தொலைக்காட்சி இன்று அத்தியாவசியப்



பொருளாக வீடுகளுக்குள் புகுந்து விட்டது. தொடர் நாடகங்களுக்கு அடிமையான பெற்றோர் பலரைக் கூடுதலாகப் பார்க்க முடிகிறது.

பெற்றோர்களில் பலர் பிள்ளையை அறையில் இருந்து படிக்கச் சொல்லி விட்டு தாம் மெல்லிய சத் தத்தில் தொடர்களையோ,நிகழ்ச்சிகளையோ, படங்களையோ பார்க்கின்றனர்.

அறையில் இருக்கும் பிள்ளை பாடப்புத்தகத்தில் கண்ணையும்,தொலைக்காட்சியின் பக்கம் காதையும் வைத்திருக்கிறது. பல அல்லது சில சமயம் பிள் ளையும் சேர்ந்து தொலைக்காட்சி பார்க்கின்றது.

இதன் விளைவு கல்வியில் செலுத்தும் கவனம் குறைகின்றது. பெறுபேறுகளும் குறைகின்றன. தொடர்களைப் பார்க்கும் பிள்ளை பிஞ்சிலே பழுக்க வும் முற்படும் சம்பவங்களும் சிலபலவாக நிகழ்கின்றன.

பிள்ளையின் கல்வி மட்டுமல்ல ஒழுக்க விழுமி யங்களும் வீழ்கிறது.

படிக்கும் பிள்ளைக்காகத் தமது ஆசாபாசங் களைத் துறக்க முடியாத பெற்றோர்களின் எண்ணிக்கை பெருகி வருவதனால் கல்வித்தரமும்,நற்பண்புகளும் அருகி வருவதாகப் பெரியோர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.ஓர் **கல்வியியலாளர் கூறினார்; இரவில் 6.30 மணிமுதல்9 மணி வரையாவது தொலைக்காட்சி பார்ப்பதை பெற்றோர் நிறுத்திப் பிள்ளையின் கல்விச் செயற்பாட்டில் அக்கறை செலுத்தினால் கல்வித் தரம் உயரும்.**

பரீட்சை நோக்கத்திற்காகப் பிள்ளை இரவில் வெகுநேரம் படிக்க முற்பட்டாலும் கூட பெரும் பாலான பெற்றோர் " சுடுதண்ணீர் போத்தலில் தேநீர் வைத்துள்ளேன் எடுத்துக்குடி"என்று விட்டு தாம் நித்திரை கொள்வதிலோ அல்லது தொலைக் காட்சி பார்ப்பதிலோதான் அக்கறை செலுத்து கின்றனர்.முன்னைய பெற்றோரைப் போலக் கண் விழித்து உடனிருந்து உற்சாகப்படுத்தும் பெற்றோர் வெகுவாகக் குறைந்து விட்டனர். தியாக சிந்தையும் குறைந்து விட்டது.பிள்ளைக்காக பெற்றோர் தியாகம் செய்வது குறைவதால் தான் பிள்ளையும் பெற்றோர் மீது அன்பு செலுத்துவது, தீர்ப்படுவது போன்றவை குறைவதாகப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

பெரும்பாலான பெற்றோரின் எண்ணம்



காலை,மாலை,விடுமுறை நாள் எல்லாம் பிள்ளைகள் ரியூசனுக்குப் போனால் சரி ,வீட்டில் கவனிக்கத் தேவையில்லை என்பதாகவே உள்ளது.

பிள்ளைகளின் கல்விக்குப் பெற்றோர் பணம் கொடுக்கும் போதும்,செலவு செய்யும் போதும் அப் பணத்தைச் சம்பாதிக்கப்படும் கஷ்டத்தை பிள்ளை கள் உணர்ந்து கொள்வதும் மிகக் குறைவாகவே உள்ளது. ஏழ்மையை உணர்ந்து பணத்தைப் பெற் றுக்கொள்ளும் தன்மை பிள்ளைகளிடம் மிகக் குறைந்து விட்டது.

பெற்றோர் தமது காலத்தில் தாம் பட்ட கஷ்டங் களைக் கூறி பணத்தின் அருமையை விளக்க முற் பட்டாலும் " **அது அப்ப இது இப்ப**" எனப் பிள்ளை இடக்கு முடக்காகவே விடையளிக்கின்றது.

தமது கல்விக்குச் செலவழிக்கப் பெற்றோர் வருமானப் பற்றாக் குறையால் கஷ்டப்பட்டால் கூடப் பிள்ளை அதை உணர்ந்து கொள்வது மிகவும் குறைவாயுள்ளது. பற்றாக்குறைக்குத் தாம் உழைத் துப் படிக்கும் வீதமும் மிகக்குறைவாகவே உள்ளது. பகுதி நேரம் வேலை செய்வதை இழிவாக நினைக்கும் மனோபாவமும் வளர்ந்து விட்டது.

பாடசாலை, ரியூசன் அமைப்புக்களையும் பார்த்தால் புதிய புதிய நிகழ்வுகள், செலவுத்தானங்கள் ஏற்பட்டு பெற்றோரின் பணச்சுமையும் தாங்கவொணாதளவு உயர்ந்து விட்டது. ஓரிரு ஆடைகளுடன் வாழ்ந்த காலம் மலையேறிக் கலர் கலராகப் பல ஆடைகள் அடிக் கடி வாங்க வேண்டிய ஆடம்பரக் கோலத்தினுள் நுழைந்து விட்டோம். கணிசமான பெற்றோர் பிள்ளை கல்வியில் திறன் குறைந்தாலும் கொண்டாட்டங்களுக்கு புறப்படும் போது பிள்ளை நல்ல சுதியாக உடுத்துவது தமக்குப் பெருமையென நினைக்கும் மனோ பாவம் வளர்ந்து விட்டது.

பிள்ளை 8ஆம் வகுப்போ அதற்கு மேலோ வந்து விட்டால் தந்தை, பிள்ளை உறவில் பெரும் இடை வெளி வந்து விடுகிறது. கடிகார முள்ளை விட வேகமாக ஓட வேண்டிய அவசர யுகத்தில் வாழ்வதால் பெற்றோருக்கும் ஏராளம் சோலிகள். அவர்களும் பிள்ளையுடன் முழு நேரம் கவனம் செலுத்த முடியாது உள்ளமையும் ஒரு காரணம்.

பிள்ளை ஒரு வயதைத் தாண்டி விட்டால் கைத் தொலைபேசியும்,மோட்டார் சைக்கிளும் கட்டாயம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பதும் எழுதப் படாத சட்டமாகி விட்டது.

**உலகம் முழுவதும்"கைத்தொலைபேசியும் மோட்டார் சைக்கிளும் ஷீரோயிசத்தின் குறியீ டாக" இருக்கும் போது இவர்களும் அதிலிருந்து விடுபட முடியாது தானே.**

உயர்கல்வி கற்பவராயின் இது கட்டாயம் என்றாகி விட்டது. பாவம் வறியவர்களுக்கும், நடுத்தர வகுப்பு மக்களும் கடன்பட்டோ,காணி விற்றோ, அடகு வைத்தோ மோட்டார் சைக்கிளும் கைத்தொலை பேசியும் வாங்கிக் கொடுக்க வேண்டி உள்ளது.

கைத்தொலைபேசிகளின் அதீத பாவனையால் இணையச் சேவைகள் மூலமாக வழி தவறும்

மருதன்

மாணவர் தொகையும் கூடிச் செல்வதாகக் கல்வியியலாளர் குற்றம் சாட்டுகின்றனர்.

உலகமயமாக்கப்பட்டு பூகோளம் சிறு கிராமமாகச் சுருங்கி விட்ட நிலையில் நாம் வாழவேண்டியுள்ளது.

விஞ்ஞானத்தில் தகவல் தொழில் நுட்பச் சாதனங்களின் கடுகதி வேக வளர்ச்சி மாணவப் பருவத்தினரது நற்பண்புகளைக் குறைக்காமல் பார்க்க வேண்டிய சமுகப் பொறுப்பும் உள்ளது.

**சிறுவர் உரிமைகள், சிறுவரின் உயரிய நலன் கள் எனக் கூறும் மேற்கத்தைய கோட்பாடுகளை எமது மண்ணில் எமக்கேற்றவாறு உருமாற்றாது புகுத்தும் உத்தியோகத்தர்களாலும் நிறுவனங்களாலும் பண்புப் பிறள்வுகள் ஏற்படுவதாகப் பெரியோர் குற்றம் சாட்டுகின்றனர்.**

மரபுகள்,சம்பிரதாயங்கள்,வழமை வழிவந்த முறைமைகளில் இளம் சந்ததியினரை வழிப்படுத்த வேண்டிய சமூகப்பொறுப்பை உணர்ந்து கொள் வோம். பிள்ளைகளுக்காகத் தம்மைத் தியாகம் செய்யும், அர்ப்பணிக்கும் பெற்றோர்கள் உள்ள சமூகத்தின் தேவை நிறைவு பெற்றால்தான் இன்றைய சமூகம் நிமிரும், உயரும்,வெல்லும்,நிலைக்கும் என்பது உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய உயர் ஸ்தானிகராலயம்
### கொழும்பு

सत्यमेव जयते

# காணி தேவை

01. கொழும்பு -3 மத்தி அல்லது கொழும்பு -7 மத்தியில் கட்டடம் அமைப்பதற்கு 160-200 பேச் காணி தேவை.

02. உதவி உயர் ஸ்தானிகராலயக் கட்டடம் நிர்மாணிப்பதற்கு கண்டி நகர மத்தியில் 100-120 பேச் காணி தேவை.

03. இந்தியத் தூதரகப் பிரதிநிதிக்கு அலுவலகக் கட்டடம் அமைப்பதற்கு உசிதமான காணிகள் யாழ்ப்பாணத்திலும் அம்பாந்தோட்டையிலும் தேவை. நகர மத்தியில் விரும்பத்தக்கது.

INTERESTED PARTIES MAY CONTACT:

HEAD OF CHANCERY
36-38 GALLE ROAD, COLOMBO-03
ELE.NO.011-2327587/ 2422788/ 2422789
FAX NO:. 011-2446403/ 2448166
E.MAIL: hoc.colombo@mea.gov.in

(c/572368)

## தவணைப் பரீட்சை நேர அட்டவணை மாற்றம்

எதிர்வரும் 18ஆம் திகதி தரம் 9, தரம் 11 மாணவர்களுக்கு நடத்தப்படவிருந்த 3ஆம் தவணைப் பரீட்சை நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று மாகாணக் கல்வித் திணைக்களம் சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அறிவித்துள்ளது.

ஹஜ் பெருநாள் எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறவுள்ளதால் இஸ்லாமிய சகோதரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 18ஆம் திகதி நடைபெறவிருந்த தரம் 9 முதன்மொழி பாடத்துக்கும் தரம் 11 முதன்மொழி பகுதி I,II,III ஆகிய பாடங்களுக்குமுரிய பரீட்சைகள் 24.11.2010 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது.
1 Kg 450/= மட்டும்.
**விஜயகுமார்,**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

### விற்பனைக்கு

300 பேட்டுக் கோழிகள் வளர்க்கக் கூடிய மிக நல்ல நிலையில் உள்ள கோழிக்கூடு தேவையான உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. **நல்லூர் பாம் செல்வர்** 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். தொ.பே.: 0212226944

### பூச்சாடிப் பிரியர்களுக்கு....

பலவகைக் இலகுவவ மண பூச்சாடிகளை பெற நீங்கள் நாட வேண்டிய இடம் இல. 220, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 222 1378

### வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக **Elephant House Ice Cream** விற்பனை செய்வதற்கு முச்சக்கர வண்டி சாரதி அனுமதிப் பத்திரத்துடன் சாரதிகள் தேவை, வாகனம் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை 14, 15 ஆம் திகதிகளில் நேரில் வரவும்.
இல.56, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விவரங்களுக்கு: 0771093300 (Prasanna).

### வாடகைக்கு

**அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற அலுவலகம், களஞ்சியத்துடன் கூடிய இரண்டு மாடிக் கட்டடம் கே.கே.எஸ். வீதியில் வாடகைக்கு உண்டு.**
தொடர்பு: 0777150931
(105595)

## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரையுள்ளது)
### கேள்வி கோரல்
### இடிபாடுகளினையும் பழைய கட்டடத் தொகுதிகளினையும் உடைத்து அப்புறப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரையுள்ளது) கட்டடத்தின் இடிபாடுகளையும், பழைய கட்டடத் தொகுதிகளினையும் உடைத்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் இயந்திரத் தளபாட வசதிகளைக் கொண்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

இதில் பங்குபற்ற விரும்புவோர் 420, ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக மகாத்மாகாந்தி வீதியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் பகல் 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலான நேரத்தில் கூறல் ஆவணங்களினை ரூபா 200/=இனை மீளப் பெற முடியாத பணமாகச் செலுத்தி 15.11.2010ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளவும்.
கேள்வி கோரல் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதி: 19.11.2010 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்னர்.
மேலதிக விவரங்களுக்கு எமது மதியுரைஞருடன் கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

**உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரை அகம்,**
08, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
**முகாமைத்துவப் பணிப்பாளர்,**
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரையுள்ளது).
(105834)

# West End College London
Enlightening the Future



## யாழ் நகரில் IELTS இன்றி SPOT ADMISSIONS மூலம் UK இல் உயர் கல்வி

| | | |
|---|---|---|
| இடம் : | Green Grass Hotel & Restaurant | 33, Aseervatham Lane, Hospital Road, Jaffna. |
| | COLOMBO | 4, IBC Road, Wellawatte, Colombo 6. |
| திகதி : | 20th November 2010 | |
| நேரம் : | காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை | |

- Tier 4 'A' grade college in central London (UK)
- Strong tutorial and study support
- State-of- the-art learning facilities
- Competitive course fees
- Guaranteed progression to Coventry University London Campus

Coventry University London Campus

* Terms and conditions apply

**For appointment please contact : 0777-761346**

**VISA** பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் **இலவசம்**

■ **Undergraduate and postgraduate qualifications in:** Business Management, Marketing, Financial Management, Human Resource Management, Legal Studies, Administrative Management, Travel Tourism & Hospitality Management and IT.

**flex Institute**
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346 E-mail: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)

**West End College London**
140- 148 Borough High Street
London, Se1 1LB, United Kingdom
Tel: +44 (0) 207 403 9300
Email: enquiries@w-e-c-l.co.uk

**www.w-e-c-l.co.uk**

FLEX Graphic

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணையாரை திருத்திய ஏழைப்பெண்

பண்ணையார் பெரிய பணக்காரன். பணம் நிறைய இருந்தவரிடம் இரக்க குணம் சிறிதளவு கூட இல்லை. ஏழை, எளிய விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைச்சல் சரியாக இல்லாத நேரங்களில் பண்ணையாரிடம் வட்டிக்குக் கடன் வாங்கி தங்கள் குடும்பத்தை நடத்தி வந்தனர். முதலையும், வட்டியையும் குறித்த காலத்தில் செலுத்த முடியாத ஏழை விவசாயிகள் பண்ணையார் பிடியில் சிக்கித் தவித்தனர். பண்ணையார் தன்னிடம் வட்டிக்குக் கடன் வாங்கிய விவசாயிகளின் நிலத்தை ஏதாவது ஒரு வழியில் ஏமாற்றி, தன்னுடைய நிலத்துடன் சேர்த்து வந்தார்.

பண்ணையாரின் மனைவி நல்லெண்ணம் கொண்டவள். தன் கணவனிடம் ஏழை எளியவர்கள் தங்கள் வியர்வையை நிலத்தில் சிந்திக் கிடைக்கும் பணத்தை அவர்கள் வயிற்றெரிச்சலோடு வாங்கி சேமிப்பது மிகப் பெரிய பாவம் என்று கூறி இனி மேலாவது ஏழை எளியோர்களை கஷ்டப்படுத்தாதீர்கள் என்று அறிவுரை கூறினாள். ஆனால் அவன் தன் போக்கிலே நடந்தான்.

ஒரு ஏழை விவசாயியின் மனைவி பண்ணையாரிடம் கடன்வாங்கி தன் மகளின் திருமணத்தை நடத்தினாள். வாங்கிய கடனுக்கு முதலையும், வட்டியையும் கொடுக்க முடியாமற் போனது. பண்ணையாரிடம் சிறிது நாள் அவகாசம் கேட்டாள். பண்ணையார் அப்பெண்ணின் நிலத்தை தனதாக்கி கொண்டார். அவளால் தாங்கிக் கொள்ள முடியாததால் அழுதாள், அவள் பண்ணையாரிடம் தன் நிலத்தை திருப்பித் தரும்படி கெஞ்சினாள். ஆனால் பண்ணையாரோ அவளை விரட்டி விட்டான். அவள் தன் மனதைத் தேற்றிக் கொண்டு, ஐயா இந்த பரந்த நிலத்திலிருந்து ஒரு கோணிப்பை மண் எனக்கு தரக்கூடாதா என்று கேட்டாள். அதற்கு அந்த பண்ணையார் சம்மதித் தார். மண்ணை நிரப்பினாள். பின் அதன் வாயைக் கட்டினாள். விவசாயியின் மனைவி ஐயா இம் மூட்டையை என் தலையில் ஏற்றிவிடுங்கள் என்றாள். பண்ணையாரோ அம்மூட்டையை அவளின் தலையில் ஏற்ற பெரிதும் சிரமப்பட்டான்.

அப்பொழுது அவள் கூறினாள் ஐயா நான் வயிற்றெரிச்சலோடு இந்த நிலத்தை உங்களுக்குக் கொடுத்தேன். நீங்கள் என்முழு சம்மதம் இல்லாமல் என் நிலத்தை அபகரித்து கொண்டீர்கள். இந்நிலப்பரப்பு உங்களுடைய பாவமூட்டை இந்த சிறிய மூட்டையை என்தலையில் ஏற்ற எவ்வளவு சிரமப்படுகிறீர்கள். இம்முழு பாவங்களையும் எப்படி சுமக்கப் போகுவீர்கள் என்று தெரியவில்லை என்றாள்.

இதைக் கேட்ட பண்ணையார் தான் செய்த தவறுகளை உணர்ந்து அப்பெண்ணிடம் மன்னிப்புப் கேட்டுக் கொண்டதுடன் அவளது நிலத்தையும் திருப்பிக் கொடுத்தான்.

றெ.விஜிந்திரா தரம் - 6A I.C.M.V
இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்.

## காற்றே



நீ தொட்டால் தென்றல்
வீசினால் புயல்
நுகர்ந்தால் மணம்
எதிர்கொண்டால் பயணம்
சிரித்தால் பூ மலரும்
சீறினால் தீ பரவும்
உன் ஸ்பரிசமே என் உறக்கம்
உன் சுவாசமே என் உயிர்
நீ எதுவாயிருப்பினும்
எனக்குத் தேவை
உன்னில் தூய்மை

இ.அபிநயா 9
யா/கைதடி. முத்துக்குமாரசுவாமி
மகா வித்தியாலயம்.

## எழுத்துக்களின் குணங்கள்



மயக்கும் எழுத்து - பூ
பறக்கும் எழுத்து - ஈ
பல் இழிக்கும் எழுத்து - ஹி
அழைக்கும் எழுத்து - வா
அனுப்பும் எழுத்து - போ
அலறும் எழுத்து - ஆ
அதிகார எழுத்து - ம்
குறிக்கும் எழுத்து - நீ
வெறுக்கும் எழுத்து - சீ

ஜெ. தரணிகா, தரம் - 5A,
யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்
மிஷன் வித்தியாலயம்

## பொது அறிவு

1. தேசியக்கொடி இல்லாத நாடு - மாசிடோனியா
2. தேசிய தினம் இல்லாத நாடு - இங்கிலாந்து, வத்திக்கான்
3. 1001 இரவுகள் என்ற கதைகள் விளங்கிய நாடு - அரேபியா
4. பின்நோக்கி பறக்கக்கூடிய பறவை- ஹம்மிங்பேர்ட்
5. எந்த நிற மலருக்கு மணம் அதிகம் உண்டு - வெள்ளை
6. புதிய உலகம் என அழைக்கப்படும் நாடு- அமெரிக்கா

பு.சஜீவனா,
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி






ஜெ.துஷாரா தரம் - 6C,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



ந.அரவிந்தன் தரம் -2C,
யா/இந்து ஆ.பா.



தெ.விமல்ராஜ் தரம் -8,
அமெரிக்கன் மிசன்
தமிழ் கலவன் பாடசாலை.



ம.சுலோஜனா தரம்-4C,
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.



ஜெயக்குமாரன் வைஸ்ணவன்
தரம் -9C,
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.



ந.கேசவன் தரம் -1F,
யா/கு.ஆரம்பப் பாடசாலை.



மு.சுமித்திரன் தரம் - 7,
யா/மட்டுவில் தெற்கு,
அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன்
பாடசாலை



இ.அபிநயா தரம் - 4,
யா/கைதடி முத்துக்குமாரசாமி
ம.வி.




## உங்களுக்கும் பரிசில்கள்... விடை தெரியுமா?82

1. இவ்வாண்டில் பெண்களில் அதிகம் சம்பாதிப்பவர்கள் பட்டியலில் இடம்பிடித்தவர் யார்?
2. தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய மசூதி எங்கே உள்ளது?
3. யாழ். மாவட்டத்தில் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணை எப்போது நடைபெற்றது?
4. ஒட்டகத்தின் வர்ணனைப் பெயர் என்ன?
5. மிகவும் உயரமான மலைகளில் வாழக்கூடிய அபூர்வப் பறவை எது?

### உங்களுக்குத் தெரியுமா? 80 இற்கான விடைகள்

1. முன்னாள் நீதிபதி வீக்கிரமராஜா
2. நாடாளுமன்றத் தேர்தல் 7ஆம் திகதி
3. மன்னார்.
4. 2,000 யூரோ
5. பிரதமர் தொம்ஸன்

### விடை தெரியுமா?

தெரிந்தால் 21.11.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### பரிசுபெறுவோர் விபரம்

01. ஹம்ஷா பற்பராசா 8 C
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி
02. தயூரன் 7 G
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
03. சு. நிலக்ஷிகா
ஏழாலை மேற்கு, சைவ சன்மார்க்க வித்தியாசாலை
04. வி. சோபிதன் 8 B
சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:- 'சிறுவர் கதிர்', உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 138

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | |
| 6 | | | | 7 | | | |
| | | 8 | 9 | | | 10 | 11 |
| 12 | 13 | | | | 14 | | |
| 15 | | 16 | | | | 17 | |
| | 18 | | | | 19 | | |
| 20 | | | | 21 | | 22 | |
| 23 | | | 24 | | | | |

அனுப்புபவர் பெயர் :..........................................

விலாசம் :..........................................

..........................................

கையொப்பம் :..........................................

### இடமிருந்து வலம்

1. கூட.
4. குளிர்மை/பசிய தன்மை.
6. தலையைப் பாதுகாப்பது
7. தீமை அல்ல.
8. ஆள்களை இதில் வைத்துத் தூக்கிச் செல்வர்.
10. பரத்தைப் பெண்.
12. பிரி.
14. நிதியோடு தொடர்புடைய நிறுவனம்.
15. மடல்/கடிதம்.
17. மலை/குன்று.
18. காலில் பத்து, கையில் பத்து.
20. தேங்காய் மட்டை.
21. அந்தரப்படல்.
23. திக்கு.
24. சுயதேவையைப் பூர்த்தி செய்தல்.

### மேலிருந்து கீழ்

1. அம்பிகாபதி மனம் கவர்ந்தவள்
2. வலிமை/பலம்
3. இறுதி
4. பல என்பதைக் குறிக்கும்.
5. பாரம் தாங்குவது
7. ஆபரணம்
9. இது வருவது குடல் பெருப்பதால் என்பர்
11. குகை ஓவியம் உள்ள இடம்
13. மரங்களில் ஒட்டி வளருவது
16. தோல் வாத்தியம் /பேரிகை போல முழங்குவது
19. அவதானி
20. மூடை
21. உயர்திணை, ஆண்பால், படர்க்கை, ஒருமை விகுதி இது.
22. வரி.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 137**

நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 24.11.2010 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 138 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 28 .11.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 136 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சிவதனுசு. (5)மாதா. (7)தடம். (8)பகர்வு. 10)பருத்தி. (11)பரிதி. (13)திரைதல். (15) ரசி. (16)கூரை, (17)கட.(18) தகுதி. (20)கரம்குவி.(22) கண்டி.(23)வில்லன்.

### மேலிருந்து கீழ்

(1)சிதம்பரம். (2)வட. (3) தம்பதி.( 4) சுபத்திரை. (5) மார். (6)தாவுதல். (9)கதிரை.(12)ரிசி. (14) தரகு. (16) கூடம். (17) கரடி. (18) தவில். (19) திறன். (20) கண். (21)குவி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 136 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு **சிவராசா காண்டீபன்,** கேணிக் கிளாற்றடி ஒழுங்கை, துன்னாலை கிழக்கு, கரவெட்டி.

2 ஆம் பரிசு **இ.சுமதி,** இலக்கம் 165, அரசடி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு **க.நல்லதம்பி,** பாடசாலை வீதி, துணைவி, வட்டுக்கோட்டை.

4 ஆம் பரிசு **சந்திரராஜ் கோபிகா,** அரசினர் வைத்தியசாலை விடுதி, குருநகர்.

5 ஆம் பரிசு **கல்பனா தேவகரன்,** கந்தசாமி கோவிலடி, நீர்வேலி தெற்கு நீர்வேலி.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **வீ.என்.பரமலிங்கம்,** இல.37, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்

(2) **சுபாகா ஆனந்தமயில்,** இல 78, கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

(3) **எஸ்.பரமேஸ்வரன்,** கற்பொக்கனை, உடுவில் , சுன்னாகம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத் தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப் பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும்.

# வீரத் தமிழ்....

( 13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியணைத்தான்.

" வெற்றியோடு வாருங்கள்... அல்லது வீர மரணத்தோடு வாழுங்கள்" என்று கூறிவிட்டு ஓவெனக் கதறியழுதாள். கண்ணீர் பெருகியது.

"மானவீரம் இச்சொற்களில் மணக்கிறது. மறவர்குல மங்கை நீதான்." அவன் இப்படிச் சொன்னான். அவன் பிரியமுடியாமற் பிரிந்தான். அப்பொழுது வானம் வெடித்து மழை பொழிந்தது. சொக்கம்மாவின் சிந்தனை நாலா பக்கங்களிலும் வட்டமிட்டது.

ஆங்கில கும்பினி ஆதிக்க வெறியர்களுக்கும் வீரபாண்டிய கட்டப் பொம்மனுக்கும் போர்! போர்! போர்! போர்ப்படைகள் போர்க்களத்தில் போரிடுகின்றன. எங்கும் செங்குருதிப் போராட்டம். சாகும் சடலங்களின் சா ஓலம்; கதறல்;கரகரப்பு.

கும்பினிப் பட்டாளத்தின் தளபதி லெப்டினன் காலின்ஸ் தலைமையில் யுத்தம் மறுபுறம். " வீரபாண்டியன் வாழ்க!" என்ற வாழ்த்தொலி வானை முட்ட தன்மானத் தமிழர் கூட்டம் போரில் நான் முந்தி நீ முந்தி என்று முண்டி அடிக்கிறது.

" ஆ...! ஊ...! ஐயோ...!" மரண ஓலம் அங்கு எங்கும் எதிரொலிக்கின்றது. யுத்தம் தலைகால் தெரியாது மிக உக்கிரமாக நடக்கிறது. வெள்ளைத் தேவனின் வீர முழக்கம் அந்த யுத்த களத்தில் முழங்குகின்றது.

" செந்தமிழ் நாட்டுச் செங்குட்டுவர்களே! சேர பரம்பரையினரே! பாண்டியனின் வீரர் திருக்கூட்டத்தினரே! முன்வைத்த காலைப் பின்வைக்காது மேலும் மேலும் முன்னேறுங்கள்! மாளிகைப் பொருள்களில் ஒரு சிறு பொருள்களாயினும் எதிரிகள் வசம் சிக்கிவிடாது காப்பாற்றுங்கள். கடைசித்துளி இரத்தம் உங்கள் உடலிலிருந்து கீழே சிந்தும் வரை போராடுங்கள். உலகத்தில் உன்னதமாக வாழ்ந்தவர்கள் நாம். பிறருக்கு புறமுதுகு காட்டி ஓடாத பரம்பரையினர் நாம். முடியுடை மூவேந்தர்களின் வீர இரத்தம் ஓடும் வீரர்கள் நாம். கடல் கடந்து வாணிபம் செய்தவர்கள் நாம். கப்பல் ஓட்டியவர்கள் நாம். பர்மா தேசத்தைக் கைப்பற்றி ஆண்ட பரம்பரையினர் நாம். கங்கைக் கரையிலே, கடாரத்திலே, இமயத்தின் விளிம்பிலே தமிழ்க் கொடி நாட்டித் தலை நிமிர்ந்து வாழ்ந்த தமிழ்க் குலத்தைக் காப்பாற்றுங்கள். இப்பொழுது உங்கள் பொறுப்பு மகத்தானது.

" பிறந்த பொன்னாட்டைப் பிந்தி வந்தார் ஆட்சிசெய்ய நாம் அடிமைகளாக வாழக்கூடாது. அடிமை வாழ்வு தமிழன் அகராதியிலேயே காணக்கிடையாது. காட்டுங்கள் உங்கள் கட்டுப்பாடான வீரத்தை. வெட்டி வீழ்த்துங்கள் வெள்ளையர் பட்டாளத்தை. வெற்றி நமக்கே!"

அப்பொழுது ஒரு இளைஞன் வெள்ளையத் தேவன் முன் நின்றான்.

"அடே! நீயார்? தன் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் கயமைத்தனத்தின் சின்னமான எட்டயபுரத்து எட்டப்பன். உளவாளா?

அந்த இளைஞன் வீராவேசம் கொண்ட வெள்ளையத்தேவன் முன் மோதிரமொன்றை நீட்டினான். மோதிரத்தைப் பார்த்த வெள்ளையத்தேவன் வியப்புற்றான்.

தகப்பன் கட்டப்பொம்மன் அவனுக்களித்த மோதிரம் அது. அவன் அதைத் தன் ஆருயிர்க் காதலி சொக்கம்மாவிடம் தன் அன்பின் சின்னமாக அன்பளிப்புச் செய்தது.

" ஆ! என் சொக்கம்மாவா உன்னை அனுப்பினாள்?" என்று வாஞ்சையுடன் கேட்டு மோதிரத்தை வாங்கினான்.

" ஆம் சொக்கம்மா தான் அனுப்பினாள். போர்க்களத்திலிருந்து உங்கள் வெற்றிச் செய்தியையோ, மரணச்செய்தியையோ முதன்முதல் கொண்டு செல்லும் பொறுப்பில் இருக்கிறேன்" இந்த வேளையில் கோட்டை தகர்க்கப்படுவதைக் கண்ட வெள்ளையத்தேவன் " தம்பி! இப்பொழுதே ஓடு கணமும் தாமதிக்காதே! கோட்டை இடிகிறது.

கடைசி மூச்சு உள்ள வரை போராடத் துணிந்தோம். மன்னரிடம் சென்று கோட்டையைவிட்டு வெளியேறும்படி செய்தி சொல். இந்த மோதிரத்தை அவரிடம் கொடு. ஓடு ஓடு..." ஆவேசமாக அனல் கக்க கத்தினான்.

இளைஞன் ஒரே ஓட்டமாக ஓடினான். போர் மேலும் மேலும் மோசமான கட்டத்தை அடைந்தது.

" ஆ..." என்று ஒரு அலறல். வெள்ளைத் தேவன் இடியிடித்தாற்போற் சிரித்தான். அப்படி 'ஆ' என்று ஓலமிட்டு உயிர் பிரிந்தவன் யார்? அவன்தான் லெப்பிடினண்ட் காலின்ஸ். வெள்ளையத் தேவனின் கூரிய கத்தி அவனுயிருக்கு இறுதி தேடியது.

அவன் சாவில் மகிழ்ந்திருந்த போது " ஐயோ! அம்மா" என்று அவன் வாய் குழறியது. அவன் மார்பில் இரத்தம் வடிந்தது. அப்பொழுது "ஐயோ! அத்தான்" இப்படிக் கேட்டது ஒரு குரல்.

" ஆ! என் அருமைச் சொக்கம்மாவா? நீ இளைஞனாக மாறுவேடத்தில் வந்தாய். செய்தியை மன்னருக்குச் சொன்னாயா கண்ணே?"

" மாமன்னர் வெளியேறிவிட்டார்" இதைக் கூறிவிட்டு விம்மி, விம்மி அழுதாள். அவனின் இதய கீதம், இன்பநாதம் சொக்கம்மா.

"இப்போது தான் அமைதி ஏற்பட்டது. என் இலட்சியம் நிறைவேறியே தீரும். தமிழ் நாட்டில் எங்குமுள்ள பாளையக்காரர்களை ஒன்று திரட்டி தமிழகத்தை விட்டே வெள்ளையரை விரட்டுவார் மன்னர். வாழ்க வீரபாண்டியன்! வாழ்க தமிழ்நாடு!" அவன் ஆத்மா அமரத்துவமானது.

"ஐயோ! அத்தான்! ஐயோ! அத்தான்!" கண்ணீரும் கம்பளையுமாகச் சொக்கம்மா காட்சி தந்தாள். அழுதாள்; புரண்டாள்; அரற்றினாள். குமுறும் எரிமலையானாள். அவள் கண்களில் அனல் கக்கியது. மறுகணம் அவள் வீரத்தின் திருவுருவானாள். வெள்ளையரைத் தமிழ் நாட்டிலிருந்தே [illegible] அவள் உள்ளத்தில் புத்துயிர் ஊட்டியது. சிரித்தாள். அந்தப் போர்க்களமே அதிரும்படி சிரித்தாள். பின் சங்கற்பம் செய்தாள்.

" ஆதிக்க வெறிபிடித்த வெள்ளையரே! வாணிபம் செய்ய வந்து இங்கு வதியும் தமிழ் மக்களை அடக்கி ஆளத்துணியும் ஆங்கிலேயரே! தமிழராகத் தப்பிப்பிழைத்து வெள்ளையருக்குத் தன் இனத்தைக் காட்டிக் கொடுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் கூலிப்படையே! ஒரு வெள்ளையத்தேவனுடன் வீரத்தமிழரது வீராவேசப் போர் முடிந்துவிடவில்லை. தமிழ்நாடு- தமிழர் தாழ்ந்துவிடவில்லை. தமிழர் மானவீரம் வீழ்ந்துவிடவில்லை. தமிழர் தோல்வி கண்டயறியாத் திருக்கூட்டத்தினர். ஆயிரமாயிரம் வெள்ளைத்தேவர் உண்டிந்த மண்ணில் ஒரு வெள்ளையத்தேவனின் மரணத்தைக் கண்டு வெற்றிச் சிரிப்புச் சிரிக்கும் கும்பினிப்பட்டாளமே! இந்த நாட்டிலுள்ள மூன்றுகோடித் தமிழினத்தின் மூலபலத்தை எண்ணிப் பாருங்கள்! உணர்ந்து பாருங்கள். எட்டுத் திக்கும் வெற்றி முரசு கொட்ட பாராண்ட தமிழர் பரம்பரை உங்களை நிச்சயம் கருவறுக்கும். கட்டியடிக்கும். மறத்தை மாய்த்து அறத்தை வளர்க்க - வெள்ளையனின் ஆணவமூட்டறுக்க- ஆதிக்க வெறியை வெட்டி வீழ்த்த எங்கள் கண்ணகி குலம் இதோ விழித்திட்டது! வாளேந்திவிட்டது!" அவளும் போரிற் பங்கெடுத்தாள். பெண்மையைப் பேணிக் காத்து வளர்க்க முன்னின்று போர் செய்தாள். ஈற்றில் அவள் பொன்னுடலில் ஊறு ஏற்பட்டது. அவள் உடலில் வெட்டுக் காயங்கள். குபீரெனச் செங்குருதி பாய்ந்தது.

" அத்தான்....!"

"அத்தான் .....!"

" இதோ நானும்.......!"

அழுது துடித்தாள். அனலிற் புழுவானாள். காதலின் அமரத்துவம். நாட்டின் மேற்கொண்ட பாசத்தின் பிரதிபலிப்பு அவள். காதலன் சென்ற இடத்தை நாடி காதலியின் ஆத்மாவும் கணப்பொழுதில் சென்றடைந்தது.

## சீதையின்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூட்டச் செய்து அதில் பாய்கிறாள். மனம் வாக்கு காயத்தால் நான் குற்றம் உடையவளானால் அக்கினி தேவனே என்னை எரிக்கட்டும் என்றாள்!

அக்கினி அவளை எரிக்காமல் அகல விலகிப் போனது. அவள் தலையில் சூடியிருந்த மலர் தானும் வாடவில்லை என்கிறார் கம்பநாட்டார்!

சீதையின் கற்புக் களங்கப்படவில்லை என்பதை உலகுக்குக் காட்டவே (ஊரலருக்குப் பயந்து) அவ்வாறு செய்ய வைத்தேன் என இராமன் பின்பு கூறுகின்றான்.

இவ்வாறு சீதையின் அறக்கற்பின் திறன் அவளை இல்வாழ்க்கைக்குத் துணையான பெண்களின் மாண்புக்குச் சிறந்த ஓர் இலக்கிய நாயகியாக விளங்கச் செய்வதை உணர்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கும் கடிதங்களுக்கு அன்றன்றே பதில் அனுப்பும் நிர்வாக நடைமுறை மேற்கொள்ளப்பட்டவேளை அது

குறிப்பு:
யாழ்ப்பாணத்தில் தாம் கடமையாற்றிய வேளையில் தமது சிவில் நிர்வாகக் கடமைகளின்போது தாம் பெற்ற அனுபவங்கள் குறித்து லியனார்ட் வூலப் தாம் எழுதிய நூலில் விவரித்துள்ள குறிப்புக்கள் இவ்வாரமும் தொடர்கின்றன.

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

நிர்வாக நுணுக்கங்கள் பலவற்றை எனக்குக் கற்றுக் கொடுத்தார். அரசாங்க அதிபர் சோம்பேறி என ஏற்கனவே கூறியுள்ளேன். நான் அரசாங்க அதிபரின் சோம்பேறித்தனத்திற்கு நேர் எதிரானவன் என்பதை அரசாங்க அதிபர் புரிந்துகொண்டார். இதன் காரணமாக தனது கடமைகள் அல்லது பொறுப்புகளில் பலவற்றை என்னிடம் ஒப்படைத்தார்.

பிறைஸ் கச்சேரிக்கு வரமாட்டார். வீட்டிலிருந்த படியே எல்லா வேலைகளையும் செய்விப்பார். அரசாங்க அதிகாரிகள் எல்லோரும் என்னைத்தான் அணுகுவார்கள் தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு. அரசாங்க அதிபரும் செயல்திறன் மிக்க ஓர் உத்தியோகத்தராக என்னைக் கருதினார். யாராவது அரசாங்க அதிபரைச் சந்திக்க விரும்பினால் அவர்கள் என்ன காரணத்திற்காக அரசாங்க அதிபரைச் சந்திக்க விரும்புகின்றனர் என்பதை எனக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

கச்சேரி முதலியார் உட்பட கிராமத் தலைவர்கள் யாராக இருந்தாலும் அரசாங்க அதிபரைச் சந்திக்க விரும்பினால் எனக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

நான் அரசாங்க அதிபரிடமிருந்து இரு பொன்னான ஆட்சிமுறைமைகளைக் (Golden rule) கற்றுக் கொண்டேன். முதலாவது சொல்ல வேண்டியதை ஒரே வார்த்தையில் தெளிவாகச் சொல்லி விடுவார். இரண்டாவது தனக்கு வரும் கடிதங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதமான கடிதங்களுக்கு கடிதம் கிடைத்த அன்றே பதில் எழுதி விடுவார். வினைத்திறனுள்ள ஒரு சிறந்த நிர்வாகக் கட்டமைப்புக்கு இது ஒரு சிறந்த அத்திபாரம் என நான் நம்புகிறேன். அத்துடன் நேரத்தை வீணடிக்காமல் தவிர்ப்பதற்கும் கவலையை இல்லாமல் செய்வதற்கும் இது உதவுகின்றது. திரு.பிறைஸ் தனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் இந்த இரு விடயங்களையும் கடைப்பிடித்தார். 1906 ஆம் ஆண்டு முதல் நானும் எனது வாழ்க்கையில் இந்த இரு விடயங்களையும் கடைப்பிடித்து வருகின்றேன்.

இலங்கையில் நான் புதிதாக எந்த அலுவலகத்திற்குப் போனாலும் அங்கு பத்துத் தொடக்கம் முப்பது வரையான கோவைகள் மேசையிலிருக்கும். இவற்றில் ஐந்து தொடக்கம் பத்து வீதமான கடிதங்கள் அன்றைய தினமே பதிலளிக்கக் கூடியவையாக இருக்கும். சாதாரணமாக இலங்கையில் ஒருவர் ஓர் அரசாங்க அலுவலகத்திற்குக் கடிதம் எழுதினால் அவரது கடிதத்திற்குப் பதில் கிடைப்பதற்கு ஒரு வாரம் முதல் பத்து நாள்கள் பிடிக்கும்.

நான் பிரதம எழுதுநரைக் கூப்பிட்டு இந்தக் கச்சேரிக்கு வரும் கடிதங்களுக்கு

ஆவணப் பெட்டகம் 18

அன்றையதினமே பதிலளிக்கவேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் வரும் கடிதங்களுக்கு அன்றையதினமே பதிலளிப்பது சாத்தியமற்றது. ஏனெனில் அவ்வளவு தொகையான கடிதங்கள் வருகின்றன என்றார். இந்த அலுவலகத்திற்கு ஒரு நாளைக்கு 500 கடிதங்கள் வருகின்றன என்றார்.

நான் தினமும் 500 கடிதங்களுக்குப் பதிலளித்தாலும், பதிலளிக்காமல் 500 கடிதங்கள் எனது மேசையில் தேங்கிக் கிடந்தன.

நான் பிரதம எழுதுநரையும் அழைத்துக் கொண்டு கச்சேரியிலுள்ள ஒவ்வொரு அறைக்கும் சென்று மேசைமேல் தேங்கிக் கிடந்த கடிதங்களைப் பார்த்து அவற்றுக்குக் கடிதம் கிடைத்த அன்றே பதில் அனுப்புமாறு உத்தரவிட்டேன். கண்டிக் கச்சேரியில் சுமார் நூறு எழுதுவினைஞர்கள் கடமையாற்றுகின்றனர். இவ்வாறு நான் மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழ், சிங்கள மக்களிடையே என்னை ஒரு கறாரான குடியியல் உத்தியோகத்தராகக் காட்டின.


ஆனால் நான் ஓர் உள்ளூர்ப் புரட்சியைச் செய்தேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

நான் மாதாந்தம் ஒவ்வொரு எழுதுவினைஞரின் மேசையையும் பார்வையிடுவேன் எனப் பிரதம எழுதுநரிடம் கூறினேன். எனது செயற்பாடுகளுக்கு தமிழ்- சிங்கள மக்களிடமிருந்து அங்கீகாரம் (Reputation) கிடைத்தது. ''எனது பதவிக்காலத்தில் கடிதம் கிடைத்தமைக்கான பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்ட அதே தினத்திலேயே மக்கள் கடிதத்திற்கான பதிலையும் பெற்றுக் கொண்டனர்.

### தாண்டவன்

எனது அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மத்தியில் நான் பிரபல்யமடைந்திருப்பேனென்று நான் நம்பவில்லை. அவர்கள் என்னை ஒரு கடினமானவனாகவும் தம்மைத் துரத்தி வேலை வாங்குபவனாகவும்தான் பார்த்தார்கள். ஆனால் சிறிது காலத்தின் பின் அவர்கள் எனது அணுகுமுறையை ஏற்றுக் கொண்டதுடன் எனது அணுகுமுறை தமது வேலையை இலகுவாக்குவதாகவும் கூறினர். எனது நிர்வாகத்திறமைக்குச் சாட்சியாக 1907 ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்குச் சென்ற போது முன்னணிச் சட்டத்தரணிகளுள் ஒருவரான வீ.காசிப்பிள்ளை எழுதிய கடிதம் சான்று பகர்கிறது. (வளரும்)

# அலட்சியப்படுத்தும் பல செடி, பூண்டு வகைகள் ஆயுள்வேத வைத்தியத்தில் முக்கியத்துவம் பெறுபவை





### விஷ்ணு கிராந்தி

வேறுபெயர் - விட்டுணுகரந்தை, மால்காந்தி, விஷ்ணுகரந்தை
தாவரவியற்பெயர்: Evolvulus alsinoides (இவொல்வுலஸ் அல்சினோயிடீஸ்)
குடும்பம்: Convolvulaceae (கொன்வொல்வுலேசியே)
சிங்களப் பெயர்: விஷ்ணு கிராந்திய
சமஸ்கிருதப் பெயர்: விஷ்ணு கிராந்தி

இது தரிசு நிலங்களிலும், வயல் வரப்புகளிலும் தானாவே உண்டாகும் சிறுபூண்டு, தனி இலைகள், பூக்கள் நீல நிறம், தனித்துக் காணப்படும். இதன் இலை,பூ, வேர், பட்டை அனைத்துப் பாகங்களும் மருத்துவத்தில் பயன்படுகின்றன. இவற்றைக் குடிநீர் செய்து குடித்துவர சுரம், முறைச்சுரம் கோழை, இருமல், வளிக்குற்றம் என்பன நீங்கும்.

இப்பூண்டுடன் சீரகம் சேர்த்தரைத்துப் பாலில் கலக்கி உண்ண நரம்புத் தளர்ச்சி நீங்கும்.

இப்பூண்டுடன் துளசியிலையும் சேர்த்துக் குடிநீர் செய்து பருகிவர செரியாமை, கழிச்சலோடு கூடிய சுரம் என்பன தீரும்.

### நந்தியாவட்டை

வேறுபெயர்: நந்தியாவர்த்தம்.
தாவரவியற்பெயர்: Ervatamia coronaria (எர்வற்றேமியா கோரோனேரியா)
குடும்பம் : Apocyanaceae (அப்போசயனேசியே)
சிங்களப்பெயர்: திவி கதுரு
சமஸ்கிருதப்பெயர் : நந்தி புஷ்ப
ஆங்கிலப்பெயர்: Pin- wheel flower plant.

''நந்திவட்டத்தொடு கொன்றை வளாவிய நம்பன்'' என்று திருநாவுக்கரசர் சிவபெருமானைப் பாடியுள்ளார்.

இது செடி வகுப்புக்குரியது. பல்லாண்டு வாழும். தனி இலைகள் எதிரடுக்கில் காணப்படும். பூக்கம் வெண்மை நிறம். ஒற்றைப் பூ, அடுக்குப் பூ என வகையுண்டு. ஒற்றைப் பூவே சிறந்தது.

இதன் பூவைக் குளிர்ந்த நீரில் ஊறவைத்து அதனால் கண்களைக் கழுவி வரக் கண்ணழற்சி, கண்ணோ, கட்காசம், நேத்திரப்புண், மண்டைக்குத்தல் முதலியன நீங்கும். வேரை வாயிலிட்டு மென்றால் பல்வலி தீரும்.

### குருந்த மரம்

வேறுபெயர் - காட்டு எலுமிச்சை, காட்டு நாரங்கம்,பெருங்குருந்து, குரவம், குரவு,குரா
தாவரவியற்பெயர்: Atlantia monophilla (அற்லான்சியா மொனோபைலா)
குடும்பம்: Rutaceae (ருற்றேசியே)
சிங்களப் பெயர்: அபசு
சமஸ்கிருதப் பெயர்: அடவி ஜம்பீர
ஆங்கிலப் பெயர்:Wild lime

குருந்தில் சிறு குருந்து, பெருங்குருந்து, மயிலடிக்குருந்து, பேய்க்குருந்து என்னும் வகைகள் உண்டு. குருந்த மர நிழலில் சிவபெருமான் குருவடிவாக எழுந்தருளித் தம்மை ஆட்கொண்டதை மாணிக்கவாசக சுவாமிகள் பின் வருமாறு பாடியுள்ளார். '' செடிகொள் வான் பொழில் சூழ் திருப்பெருந்துறையில் செழுமலர்க் குருந்தம் மேவிய அடிகளே அடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவே என்றருளாயே'' திருவெம்பா திருவிழாவில் குருந்த மரத்திருவிழா என்று சில ஆலயங்களில் தற்போதும் நடைபெறுகிறது.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

குருந்து சிறு மரவகுப்புக்குரியது. முட்களடர்ந்தது இது. மூன்று சிற்றிலைகளைக் கொண்ட கூட்டிலையாகும். ஆயினும் பக்கச் சிற்றிலைகள் அருகி தனி இலைபோல் காணப்படும். பூக்கள் வெள்ளை நிறம். காய்கள் உருண்டை வடிவாக அல்லது சற்று நீண்டவையாகவும் காணப்படும். அடிமரம் சற்று மஞ்சள் கலந்த வெண்ணிறமாகக் காணப்படும். இலை, பழம் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

இதன் பழச்சாற்றுடன் சிறிது வெடியுப்புச் சேர்த்துக் கரைத்து சொறி, சிரங்கு முதலியவற்றிக்குப் பூசிவர அவை மாறும்.

குன்மம், வாந்தியுடன் கூடிய வயிற்றுவலி என்பவற்றிற்குக் குருந்தம் பழச் சாற்றுக்குச் சிறிது உப்புச் சேர்த்து தினமும் மாலை வேளையில் 1 தேக்கரண்டி வீதம் பருகக் கொடுக்கலாம்.

பழத்தை ஊறுகாயாகச் செய்து உணவில் சேர்த்து வர செரியாமை, பித்தம் என்பன நீங்கும்.

இலைக் கொழுந்தை அரைத்து தோற் புண்களுக்குப் போட்டு வர மாறும்.



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்

## யாழ். மாவட்டச் செயலகம், சகல பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் என்பவற்றுக்கான வழங்குநர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்- 2011

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கும், சகல பிரதேச செயலகங்களுக்கும் / உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள்/ ஒப்பந்த காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பவற்றிடமிருந்து 2011ஆம் ஆண்டுக்கான பொருள்கள், சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக் கிளை, சகல பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் 15.11.2010 தொடக்கம் 25.12.2010 வரை அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை கடித உறையின் (9''x4'') இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள்/ சேவைகள் பதிவு செய்தல்- 2011" எனக் குறிப்பிட்டுத் தபாலில் அனுப்புவதாயின் "அரசாங்க அதிபர், களஞ்சிய நலன்புரிக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் களஞ்சிய நலன்புரிக் கிளையிலும் 27.12.2010இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்ப வேண்டும்.

### வழங்கல்கள்

01. காகிதாதிகள், எழுதுபொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள்.
02. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு).
03. கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள்/ போட்டோக் கொப்பி இயந்திரங்கள்/ தொலைபேசிகள்/ தொலைநகல்கள்/ தட்டச்சு இயந்திரங்கள்/ இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலகத் தளபாடங்கள்.
04. இயந்திரக் கருவிகளும் அதன் உதிரிப்பாகங்களும்.
05. ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள்.
06. மின்சாரப் பொருள்களும் அதன் உதிரிப்பாகங்களும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களும்.
07. கட்டட, இரும்புப் பொருள்கள், தீந்தை, வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருள்களும்.
08. தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பங்கள், மொப்பர்கள், வைப்பர்கள்.
09. கார்பிக், விம், பினோல், சவர்க்காரம், மாபிள் அசிட், குளோறின், எயார் பிறஷ்னர்கள் (Air Fresher).
10. நீர் இறைக்கும் மோட்டர்கள், அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உறுப்புக்களான பைப், பென்ட், சொக்கற் வகைகள்.
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர், டியூப்புகள், பற்றரிகள்.
12. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களான கதிரை, மேசை போன்ற பொருள்கள்.
13. பால்மா வகைகளும் பிளாஸ்ரிக் குவளை வகைகளும். (Nescafe Premix, Nestea & Disposal Cups, Etc.).
14. கட்டட மற்றும் வாகன வளி பதனாக்கி (A/C)
15. தோல் வகை உற்பத்திப் பொருள்கள்.
16. விளையாட்டுப் பொருள்களும் அதனுடன் தொடர்புடைய பொருள்களும்.
17. கல், மண் வகைகள், உற்பத்தி செய்யப்பட்ட கட்டடப் பொருள்கள்.
18. உலர்மின்கலப் பொருள் வகைகள்.

### சேவைகள்/ திருத்தங்கள்

01. கட்டட நிர்மாண மற்றும் கட்டட வேலைகள் மற்றும் சேவைகள். (Services).
02. மோட்டார் வாகனங்கள் திருத்த வேலை/ சுத்திகரிப்பு வேலைகள், பற்றரி திருத்த வேலைகள். (Services).
03. அச்சிடுதல், இறப்பர் ஸ்ராம்புகள், திகதி ஸ்ராம்புகள்.
04. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும் (கணினிகள், கல்குலேற்றர்கள்/ றோணியோ இயந்திரங்கள்/ போட்டோக்கொப்பி இயந்திரங்கள்/தொலைநகல்கள்/ தட்டச்சு இயந்திரங்கள் போன்றன).
05. குளிர்சாதனப் பெட்டிகள், எயார்கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்.
06. மர, உருக்குத் தளபாடத் திருத்த வேலைகள்.
07. பெயர்ப் பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் (3D உட்பட) செய்தலும்.
08. உள்ளகத் தொலைபேசித் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும். (Services).
09. மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தலும் மீள்முறுக்குதலும். (Winding).
10. மின்சார வயறிங் வேலைகள், கணினி வலைப்பின்னல் வேலைகள் மற்றும் சேவைகள்.
11. நீர் வழங்கும் குழாய்கள் பொருத்துதல் மற்றும் திருத்துதல்.

### பதிவு தொடர்பானவை

மாவட்டச் செயலகத்தில் பொருள்கள், சேவைகள் தொடர்பாகப் பதிவுகளை மேற்கொள்பவர்களிடம் இருந்தே 2011ஆம் ஆண்டிற்கான பொருள்கள் சேவைகளுக்கான கூறுவிலைகள் பெறப்படும் என்பதால் மாவட்டச் செயலகங்களுக்கோ, சகல பிரதேச செயலகங்களுக்கோ, உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கோ, மாவட்டச் செயலகத்துடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கோ பொருள்கள், சேவைகள் வழங்க விருப்பமுடையவர்கள் மாவட்டச் செயலகத்தில்/ பிரதேச செயலகத்தில்/ உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் விண்ணப்பத்தினைப் பெற்றுப் பதிவுகள் மேற்கொள்வதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

திருமதி இமெல்டா சுகுமார்,
மாவட்டச் செயலரும், அரசாங்க அதிபரும்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

# கட்டைவேலி மெதடிஸ் பரிசளிப்பு விழா

தென்மராட்சி, நவ.14

கரவெட்டி, கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் பரிசளிப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கோ.புஷ்பாகரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சிவலிங்கராசா முதன்மை விருந்தினராகவும் கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி த.தபேந்திரராஜா, கட்டைவேலி மேதடிஸ்த திருச்சபை வண.பீதா ரி.தேவகுமார், பருத்தித்துறை காணிப் பதிவக பொதுமுகாமைத்துவ உதவியாளர் க.இளங்கீரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (204- 207)

The World Of Hayleys Since 1878

பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கும் பிரபல ஹேலீஸ் காட்சியறைக்கு கீழ்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விற்பனை உதவியாளர் (Customer Service Assistant) - 02

தகைமை:-
★ க.பொ.த (உ/த)- சித்தி (சந்தைப்படுத்தல் தொடர்பான கல்வியும் அனுபவமும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்)
★ வயதெல்லை 18முதல் 35வரை
★ கணினி அறிவு பெற்றிருத்தல் அவசியம்
★ தமிழ், ஆங்கிலத்தில் தேர்ச்சியும், சிங்களம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்
★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

உங்கள் விண்ணப்பங்களை விரைவாக நேரிலோ அல்லது தபாலிலோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

முகாமையாளர்
ஹேலீஸ் காட்சியறை
47 1/14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
www.hayleys.com T.P: 021 2221292/ 077 3122062

AMCO

அறிமுகமாகிறது... அம்கோ வெயிட் கெயின்
எடையைக் கூட்டுவதற்கு இலகுவான வழி!



அம்கோ வெயிட் கெயின் என்பது உங்கள் உடல் இழையங்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை உள்ளடக்கியதாக மோல்ட் சாற்றிலிருந்து விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட புரதச்சத்து நிறைந்த பாலாகும். அது லைசின் பதார்த்தம் கொண்டு செறிவூட்டப்பட்டுள்ளதால், உடலின் எடையை அதிகரிக்கும் ஆற்றலை அல்லது புரத உள்வாங்கலை (புரத வினைத்திறன் விகிதம்) முன்னேற்ற உதவும். சமபோஷாக்கான உணவுடன் அம்கோ வெயிட் கெயின் எடுத்தால் உங்கள் எடையை அதிகரிக்கலாம்.

சிறுவர்களுக்கும் வளர்ந்தோருக்கும் 450கி. டின்களில் கிடைக்கின்றது.

சிபாரிசு செய்யப்பட்ட அம்கோ வெயிட் கெயின் அளவு ஒவ்வொரு உணவு வேளைக்கும் 1 மணிநேரம் கழித்து ஒரு கிளாஸ் சூடாக அல்லது குளிரூட்டிப் பருகவும். (நாள் ஒன்றிற்கு குறைந்தது 3 கிளாஸ்கள்)

இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளவை தகவலுக்காக மட்டுமே. எப்போதும் உங்கள் வைத்தியரின் ஆலோசனையை நாடவும்.

எடுப்பான தோற்றம். நலமான வாழ்வு.
அம்கோ வெயிட் கெயின் மூலம் உங்கள் எடையைக் கூட்டுங்கள்

AMCO
weight GAIN




ஏக விநியோகஸ்தர்:
சூரி ட்ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
இல. 6, பங்களாவத்தை வீதி, மாபோல, வத்தளை, இலங்கை.
+94 11 4810251 ஈ-மெயில்: info@suritrading.com
www.suritrading.com

அறிமுக விலை
சிறுவர் ரூ.980/=
வளர்ந்தோர் ரூ.1,200/=

Gracewinds Advertising

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளக்கரைகளில் அத்துமீறிக் குடியேறுவதால் யாழ்ப்பாணம் மற்றொரு கச்சதீவாகும் ஆபத்து


கோயிலும் குளமும் தமிழர் பண்பாட்டு மரபும் அவர்கள் நாகரிகமும்கூட! யாழ்ப்பாணத்தில் ஏன் வடபகுதியிலேயே பெரும் மலை களோ ஆறுகளோ கிடையாது. மலையென்றால் கீரிமலையும், ஆறு என்றால் தொண்டைமானாறும் தான்! ஆறுகள் இல்லாததால் வடக்கு பாலைவனமாகக் கிடந்து விடவில்லை. ஆழக்கிணறு தோண்டியும், ஊருக்கு ஊர் பள்ளம் தோண்டியும் மழை நீரைச் சேமிப்பதற்கு முற்காலத்திலேயே வழிகாட்டியவன் வடக்குத் தமிழன். ஊரிலுள்ள குளங்கள் ஒவ்வொன்றிற்கும் மற்றொரு குளத்துடன் கால்வாய் வழியாகத் தொடர்பிருக்கிறது. உதாரணமாக வடக்கேயிருந்தும், கிழக்கேயிருந்தும், மேற்கிலிருந்தும் கூட மழைக்காலத்தில் அங்கங்கேயுள்ள குளங்கள் நிரம்பிவழியும். நீர் கால்வாய்கள் வழியாக கன்னாதிட்டிக் குளத்தில் வந்து நிரம்பும். இக்குளம் விசாலமாக இருந்ததால் குடிமனைகளுக்கு வெள்ளத்தினால் பெரிய சேதங்கள் ஏற்படவில்லை. இதேசமயம் கன்னாதிட்டிக்குளம் நிரம்பிய பின் மேலதிகமாக வந்துசேரும் நீர் இக்குளத்திலிருந்து அகலமான கால்வாய்மூலம் கன்னாதிட்டி தென்பகுதி ஊடாக வண்ணான்குளம் போய் சேரும். வண்ணான் குளம் நிரம்பினால் அங்கிருந்து கால்வாய் மூலம் பழைய பஸ்நிலையமானாலென்ன, புதிய நிலையமானாலென்ன கஸ்தூரியார் வீதிக்குக் கிழக்குத் திசையில் செல்லும் கால்வாய் வழியாகப் பண்ணைக்கடலுக்குப் போய்ச் சேரும். இடையில் புல்லுக்குளத்துக்கும் சிறிது நீர் வந்து சேரும்.

இதெல்லாம் பல வருடங்களுக்குமுன் மட்டுமல்ல. சிலவருடங்களுக்கும் முன்னர் இந்த நிலை இன்று.

பெரியகடை என்று சொல்லப்படும் யாழ். நகரின் மத்திய பகுதியான கடைகள், சந்தைக் கட்டடத் தொகுதி, பஸ் நிலையம் ஆகியவை மக்கள் பெருக்கத்துக்கேற்ப விரிவடைந்திருக்கிறது. வண்ணான் குளமும் இந்தக் காலத்தெருவுக்குள்தான் இடம்பிடித்திருக்கின்றது.

தோட்டச் செய்கைக்கு ஆழக்கிணறு தோண்டி நீர் எடுத்தாலும் குளங்களில் நிரம்பும் நீரினால்தான் கிணறுகளில் நீர் ஊறும். மழை நீரைச் சேமியுங்கள் என்று தமிழ் நாட்டில் பெரும் பிரசாரமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இலங்கையிலும் மதவாச்சி, பதவியாப் பகுதிகள் ஊடாக பஸ்களிலோ வாகனங்களிலோ செல்பவர்கள் மழை நீரைச் சேகரிப்பதற்காகக் கொங்கிறீட்டினால் பெரிய குடம் போன்று அமைத்து அருகிலுள்ள கட்டடங்களில் விழும் மழை நீர் இக்குடங்களில் போய் விழக்கூடியவாறு பீலி அமைத்திருப்பதைப் பார்க்கலாம். மழை நீரைச் சேமிக்கிறார்கள். குளங்கள் வேறு!

வட பகுதி விவசாயிகளும் தோட்டச் செய்கைக்காரர்களும் மழையால் நிரம்பும் குளங்கரையோரமாயிருக்கிறார்கள். குளங்கள் பற்றி ஆய்வாளர்கள் ஆராய்ந்து அவற்றை தூர்வாரியும் கரையோரங்களில் அத்துமீறி குடியேறி ஆக்கிரமித்துள்ளவர்களை அகற்றியும்



பாதுகாப்பதற்கு வழிகாட்ட வேண்டியது இன்று மிக அவசியமும் அவசரமுமாகும்.

மகாவலி நீரை வடக்கே திருப்பவேண்டுமென்ற முழக்கம் சிலவருடங்களுக்கு முன் ஒலித்த போது அது இப்போதைக்கு நடைமுறைச் சாத்தியமில்லையென்றும் இங்கேயே எதிர்க்குரல் எழுந்தது.

இதற்கு யாரோ சிலர் பதிலளிக்கையில் மகாவலி நீரை வடக்கே செல்லும் வழியிலுள்ள குளங்களை நிரப்புவதன் மூலம் வடபகுதி விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்யலாமென்றும் இக்குளங்கள் வழியாக இரணைமடுக்குளத்துக்கும் மகாவலி நீரைக் கொண்டு செல்லலாமென்றும் சொன்னார்கள். இப்பொழுது மீண்டும் இரணை மடுக்குளத்திலிருந்து யாழ்.குடா நாட்டுக்குக் குடிதண்ணீர் விநியோ கிக் கலாம் என்றும் குரல் எழுந்திருக்கிறது.

இதற்கு முன் இருக்கும் குளங்கள் என்ன நிலையிலிருக்கின் றன என்பதைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

யாழ்ப்பாண நகரிலுள்ள பெரும்பாலான குளங்களின் கரையோரப் பகுதியில் முன்பு கொட்டில் போட்டுக் குந்தியவர்கள் இன்று வசதி யான கல்வீடு கட்டி மாநகரசபைக்கு வரியும் செலுத்தி மின் இணைப்பு வசதியும் பெற்று வாழ் கின்றனர். இவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக மாநகரசபை உறுப்பினர்களாக வருவதற்காக இந்த வசதிகளைச் செய்து கொடுத்தவர்கள் தொடர்ந்தும் அவர் களின் வாக்குகளை நம்பித்தானே இருக்கின் றனர்.

நகரின் மத்தியில் உள்ள வண்ணான் குளத்தின் அருகாக கஸ்தூரியார் வீதி பெரிய கடைத் தெருவிலிருக்கிறது. இப்பாதை ஒருவழிப் பாதையாக்கப்பட்ட போதிலும் மக்கள் போக்குவரத்துக்கும் வாகனங்கள் நிறுத்துவதற்கும் இடமில்லாமலும் பெரும் சிரமம் ஏற்பட்டது. இதனால் கஸ் தூரியார் வீதிப்பக்கத்தில் வாகனங்கள் தரிப்பதற்கு குளக்கரையில் ஒரு சிறு பகுதி ஒதுக்கப்பட்டது. இன்று குளத்தின் எல்லாப் பகுதிகளுமே நிரப்பப் பட்டு மேட்டு நிலமாகக் காட்சியளிக்கிறது. குப்பை கூழங்களு டன் சேலைகள் வெளுத்த இடத்தில் இன்று இக்குளத்தின் மத்தியில் கோவணத்துண்டு போல ஒரு சிறிய இடத்தில் மட்டும் சிரட்டையால் அள்ளக் கூடியதாகச் சிறிது நீரை விட்டு வைத்திருக்கிறார்கள். இங்கிருந்து பண்ணைக் கடலுக்குச் செல்லும் கால்வாயும் குப்பைகளால் அடைபட்டிருக்கின்றன.

கன்னாதிட்டிக் குளத்திலிருந்து வண்ணான் குளத்துக்கு வரும் கால்வாய் நீர் ஓடுவதற்கு இடமில்லாமல் குப்பை கொட்டும் இடமாக மாறியிருக்கிறது.

கன்னாதிட்டிக் குளக்கரையில் அத்துமீறிக் குடியேறி தமது உடைமையாக்கியவர்கள் எண்ணிக்கை அதிகம். இதனால் அதிக நீர்தேங்கி நிற்கும் குளம் இப்பொழுது பல பக்கங்களிலும் ஆக்கிரமித்ததால் ஒடுங்கிப்போயிருக்கிறது.

நகரின் மத்தியில் அழகான தடாகம் அமைப்பதற்கு வண்ணான் குளத்தை வைத்துத் திட்டம் போட்ட காலம்போய் யாழ்ப்பாண நகரில் குளங்களே இல்லாமல் போய்விடுமோவென்று அஞ்ச வேண்டியுள்ளது.

கன்னாதிட்டிக் குளத்துக்கு வடக்கிலும், கிழக்கேயிருந்து வரும் மழைநீர் நீராவியடிப்பிள்ளையார் கோயிலுக்குப் பின்புறமிருந்த பெரிய கேணியில் நிரம்பி அங்கிருந்து வீட்டுவளவுகளூடாக வந்த கால்வாய் கன்னாதிட்டிக் குளத்துக்கு வந்தது. இப்பொழுது இந்தக் கேணியும் பாதி கோயிலுக்குத் தீர்த்தக் கேணியாக எடுக்கப்பட்டு விட்டது.

கன்னாதிட்டிக்குளத்தையும் வண்ணான் குளத்தையும் சிறு உதாரணத்துக்காக எடுத்துக் காட்டினேன். பாஷையூர், கொழும்புத்துறை மட்டுமல்ல யாழ்ப்பாண நகரின் எத்திசையிலும் குளங்களும் கால் வாய்களும் உருப்படியாக இல்லை. எங்கும் கொங் கிறீட் தூண்களும் சுவர்களும் முளைத்து குளங்களுக்கு நீர் போக முடியாமல் செய்திருக்கிறது. கரையோரங்களில் அத்து மீறிய குடியேற்றங்களால் குளங்கள் சுருங்கி விட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள குளங்கள் பற்றி உடனடியாகக் கவனம் செலுத்தாவிடில் யாழ். மக்கள் குடி தண்ணீருக்கே அல்லல் படும் நிலையேற்படும். யாழ்ப்பாணமே மற்றொரு கச்சதீவாகிவிடலாம்!



முதுபெரும் பத்திரிகையாளர்
எஸ்.எம். கோபாலரத்தினம் (கோபு)

# நீரிழிவு: கட்டுப்படுத்துவோம் நாம் இன்றே

உலக நீரிழிவு தினமானது இன்று கார்த்திகை 14 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இதனைச் சர்வதேச நீரிழிவு சம்மேளனமும், உலக சுகாதார ஸ்தாபனமும் இணைந்து 1991 இல் முதன் முதலில் உருவாக்கியது. இது இன்சுலினை கண் டறிந்த Frederick Banting என்பவரின் பிறந்த தினமாகும்.




நீரிழிவு நோயைப்பற்றி கற்பித்தலும், அதைத்தடுத்தலுமே 2009 தொடங்கி 2013 வரையான காலப்பகுதிக் குரியக ருப் பொருளாகும். இதில் 2010 இற்கான வாசகம் "நாம் நீரிழிவைக் கட்டுப்படுத்துவோம். இன்றே!" Let's take Control of Diabetes . Now' என்பதா கும்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் எண்ணாயிரத்துக்கும் அதிகமான நீரிழிவு நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். இதில் ஐம்பது சதவீதமானோர் நீரிழிவு சிகிச்சை நிலையத்திலும் பதிவுசெய்யப்பட்டு விசேட கவனிப்புக்களையும் பெற்று வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் இருபதினாயிரத்துக்கும் அதிகமான நீரிழிவு நோயாளிகள் உள்ளனர். இதை விட நீரிழிவு நோய் என அடையாளம் காணப்படாமல் இன்னும் அதிகமானோர் உள்ளனர். இந் நோயி னால் குடும்பம், சமூகம், சுகாதாரப் பணி புரிவோர் மட்டங்களில் ஏராளமான தாக் கங்கள் ஏற்படுகின்றன. எனவே இந் நோயை வெற்றி கொள்ள நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை இந் நாளில் சிந்திப்பது சாலச் சிறந்த தாகும்.

இக்கட்டுரை
உலக நீரிழிவு தினத்தை ஒட்டிப்
பிரசுரமாகின்றது.

- கட்டுப்பாடான உணவு
- உயரத்திற்கேற்ற நிறை
- மிதமான உடற்பயிற்சி
- மன அழுத்தமற்ற வாழ்க்கை முறை

இவையே நீரிழிவை கட்டுப்படுத்தச் செய்ய வேண்டியவை. இதில் சமவிகித, நிறையுணவாக ஆரோக்கியமான ஒருவர் உண்ண வேண்டிய உணவே நீரிழிவு நோயாளிக்கான உணவுமாகும்.

இந்நோய் நம் எதிர்காலச் சந்ததியினருக்கு வராமல் தடுக்க நாம் என்ன செய்யலாம் என்று பார்ப்போமாயின், முதலில் பிள்ளைகளுக்கு ஓய்வுநேரங்களை ஏற்படுத்திக் கொடுப்போம். ஓடி, விளையாடச் சந்தர்ப்பம் வழங்கு வோம். கிராமிய மட்டங்களில் குழுக்களாகக் கழகங்களை உருவாக்கி கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப்போட்டிகள் என்பவற்றை ஏற்பாடு செய்வோம்.

இந்நோக்கத்திற்கா கவே 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' விழிப்புணர்வுக் கழகம் என்ற பெயரில் கிராமங்கள் தோறும் கழகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தற்போது நல்லூர், கோப்பாய் ஆகிய இடங்களில் இக் கழகங்கள் வெற்றிகரமாக, சுயமாக இயங்குகின்றன. இம் மாதிரியான கழகங்களை உங்கள் கிராமத்தில் ஏற்படுத்த நீங்கள் ஆர்வ முடையவராயின் 0212220179 என்ற இலக்கத்திற்கு அழுத்தி நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ்.போதனாவைத்திய சாலையுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

டாக்டர்
**திருமதி பி.செல்வகரன்**
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலிக்கொடியை அபகரிக்க முயன்றவர் பெண்ணைத் தாக்கிவிட்டுத் தப்பினார்

வலி.வடக்கு, நவ. 14

சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை அபகரிக்க முற்பட்ட இளைஞரின் முயற்சி தோல்வியில் முடிவடைந்ததால் விரக்தியடைந்த இளைஞர் குறித்த பெண்ணைத் தாக்கிவிட்டுத் தப்பி ஓடியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஏழாலை பெரியதம்பிரான் கோயிலுக்கு அண்மையாக இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் நண்பகல் 12 மணியளவில் குறிப்பிட்ட பெண் தனிமையில் ஆள்நடமாட்டம் குறைந்த நேரம் வீதியால் வந்துள்ளார்.

இவ்வேளை தனக்குப் பின்னால் சைக்கிளில் வரும் இளைஞரைக் கண்டு அவதானத்துடன் வந்த வேளை இளைஞன் திடீரென பின்னால் வந்து தாலிக் கொடியை இழுத்து அறுக்க முற்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட பெண் தாலிக் கொடியை கையால் பிடித்தபடி கூச்சலிட்டதையடுத்து குறித்த பெண்ணைத் தாக்கிவிட்டு இளைஞன் தப்பி ஓடியுள்ளார் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## மீன்கள் கடித்து மூவர் காயம்

தென்மராட்சி, நவ. 14

கடலில் மீன்பிடிக்கச் செல்வோர் மீன்களால் கடியுண்டு காயமடையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த ஒரு வாரத்தில் மூன்று பேர் மீன்களால் கடியுண்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த புதன் கிழமை புலோப்பளை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த வீ.விஜயகுமார் (வயது40) என்பவரை மீன் கடித்துக் காயப்படுத்தியது.

ஏற்கனவே கச்சாய் கடலேரியில் மீன்பிடித்த இருவர் மீன் கடித்து காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (207)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம், நவ. 14

ஏழாலைவடக்கு அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஒளி விழா எதிர்வரும் 17ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்குபடாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.வாமதேவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்விகாமம் கல்வி வலய ஆரம்பக்கல்விமுறைமை ஆசிரியர் திருமதி தே.தயாபரராஜாவும் சிறப்பு விருந்தினராக சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர்யன்பூமா தேவி மகாதேவாவும் கலந்துகொள்வர். (204)

# எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு குடாநாட்டில் கட்டுரைப் போட்டிகள்

வண்ணை, நவ. 14

சர்வதேச எச்.ஐ.வி.எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை 'சொண்ட்' நிறுவன அனுசரணையுடன் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்த முன்வந்துள்ளது.

பாடசாலை மற்றும் திறந்த மட்டம் ஆகிய இரு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்டம்-தரம் 9 இற்குட்பட்ட மாணவர்கள் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் "எச்.ஐ.வி.எயிட்ஸ் நோயிலிருந்து எதிர்காலச் சமூகத்தைப் பாதுகாப்போம்" என்னும் தலைப்பில் 300 சொற்களுக்குக் குறையாமல் எழுதவேண்டும்.

திறந்த மட்டம்-யாழ்.மாவட்டத்தில் "மாறிவரும் சமூகச் சூழலும் எச்.ஐ.வி. எயிட்ஸை எதிர்கொள்வதற்கான சவால்களும்" என்ற பொருளில் கட்டுரை 500 சொற்களுக்குக் குறையாமல் அமைய வேண்டும்.

முதலாம் பரிசாக 10 ஆயிரம் ரூபா இரண்டாம் பரிசாக 7,500 ரூபா 3ஆம் பரிசாக 5ஆயிரம் ரூபாவும் மேலும் 5 ஆறுதல் பரிசாக ஒவ்வொன்றும் 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படு மெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாகக் கட்டுரைகளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-160)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கராசா கமலாவதி

*(முன்னாள் போதனாசிரியை, சிறுகைத்தொழில் திணைக்களம்)*



அல்வாய் வடக்கு அல்வாய் ஸ்ரீகந்தவாசம் (தகனை)ஐ பிறப்பிடமாகவும் Denmarkஐ வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா கமலாவதி (12.11. 2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- கனகம்மா தம்பதியரின் பாசமிகு ஏகபுத்திரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், தங்கராசாவின் (முன்னாள் தபால் அதிபர், தர்மபுரம்) (Denmark) அன்புமனைவியும் மாதி னி (Denmark), கமலினி (Denmark), சாந்தினி (Denmark) ஆகியோரின் அன்புத்தாயாரும் பாஸ்கரன் (Denmark), கஜேந்திரன் (Denmark), கௌதமன் (Denmark), ஆகியோரின் அன்புமாமியாரும் கௌசிதா, ஆதீசன், அனந்தன்(Denmark); அட்சயன், அச்சுதன், ஐந்தவி, யாதவி (Denmark), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கருணாநிதி (முன்னாள் பிரபல Cima கணக்கியல் விரிவுரையாளரும், R.R.I- Colombo நிறுவன நிறுவுனரும்), சிவயோகர் (இளைப்பாறிய நிறைவேற்றுப் பொறியியலாளர் RDA- ADB- Caarp) செல்வயோகநாதன் (இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர் RDD), (Swiss), ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தயாநிதி (இளைப்பாறிய பிரதம எழுதுனர், யாழ். புள்ளிவிவரத்திணைக்களம்), பாரதி, சந்திராதேவி (Swiss), காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (ஆனந்தம்), கந்தையா, சுப்பிரமணியம், இலட்சுமிப்பிள்ளை (செல்லம்மா), வைரமுத்து (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்), மற்றும் தங்கமலர் (தங்கம்மா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கணவர்- தங்கராசா- 004562216587- 004562219188(L)
மகள்- மாதினி- 004550316089 (M)
மகள்- காமலினி- 004562206587 (L) 004520824328 (M)
மகள்- சாந்தினி- 0045 62205961 (L) 004542975961 (M)

தொடர்பு: S.Thangarajah,
Toftermarken 39,
1 Tv, 5700- Svendborg,
Denmark.

தகவல்: வே.சிவயோகன்- சகோதரன்,
ஆயர்பாடி, துன்னாலை மத்தி,
கரவெட்டி.

தொலைபேசி: 021 226 4944- 0778727533

## கண்ணீர் அஞ்சலி

### இ.அண்ணாமலை

(உத்தரவுபெற்ற நில அளவையாளர்)



எமது சங்கத்தின் நீண்ட நாள் உறுப்பினரான இ.அண்ணாமலை அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (105945)

உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் (வடபகுதி).

## மரண அறிவித்தல்

### குட்டிஐயா யோகீஸ்வரன்

(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர், தொழில் திணைக்களம்.)



மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டிஐயா யோகீஸ்வரன் (11.11.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டிஐயா - பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் - சண்முகசுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும், உமாதேவியின் அன் புக் கணவரும் அமரேசன், குகனேசன், கௌரி, தாரணி, பவானி, கணேசன், கேதீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயா, லிங்கநாதர், ஜெகதீஸ்வரன், ரவீந்திரன், அஞ்சனா ஆகியோரின் பாசமிகு மாமனும் நம்பியாரூரனின் மைத்துனரும் அபிராம், ஆதீஸ், சஞ்சீவன், தரணிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலியார் ஒழுங்கை, கோப்பாய் வடக்கு, கோப்பாய். (105944)

தகவல்: குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### ஐயாத்துரை தர்மரட்ணம்

தோற்றம் 11.03.1956 மறைவு 15.10.2010

கடந்த 15.10.2010 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயரில் நேரில் வந்து பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் மு.ப.11.00மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
கல்லாரை,
மல்லாகம். (105931)

குடும்பத்தினர்.

## மரணஅறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை பத்மநாதன்



கரவெட்டி கிழக்கு, சிங்கத்தின் வீட்டை பிறப்பிடமாகவும், வதிரிச் சந்தி, வதிரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை பத்மநாதன் 09.11.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் வள் ளிப்பிள்ளை, தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா பத்மநாதனின் அன்பு மனைவியும், சிவகுருநாதன், சபாநாதன், மங்கையர்க்கரசி, பாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யமுனா (பனை அபிவிருத்திச் சபை), கெங்கா, பசீரதன் (லண்டன்), வித்தியா (லண்டன்), காஞ்சனா (லண்டன்), முரளீதரன் (லண்டன்), சுதர்ஜனா ஆகியோரின் பாசமிகு தாயும், புவனேசமூர்த்தி, ஸ்ரீரங்கா (பொறியியலாளர்), மொறின் (லண்டன்), ஹரிஹரன் (டென்மார்க்), சுதாகரன் (லண்டன்), திலீபன் ஆகியோரின் பாசமிகு மாமியும், ஷாலினி, பிரணவன், விஸ்ணவன், மிலானா, கிரன், அகல்யா, லாவண்யா, சகானா, தீபக், சுபஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வதிரிச் சந்தி,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைப்பதெல்லாம் நடக்கிறது



*மழை மெல்லத் தூறிக் கொண்டிருந்தது. முன்னிருட்டுக் காலம் என்பதால் எங்கும் இருளின் போர்வை. இருளின் கருமையைக் கிழித்துக் கொண்டு வந்து சேர்ந்த வாகனங்கள். பழைமையோடு யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தைய செழுமையைச் சொல்லி நிற்கும் அந்தக் கட்டடத்தின் முன்னால் வந்து நிற்கின்றன. அதன் வருகையை எதிர்பார்த்து நின்றவர்களின் முகத்தில் ஒருவித பரபரப்புத் தொற்றிக் கொண்டது. தயாராக வைத்திருந்த மூடை முடிச்சுகளை வாகனத்தில் ஏற்றிவிட்டு தாமும் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். சந்தடியின்றி ஒளியின் துணையோடு நகரத் தொடங்கியது வாகனம். அதன் பயண முடிவில் தலைவிரி கோலமாக நிற்கின்ற தென்னைகளைச் சுமந்து நிற்கும் காணி ஒன்று தென்பட்டது. இருளையும் பொருட்படுத்தாது வாகனத்தில் இருந்து இறங்கியவர்கள் தமது மூடை முடிச்சுகளை ஓரிடத்தில் குவித்து விட்டு அடுத்த கட்ட நகர்வுக்கு ஆயத்தமாகினர். இவர்களுக்கு உதவி செய்யவென அந்த இருளிலும் சீருடை அணிந்த ஒரு குழு அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தது. வாகனத்தில் வந்தவர்களும் இவர்களும் ஒன்றித்து கருமமே கண்ணாயினர். அவர்களின் காரியத்தின் பயனாக வெறுமையாக இருந்த அக் காணி விடியற்காலையில் இருபதுக்கும் மேற்பட்ட குடிசைகளின் உருவாக்கத்தோடு ஒரு குடியிருப்பாக மாறத் தொடங்கியிருந்தது.*

எல்லாம் எதிர்பார்த்தபடியே நடந்து முடிந்திருக்கின்றன. நாவற்குழியில் வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் சிங்கள மக்கள் சொல்லாமல் கொள்ளாமல் - இரவோடிரவாக - கடந்த செவ்வாய்க்கிழமை குடியேற்றப்பட்டுள்ளனர். 30 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு இருந்ததாக உரிமை கொண்டாடிக் கொண்டு யாழ்.ரயில் நிலையத்தில் வந்து குவிந்திருந்த இவர்கள் தற்போது அரசுக்குச் சொந்தமான காணி ஒன்றில் அத்துமீறி நுழைந்திருப்பது யாழ் மக்களுக்கு ஆச்சரியமான செய்தியல்ல. எனினும் சிங்கள மக்கள் குருநகர் தொடர்மாடிக் கட்டடத்திலோ அல்லது கொழும்புத்துறை மணியந்தோட்டம் பகுதியிலோ தான் குடியேறக் கூடும் என்ற எதிர்பார்ப்பு பலரிடமும் ஏற்பட்டிருந்தது. அதற்கேற்ற வகையில் சில காரியங்களும் நடைபெற்றிருந்தன. தாம் முன்னர் கொழும்புத்துறை மணியந்தோட்டம் பகுதியிலேயே குடியிருந்ததாகவும் தற்போது தமது காணிகள் யாவும் மாவீரர் குடும்பங்களுக்கு புலிகளால் கொடுக்கப்பட்ட நிலையில் இருப்பதாகவும் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் சிங்கள மக்களின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்தோடு யாழ்ப்பாணத்துக்கு வந்தது முதலே தாம் வாடகைக்கு இருந்ததாகவே சொல்லி வந்த இவர்கள் கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது ''எங்களுக்குச் சொந்தமான காணிகள் யாழ்ப்பாணத்தில் உள்ளது. அதற்கான ஆதாரமும் எம்மிடம் உண்டு'' என்று திடீர் 'பல்டி' அடித்ததுடன் சில காணி உறுதிகளையும் காண்பித்தனர்.

இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் யாழ்ப்பாணம் வந்துள்ள சிங்கள மக்கள் கொழும்புத்துறையில் குடியேற்றப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்திருந்தன.

**ஔண்யன்**

மணியந்தோட்டம் பகுதியில் இன்னமும் வெடிபொருள்கள் அகற்றப்படவில்லை என்று கூறி அங்கு தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் தாமதப்படுத்தப்பட்டு வந்தது.அத்துடன் வசந்தபுரம் பகுதியில் உரிய ஆவணங்கள் இன்றி வசித்து வந்த மக்களை அவ்விடத்தில் இருந்து வெளியேறும் அறிவுறுத்தலும் விடுக்கப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தே இப்பகுதியில் சிங்கள மக்களைக் குடியேற்ற அரசு திட்டமிடுகிறதோ என்று யாழ்.மக்களுக்கு சந்தேகம் எழுந்தது.

போர்க் களங்களில் எதிரியை திசை திருப்புவதற்காக உண்மையான இலக்கை விடுத்து வேறொரு இலக்கில் தாக்குதல் நடத்த முற்படுவதுபோல 'பாவ்லா' காட்டுவதுண்டு. அதுபோலவே எல்லோரது கவனத்தையும் கொழும்புத்துறையில் குவிய வைத்துவிட்டு மிகக் கெட்டித்தனமாக அந்த மக்கள் நாவற்குழியில் குடியேற்றப்பட்டுவிட்டார்கள். இந்தக் குடியேற்றம் மக்கள் தாமாகவே நிகழ்த்திய ஒன்று என அரசுத் தரப்பும் படைத்தரப்பும் சொல்லக் கூடும். யாழ். ரயில் நிலையத்தில் அவர்களுக்குரிய அடிப்படை வசதிகள் இல்லாததாலும், தென்னிலங்கையில் இருந்து வந்த சிங்கள மக்கள் அனைவரும் தங்கக் கூடிய கொள்ளவு இல்லாததாலும் அவர்கள் சிரமப்படுவதாக கடந்த சில வாரங்களாக 'படம்' காட்டப்பட்டிருந்தது. ரயில் நிலையப் பகுதியில் உள்ள வசதியீனங்களால் அங்கிருந்த சிலருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டதாகவும் ஒருவருக்கு டெங்கு நோயின் தாக்கம் ஏற்பட்டு அவர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாகவும் அங்கு தங்கியிருந்த சிங்கள மக்களால் சில கதையாடல்கள் உலவ விடப்பட்டன. யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த ஒருவருக்கு டெங்கு நோயோ வயிற்றோட்டமோ ஏற்பட்டால் அவரை யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்காமல் எதற்காக விழுந்தடித்துக் கொண்டு இங்கிருந்து அநுராதபுரத்துக்கு ஓடவேண்டும்? என்ற கேள்வி எல்லோரிடமும் இத்தருணத்தில் எழுவது இயல்புதான். இந்தக் கேள்விக்கான பதிலில் தான் யாழ்ப்பாணத்தில் குடியேற வந்த சிங்கள மக்களின் அல்லது அவர்களுக்குப் பின்னால் இயங்குகின்ற மர்மக் கரங்களின் சமயோசிதமான காய்நகர்த்தல் ஒன்றிருப்பது புலப்படும். யாழ்ப்பாணத்தில் அடிப்படை வசதி, சுகாதார வசதி என்பவை எதுவுமற்று சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருவதாக தென்னிலங்கையில் உள்ள அரசியல் வாதிகளுக்கும் மக்களுக்கும் ஒரு பிரமையை ஏற்படுத்தி அதனூடாக அனுதாபத்தைப் பெறுவதே இவர்களின் இலக்கு. இந்த அனுதாபம் மிக விரைவான குடியேற்றத்துக்கு உதவக்கூடும் என இவர்கள் எண்ணியிருக்கக் கூடும்.

தென்னிலங்கையில் கடந்த காலங்களில்

> **30 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்துடன் எவ்வித தொடர்புமற்றிருந்த சிங்கள மக்களுக்கு நாவற்குழியில் அரச காணியிருப்பது எப்படித் தெரியவந்தது?**

இனவாதக் கருத்துக்களைக் கக்கி வந்த கட்சிகளும், சில அரசியல்வாதிகளும் சிங்கள மக்களின் யாழ்ப்பாணக் குடியேற்றத்துக்காக வக்காலத்து வாங்கவும் தவறவில்லை. அவர்களில் மிக முக்கியமானவர் ஜே.வி.பியின் முன்னைநாள் பிரசாரச் செயலாளரும் தற்போதைய வீடமைப்பு அமைச்சருமான விமல் வீரவன்ச. யாழ்ப்பாணத்துக்குச் சென்றுள்ள சிங்கள மக்கள் அங்கு குடியேறுவதற்கான சகல உரித்துக்களையும் உடையவர்கள் என்று இவர் பலமுறை வலியுறுத்தி வந்தார். இந்த நிலையில்தான் அவருடைய அமைச்சின் ஆளுகைக்குள் வருகின்ற அரச காணியொன்றில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். இது விமல் வீரவன்சவின் ஒருசில மாதங்களுக்கு முன்னான யாழ் விஜயம் மீதான சந்தேகத்தையும்.உண்டு பண்ணியிருக்கின்றது.

விமல்வீரவன்ச யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது ஏதோ யாழ். மக்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டே வருவதாகச் சொல்லப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்துக்கு வந்தவர் குருநகரிலுள்ள ஐந்துமாடிக் குடியிருப்பையும், நாவற்குழியிலுள்ள வீடமைப்புக்குச் சொந்தமான காணியையும் பார்வையிட்டுச் செல்லத் தவறவில்லை. அவர் இங்கிருந்து சென்ற கையோடுதான் யாழ்ப்பாணத்துக்கு சிங்கள மக்களும் வந்து சேர்ந்தனர். இப்போது எவ்வித அச்சமுமற்றவர்களாக வெகு துணிச்சலோடு நாவற்குழியிலுள்ள காணியில் குடியேறியும் விட்டனர். வன்னியில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் மக்களால் 'ஆள்காட்டி' என அழைக்கப்படுகின்ற வேவு விமானங்கள் வந்து சென்றபின்னரே குண்டு வீச்சு விமானங்கள் வருவதுண்டு. அத்தகைய ஆள்காட்டி வேலையைச் செய்யத்தான் விமல் வீரவன்ச யாழ்ப்பாணத்துக்கு வந்திருப்பாரோ? என்று மக்களில் பலரும் தமக்குள்ளே பேசிக்கொள்கிறார்கள்.

அவ்வாறாக அவர்கள் சந்தேகிப்பதில் நியாயம் இருப்பதாகவே படுகிறது. இல்லாவிட்டால் ஏறக்குறைய 30 வருடங்களுக்கும் மேலாக யாழ்ப்பாணத்துடன் எந்தவித தொடர்புமற்றிருந்த ஒரு மக்கள் கூட்டத்துக்கு நாவற்குழியில் வீடமைப்பு அமைச்சுக்குச் சொந்தமான மிகப் பரந்த காணியொன்றிருப்பது எப்படித் தெரியும்? அங்கே தாம் குடியிருந்தால் எந்தவித பிரச்சினைகளையும் எவரும் எழுப்ப முடியாது என்ற இரகசியமும் அவர்களுக்கு தெரியவந்ததன் மர்மம் என்ன? என்ற கேள்விகள் விமலின் யாழ் விஜயம் மீதான சந்தேகத்தையே உறுதி செய்கின்றன. உண்மையில் புகையிர நிலையத்தில் தங்கியிருந்து சமைத்து உண்டுவிட்டு அங்கேயே உறங்குபவர்களுக்கு கிட்டத்தட்ட 10 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள நாவற்குழி என்ற ஊரைக் கூட அறிந்திருக்க வாய்ப்பில்லை. யாழ்ப்பாணத்தில் பரம்பரையாக வாழ்கின்ற அநேக தமிழ் மக்களுக்குக் கூட சிங்கள மக்கள் குடியேறிய பின்னர்தான் நாவற்குழியில் வீடமைப்பு அமைச்சுக்குச் சொந்தமான காணியொன்று வெறுமையாக இருந்தவிடயமே தெரியவந்திருக்கிறது. இந்நிலையில் வாடகைக்கு இருந்ததாக வந்து சேர்ந்த சிங்கள மக்கள் மிகத் துல்லியமாக இந்த இடத்தில் தமது புதிய குடியிருப்புக்களை நிறுவத் தொடங்கியிருப்பது நீண்டகால திட்டமிடல் ஒன்றின் அங்கமாகவே அவர்களது நுழைவு இடம்பெற்றிருப்பதையே துலாம்பரமாக்குகின்றது.

மாஜாயாலப் படங்களில் வருவது போல ஒரே இரவுக்குள் குடியிருப்புக்கள் முளைப்பதற்கான எல்லாப் பொருள்களும் சிங்கள மக்களுக்கு கிடைத்த வழியும் இதுவரை சொல்லப்படவில்லை. எனினும் கிடைத்த விதம் எல்லோருக்குமே தெரிந்த பரகசியம்தான். பூர்வீகமாக இந்த மண்ணிலேயே வாழ்ந்து போரால் விரட்டியடிக்கப்பட்டு இன்னமும் அகதிகளாகவே உழன்றுகொண்டிருக்கிற வலி.வடக்கு மக்களை மீள்குடியேற்ற இன்னமும் அரசுக்கு மனம் வரவில்லை. அவர்களது பிரதேசங்களில் உள்ள வெடிபொருள்களை அகற்ற நீண்ட காலம் தேவைப்படுகின்றது என்று அது நொண்டிச்சாட்டுகளையும் அள்ளிவிடுகிறது. ஆனால் வாடகைக்கு இருந்தவர்களுக்கு மட்டும் ஒரே நாளில் வசதியான காணியொன்றில் குடியிருப்பதற்கான உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. உண்மையில் அரச காணியொன்றில் அத்துமீறி நுழைவது கூட சட்டப்படி குற்றம். சிங்கள மக்கள் நுழைந்ததோடு மட்டுமன்றி தமக்கான குடியிருப்புக்களையும் அரச காணியொன்றில் எவ்வித அனுமதியையும் பெறாமல் உருவாக்கியிருக்கிறார்கள். இது பாரதூரமான குற்றமாகும். ஆனால் சிங்கள மக்கள் அரச காணியில் குடியேறிய விடயம் எல்லா ஊடகங்களாலும் தகுந்த ஆதாரத்தோடு அம்பலப்படுத்தப்பட்ட பின்னரும் எவ்வித சட்ட நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. இதிலிருந்தே அரசின் மறைமுக- மனப்பூர்வ - அனுசரணை இந்தக் குடியேற்றத்துக்கு இருப்பது புலனாகின்றது. பூர்வீகமாக வாழ்ந்த இடத்தில் அதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாத காரணத்தால் அவர்களது குடியிருப்பில் இருந்து இரவோடு இரவாக வெளியேற்றப்பட்டார்கள் வசந்தபுரம் மக்கள். ஆனால் இதே மண்ணில்தான் தமது இருப்பியலுக்கான எந்தவித ஆதாரங்களுமற்று வந்த சிங்கள மக்கள் 'அடாத்தாக' இரவோடு இரவாக குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவ்விரு செயல்களையும் ஒரே தட்டில் பார்க்கும்போதே இனப்பிரச்சினைக்கான தீர்வில் அரசின் தராசு எந்தப் பக்கம் தாழப்போகிறது என்பது புரிந்து விடுகிறது.

நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டதைப் பற்றி நண்பர் ஒருவரிடம் மனவேதனையோடு சொல்லிக் கொண்டிருந்தேன். அதற்கு அவர் ''நல்ல வேளையா இதுதான் தங்கட சொந்த வீடென்று சொல்லி எங்கட வீடுகளில இருந்து எங்களைக் கலைச்சுப் போட்டு குடியிருக்காமல், சிங்களச் சனம் நாவற்குழியில குடியேறினதை நினைச்சு சந்தோசப்பட வேணும்'' என்றான். அவன் சொல்வது சரிபோலவே பட்டது. போரில் வென்றவர்களுக்குத்தானே எல்லா உரிமையும். தோற்றுப் போன சமூகம் எல்லாவற்றையும் கைகட்டிப் பார்ப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழைக்குலைகள் விலை வீழ்ச்சி

கோப்பாய், நவ.14

நீர்வேலி வாழைக்குலைச் சந்தையில் வாழைக்குலைகளின் கொள்வனவு விலை வீழ்ச்சி கண்டுள்ளது.

தற்போது சகல இன வாழைக்குலை வகைகளும் அதி உச்ச விலையாக ஒரு கிலோ 20 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப் பட்டு வருகிறது.

இதனை அடுத்து கால்நடைகளின் உணவுக்காக பலரும் வாழைக்குலைகளை பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதிகரித்த நிலப்பரப்புக்களில் வாழைச்செய்கை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து பெருமளவான வாழைக்குலை கள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு எடுத்து வரப்படுகிறது. இதனை அடுத்தே இவ்விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரி விகப்படுகிறது. (ம- 201 -72)

## அடிக்கல் நடும் விழா

கோப்பாய், நவ.14

கோப்பாய் நாவலர் தமிழ் மகாவித்தியாலயத்தில் ஊவா மாகாணத்தினால் வழங்கப்படவுள்ள கட்டடத்துக்கான அடிக் கல் நடும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஊவா மாகாண முதலமைச்சர் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைக்கவுள்ளார். (ம- 72)


### சத்திய சாயி பாடசாலை - மானிப்பாய்
### பாலர் பிரிவு அனுமதி - 2011

மேற்படி அனுமதிக்கு 2006, 2007ஆம் ஆண்டுகளில் பிறந்த பிள்ளைகள் தகுதியுடையவர்கள் ஆவர். விண்ணப்பப் படிவத்தை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 30.11.2010

சோதி வேம்படி வீதி,
மானிப்பாய். (105947) அதிபர்.

### டேடன்ஸ் ஆய்வுகூடம் - Durdans Lab

யாழ்.நகரில் சர்வதேச தர நிர்ணயத்துக்குட்பட்ட பரிசோத னைக்கூடம் அதி நவீன உபகரணங்கள் மூலம் துல்லியமான துரித பரிசோதனை முடிவுகள். சகலவிதமான குருதி, சிறுநீர், உடற்கூற்றியல் பரிசோதனைகள் நியாயமான கட்டணத்தில் செய்யப்படும். தற்பொழுது ஹோமோன்ஸ் (T3, T4, T5H, etc) பரிசோதனைகள் உடனுக்குடன் செய்யப்படும். நோயியல் நிபுணரின் அங்கீகாரத்துடன் பரிசோதனை முடிவுகள்.

514/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 2229727 (105932)

STUDY @ UK

Spot Admissions for January 2011 Intake

British Institute of Technology & E-commerce

In partnership with :
Coventry University | UEL University of East London | University of Wales Prifysgol Cymru

IELTS is not mandatory
If students have good english background.

Date : 21st of November 2010
Time : 1.00PM -7.00PM
Venue : IES, 479 1/1 Galle Road, Colombo 6.
Admissions issues by :
Mr Kelvin Jones, Head of International Relations, BITE



- MBA Innovative Management
- MBA Banking and Finance
- MSc Nano Technology
- MSc Innovative Technology
- LLM
- MSc Computer Animation
- MA Strategic Management
- MSc Security Technology
- MSc Fashion Technology
- MSc Network Technology
- MA Hospitality Management
- MA HE Teaching
- Bsc Technology & E-com
- BA Innovative Business

For More Details

Registered Overseas Representative (Sri Lanka)
IES, 479-1/1, Galle Road, Colombo-06.
TP | 011 4378835 / 011 5766722 M | 0773691913,
@ | subitha@ies.lk, Web : www.ies.lk
LONDON OFFICE : 165B, HIGH STREET, EASTHAM, LONDON E6 1JB


## பொதுக்கூட்டங்கள்

நாவற்குழி, நவ.14

அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலி.கிழக்கு கோப்பாய் பிர தேச செயலர் பிரிவுச் சங்கத்தின் முதலா வது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர் வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை முற் பகல் 10 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் வை.குணசேகரம் தலை மையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலகக் கணக்காளர் திருமதி வசந்த மாலா மனோகரன் கலந்து கொள்ளவுள் ளார். கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்டச் சங்கத்தின் தலைவர் வி.சிறி சக்திவேல், செயலாளர் பொ.கமலநாதன், பொருளாளர் எஸ்.கணேசலிங்கம் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர். சங்கத் தில் புதிய அங்கத்தவர்களாகச் சேரவிரும் புவோர் அன்றையதினம் காலை 9.30 மணிக்குச் சமுகமளித்துச் சேரமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(204 -121)

* * *

கைதடி மேற்கு சரஸ்வதி சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற வுள்ளது. இந்தக் கூட்டத்திற்கு சகல அங் கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)


### The Royal College of Jaffna

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் எழுத வாசிக்க கதைக்கப் பயில, By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.

தொ.பே.: 077 6751649 (105941)

### தேவை

எமது நிறுவனத்திற்கு ஆண்,பெண் பயிலு னர் தேவை. பயிற்சிக்காலத்தில் கொடுப்பனவு வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ், இல: 381, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 7903020 (105942)

### காணி விற்பனைக்கு

காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வேம் படிக்கும் சின்னாலடிக்கும் இடையில் அரிசி மில்லுக் கருகாமையில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொ.பே:0112632238 - தொடர்புக்கு- எஸ்.குலதாசன், கொழும்பு. (சி/575816)

### திருமண சேவை

15 வருட திருமணசேவை நிறைவினை முன் னிட்டு வேல் அமுதன் பாரிய சேவைக் கட்டணக் குறைப்பு விவரங்களை ''சுயதெரிவு முறை முன் னோடி'' சர்வதேச மூத்த திருமண ஆற்றுப்படுத்துநர் வேல் அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி மாலை யிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ தொடர்பு கொண்டு விசாரித்தறிக.

தொ.பே.: 011 2560488, 0112360694, 0114873929

### ஊடகவியலாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்திலிருந்து
ஒளிபரப்பாகி வரும்
தமிழ்த்தொலைக்காட்சிக்கு
செய்திகளைச் சேகரிப்பதற்கு
குடாநாடெங்கும்
ஊடகவியலாளர்கள் தேவை.
விவரங்களுடன் தொடர்பு
கொள்ளுங்கள்.

27, ஸ்ரேசன் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். (105943)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 29 வயது அச் சுவினி 12இல் செவ்வாய் உள்ள 50 கிரக பாவம் உயரம் 5' 8'' சொந்தமாகத் தொழில் புரியும் மணமகனுக்கு வெளிநாட்டில் மண மகள் தேவை.

தொடர்பு: 072 9664598, 077 9089702 (105940)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

மானிப்பாய்க்கும் பண்டத்தரிப்பிற்கும் இடைப் பட்ட வீதியில் சிறு ஆபரணமொன்று கண்டெடுக் கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளத்தைச் சொல் லிப் பெற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 077 0690368, 075 0432632 (105936)

### தேவை

கால்நடைத் தீவனம் விற்பனை செய்யும் கடைக்கு வேலையாள்கள் தேவை.

தொடர்பு: S.K.ஏஜென்சி,
128/D, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (105937)

### மேல்மாடி வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் கொட் டடிச் சந்திக்கும் சத்திரச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ள மேல்மாடி வாடகைக்கு விடப் படும். தொடர்பு: 077 0770529 (105929)

### அறைகள் வாடகைக்கு

67/42, சீனிவாசகம் றோட், 2ஆம் ஒழுங்கை, கொட்டடியில் அறைகள் [illegible] விடப் படும்.

தொடர்பு: 077 0770529 (105930)

### JEYA BEAUTY SALON



அழகுக்கலை கருத்தரங்கு
கொழும்பில் பிரபல்யமான
Jeya Beauty Salon உரிமையாளர்
N.Nagularani
(Dip.in. BTHD in Srilanka& India)

அவர்களால் நடத்தப்படும் அழகுக்கலை கருத்தரங்கு மற்றும் முடியுதிர்வுக்கான தீர்வு முகப்பருவுக்கான சிகிச்சை நம்மை நாமே அழகு படுத்துவது எப்படி என்பது பற்றியும் மேலும் அழகுக்கலை தொடர்பான பல விடயங்களை உள்ளடக்கியதுமான கருத்தரங்கு.

காலம்:- நவம்பர் 21ஆம் திகதி
யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்
காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை.
(கனகரட்ணம் வீதி, அரியாலை)
பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்
★ மதிய போசனத்துடனானது

நுழைவுச் சீட்டுக்கள் கிடைக்கும் இடம்
திரேசா தளபாடமாளிகை(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்),
ஆறுமுகவிலாஸ்(ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி),
துர்க்கா அரைக்கும் ஆலை (கனகரட்ணம் வீதி, அரியாலை)
நுழைவுச் சீட்டுக்கள் நுழைவாசலிலும் பெற்றுக்கொள்ளலாம்.


### அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## அறிவித்தல்

### கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல்

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20:2 இன் படி தன்னால் ஆக் கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமையச் சங்கத் தின் கிளைகளில் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுக்கூட்டங்கள் பின்வரும் இடங்களில் 20.11.2010 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்க ளால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைச் சகல உறுப்பினர்களுக் கும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| கிளை.இல | கிளை.பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|
| 254 | தம்பாலை | யாழ்/கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாலயம் |
| 255 | வல்லை | தும்புப்பொருள் உற்பத்தி நிலையம்- வல்லை |
| 256 | நெருப்புமூட்டி | நெருப்பு மூட்டிக் கிளைக் கட்டடம் |
| 257 | கருங்காலி | தலைமைக் காரியாலயம்- அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம் |
| 258 | ஆவரங்கால் | சர்வோதயா முன்பள்ளி- ஆவரங்கால் மேற்கு |
| 259 | கிழக்கு புத்தூர் | சரஸ்வதி சனசமூக நிலையம்- புத்தூர் கிழக்கு |
| 260 | வங்கிபாடி | லிங்கன் சனசமூக நிலையம் -ஆவரங்கால் கிழக்கு |
| 261 | நிந்துசிட்டி | நிந்துசிட்டி தொழிற்சாலை -சுன்னாகம் வீதி, புத்தூர் |
| 262 | சிறுப்பிட்டி | ஜனசக்தி சனசமூக நிலையம் -சிறுப்பிட்டி மேற்கு |
| 264 | பன்னாலை | கலைமகள் சனசமூக நிலையம்- பன்னாலை சிறுப்பிட்டி |
| 265 | வடக்குவெளி | சரஸ்வதி சனசமூக நிலையம் -நவக்கிரி புத்தூர் |

சி.சந்திரலிங்கம்,
கௌரவசெயலாளர்,
அச்சுவேலி பனை தென்னை வள அ.கூ.சங்கம் (வ-து).
(105934)


SALES REP

- Around 25 years of age
- 2-3 Years experience in selling
- Should be minimum O-Level Qualified
- Ability to converse in Tamil/ English
- Should possess a valid riding licence
- Salary & Sales commission exceed Rs. 50,000 pm
- Company maintained Motorbike
- Medical provided

APPLY TO
E-mail : hrd@tradesmann.com
Fax: 011 5565610
PO Box: 168, Jaffna.

FOR FURTHER DETAILS
Contact: 077 7567147

TRADESMANN

Tradesmann is a diversified business model in Manufacturing, Trading & Distribution sectors since 1956

THE TRADESMANN SL (PVT) LTD
40, Borupana Ferry Road, Ratmalana.
www.tradesmann.com


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பலம் இழக்கிறது கூட்டுறவு...!

**ஒரு காலத்தில் மக்களுக்குப் பெரும் சேவையாற்றி வந்தது கூட்டுறவுத்துறை.**

**இன்றோ நிலைமை தலைகீழ். இக்கட்டுக்குள் சிக்கித் தவிக்கிறது.**

**பதவியைத் தக்க வைக்கவே கூட்டுறவுத் துறையில் உள்ள பலரும் விரும்புகிறார்கள்.**

கூட்டுறவுக்கு இலக்கணமாகவும், முன்னோடியாகவும் இருந்த யாழ். மாவட்டக் கூட்டுறவுத்துறை இன்று மிகவும் மோசமான நிலைமைக்குள் சென்று கொண்டு இருக்கின்றது.

கூட்டுறவாளர்கள் என்று கூறிக்கொண்டு ஒருசாரார் கூட்டுறவை பட்டம் பதவிகளுக்குப் பயன்படுத்துபவர்களாகவும் மறுபுறத்தே ஒரு சாரார் அதனை சுரண்டிச் செல்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.



படம்: ஆவணக்காப்பகத்திலிருந்து...

இந்த நிலைமை தொடருமாக இருந்தால் கூட்டுறவுத்துறையில் இருக்கும் பல ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலைமை தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுவதுடன் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பரிதாபகரமான நிலைமைக்குத் தள்ளப்படும்.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுவதை யாரும் உணர்வதாகத் தெரியவில்லை.

கூட்டுறவுக்கு எடுத்துக் காட்டாக யாழ்ப்பாணம் முற்ற வெளிப்பகுதியில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம் கட்டியம் கூறி தலை நிமிர்ந்து நிற்கின்ற போதிலும் இன்று யாழ்ப்பாணத்தின் கூட்டுறவு பாரிய கேள்விக்கு உரியதாகவும் நகைப்புக்குரியதாகவும் காணப்படுகின்றது.

கூட்டுறவு ஆணையாளர் யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபைகளைக் கலைத்து அரச ஊழியர்களைக் கொண்ட நியமனப் பணிப்பாளர் சபைகளை நியமனம் செய்துள்ளார்.

இந்தவகையில் இன்னும் எத்தனையோ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபைகள் கலைக்கப்பட வேண்டியதாகவும் அதேவேளை உரிய விசாரணைக் குழுக்களை அமைத்து விசாரணைகள் செய்ய வேண்டியவையாகவும் காணப்படுகின்றன.

இல்லாதவன் சொத்து இருக்கிறவனுக்கு என்று ஒரு முதுமொழி உண்டு. அதேபோல் இன்று கூட்டுறவுச் சங்கங்கள் பலவும் பாரிய நிதி நெருக்கடிக்குள் சென்றுள்ளன.

இந்நிலையில் பணிப்பாளர் சபையினர் கடந்த காலங்களைக் காரணம் காட்டி இயக்கம் கொண்டு சென்றுவிட்டது எனக்கூறி தங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றனர் மறுபுறத்தே பல இடங்களில் இயக்கத்தின் முதலீடுகளும் கூட காணப்பட்டதாகவும் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

இதில் எது சரி? எது பிழை என்பதிலும் பார்க்க தற்போதைய நிலைமையை நாம் கருத்தில் கொள்வது சாலச் சிறந்ததாகும்.

அண்மைக் காலமாகப் பல கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் பாரிய கேள்விக்குரியதாகக் காணப்படுகின்றன.

போதிய நிர்வாகத்திறமை அற்ற பணிப்பாளர் சபை, திட்டமிடல், தீர்மானம் செய்தல் விடயத்தில் ஆற்றல் அற்றவர்களைக் கொண்ட சபைகளாகவும், இன்னும் ஒரு புறத்தே தொடர்ச்சியான தான்தோன்றித்தனமான முடிவுகளைக் கொண்ட பணிப்பாளர் சபைகளாகவும் இருந்து இன்று வேண்டத் தகாத நியாயங்களைக் கூறிக் கொள்ள ஒட்டிக் கொண்டு இருக்கும் நிலைமை காணப்படுகின்றது.

உதாரணமாக யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல வருடங்களாக அரசியல் தலையீடுகளால் காலத்துக்குக் காலம் அழிந்து கொண்டே செல்கின்றது.

இதேபோன்று இன்றும் கூட உண்மைகளை மறைத்து அரசியல் தலைமைகளின் கால்களில் விழுந்து தமது பதவிகளைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுத் தொழிலாளர்களை நடுறோட்டில் விடும் செயற்பாடுகளும் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு திருகோணமலை கூட்டுறவுத் திணைக்களத்தில் இருந்து பத்துக்கும் மேற்பட்ட கேள்விகள் அனுப்பப்பட்டு பதில் கோரப்பட்டுள்ளது.

அதில் கேட்கப்பட்டுள்ள விடயங்களில் முக்கியமானது, உயர்மட்ட அலுவலர்களான பொது முகாமையாளர், கணக்காளர், முகாமையாளர், உள்ளகக் கணக்காளர் போன்ற முகாமைத்துவப் பதவிகளுக்கான அலுவலர்கள் நியமனம் செய்யப்படாமையாகும்.

பணிப்பாளர் சபையென்பது தேர்தலில் தெரிவு செய்யப்பட்டு வருகின்றார்கள். கூட்டுறவுச் சட்ட திட்டங்களை அறிந்தோ அன்றி நிர்வாக நிதிப் பிரமாணங்களை முழுமையாகப் புரிந்தோ வரவில்லை.

செல்வாக்கின் அடிப்படையில் பொதுச் சபைக்கு வரும் ஆகக்கூடிய நூறு அங்கத்தவர்களின் வாக்குப் பலத்தில் வருபவர்களாகவே காணப்படுகின்றார்கள். இவர்களுக்கு உரிய வழிகாட்டலைக் காட்ட வேண்டியதும் கூட்டுறவுச் சட்ட திட்டங்கள், நிதிப்பிரமாணங்களை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும், கடமையும் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலருக்கு உரியது.

மறுபுறத்தே வருடாந்தம் கணக்காய்வை மேற்கொள்ளும் கூட்டுறவு கணக்காய்வுத்துறைக்கும் மாவட்டக் கூட்டுறவு ஆணையாளர்களுக்கும் உரியதாகும்.

உரியதை உரியவாறு செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்த மக்களுடைய வரிப்பணத்தில் சம்பளம் பெறுகின்ற கூட்டுறவுத் திணைக்கள ஊழியர்கள் அனைவருக்கும் உரியதாகும்.

இதனைச் செய்யாது பணிப்பாளர் சபையுடன் இணைந்து செயற்பட்டு விட்டு வெறுமனே பொதுச்சபையென்றும் அரசியல் என்றும் பூச்சாண்டி காட்டிப் பிழைகளை மறைத்தல் கூடாது.

இன்று கேட்கப்பட்ட விளக்கம் இன்றைக்குப் பத்துவருடங்களுக்கு முன்னர் கேட்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல் இதனுடன் தொடர்புடைய கணக்காய்வுப் பிரிவு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கேட்டிருக்க வேண்டும்.

இன்றும் கூட கண்மூடித்தனமான செயற்பாட்டையே கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொள்கின்றது என்பதே உண்மையாகும்.

கலைக்கப்பட வேண்டிய கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபையை கலைத்து இடைக்காலப் பணிப்பாளர் சபையை நியமனம் செய்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைக் காப்பாற்ற வேண்டும்.

வெறும் நிவாரணக் கொடுப்பனவை மட்டும் நம்பிக் கிளைகளைத் திறந்து வைத்துவிட்டுக் காத்திருக்கும் நிலைமையை மாற்றவேண்டும்.

உலகமயமாக்கலின் கீழ் உலகில் உள்ள நாடுகளே தமது கொள்கைகள், செயற்பாடுகளை மாற்றி உலகமயமாக்கலுக்கு ஏற்ப செயற்படும் போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் அரிசி, மா, சீனி, பருப்பு விற்பனைதான் என்று காத்திருக்கும் நிலைமையைக் கைவிட்டு தனியார் துறையுடன் போட்டியிடத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏ - 9 பாதை திறக்கப்பட்ட பின்னர் இன்று பல உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த தென்னிலங்கை தொழில் நிறுவனங்கள் முண்டியடித்து போட்டி போட்டுக் கொண்டு வருகின்றன.

இத்தகைய நிறுவனங்களின் முகவர்களாகச் செயற்பட முன்வரவேண்டும். இதேபோன்று சங்கக் கிளைகளில் தூசிகளைத் தட்டி தனியார் வர்த்தக நிலையங்கள் போன்று ஏனைய பொருள்களையும் விற்பனை செய்ய முன்வரவேண்டும்.

வெறுமனே இருந்து நித்திரை தூங்கிக் கொண்டு இருப்பதை விடுத்து கிளைகளில் பொருள்களை நன்கு காட்சிப்படுத்தி பொதுமக்களிடையே கவர்ச்சியை உண்டாக்கி விற்பனையை அதிகரிக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தனியார் கொள்வனவு செய்வதைப் போன்று சங்கங்கள் ஒன்றிணைந்து தொகையாகப் பொருள்களைக் கொள்வனவு செய்து தனியாருடன் போட்டி போட்டு விற்பனை செய்யும் நிலைமைக்கு முன்வர வேண்டும்.

இவை அனைத்துக்கும் முதற்கண் கூட்டுறவுத் துறையில் இருக்கும் ஊழியர்களிடத்தே சில விடயங்களையிட்டு மனமாற்றம் ஏற்பட வேண்டும்.

இதேபோன்று கூட்டுறவுத் திணைக்கள அலுவலர்களிடம் சட்டத்தை தமது கையில் எடுத்துச் சட்டத்தை உரிய முறையில் உரியவாறு செயற்படுத்தும் மனோபக்குவம் ஏற்பட வேண்டும்.

மறுபுறத்தே கூட்டுறவாளர்கள் என்று கூறிக்கொண்டு இருப்பவர்கள் வெறுமனே கண்ணை மூடிக்கொண்டு பணிப்பாளர் சபைக்கு கை உயர்த்துவதையும் புள்ளடியிடுவதையும் நிறுத்தி அவர்களுடைய நேர்மை திறமை, ஆற்றலைக் கருத்திற் கொண்டு பணிப்பாளர் சபையைத் தெரிவு செய்ய வேண்டும்.

இத்தகைய மாற்றங்கள் சம காலத்தில் ஏற்படுமாக இருந்தால் நிச்சயம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் யாழ். மாவட்டத்தில் தலை நிமிர்ந்து மக்கள் சேவையை ஆற்றும் என்பதில் சந்தேகம் இல்லை.

**வில்லவன்**

## ஒரு சிகரெட் மனித ஆயுளைக் கொல்லுகிறது

வானொலிகள் தொலைக்காட்சிகள் மூலம் எவ்வளவு தான் சிகரெட் பற்றி விழிப்புணர்வுகள் ஏற்படுத்தினாலும் அப்பழக்கத்தில் இருந்து விடுபட யாரும் நினைப்பதில்லை.

சிகரெட்டில் அடங்கி இருக்கும் நிக்கொட்டின் இரசாயனத்தின் பகுதியானது புகைக்கும் சிகரெட்டின் அடிப்பாகத்தில் இருக்கும்.

4700 இரசாயனக் கலவைகளில் 43 வகையானவை புற்றுநோயை ஏற்படுத்த காரணமாகின்றன. அதேபோன்று 85 சதவீதத்திற்கும் மேலான நுரையீரல் புற்றுநோய்க்கு புகைப்பிடித்தலே காரணமாகிறது.

எவ்வாறாயினும் பல ஆண்டுகளாக புகைத்தலுக்கு அடிமையான ஒருவர் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது மிகையில்லை.

புகைப்பவருக்கு அருகில் இருக்கும் புகைக்காதவர்கள் பற்றியும் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இத்தகைய நபர்களுக்கு இருதயம் சம்பந்தமாக பாதிப்புக்கள் அல்லது இரத்தக்குழாய்த் தொகுதி தொடர்புடைய பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு அதிக சந்தரப்பம் உள்ளது. இது சாதாரண ஒருவரைவிட 30 சதவிதம் அதிகமாகும்.

பாலியல் குறைபாடு, கருச்சிதைவு, குழந்தைகள் இறந்து பிறப்பது, கர்ப்பப்பைக் கோளாறு, இரத்தப்பெருக்கு மற்றும் நிறை குறைந்த குழந்தை பிறப்பு என்பனவற்றுக்கும் காரணமாகப் புகைத்தல் விளங்குகிறது.

எவ்வாறாயினும் புகைத்தலுக்குப் பழக்கமான நபரொருவர் அப்பழக்கத்தை கைவிட்டு 10 ஆண்டுகள் கடந்த பின்னரும், சம்பந்தப்பட்டவரின் உடல்நிலை சாதாரண நபரைக் காட்டிலும், மிக மோசமானதாகவே இருக்கும்.

## நீரைக் குடிக்கும் முறைகள்

ஒரே மூச்சில் நீரைக்குடிப்பது நல்லதல்ல. சில வினாடிகள் இடைவெளி விட்டு பருகுவது நல்லதல்ல தண்ணீர் குடிக்கக் கூடாது. இப்படிக்குடிப்பதால் சில உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஒட்டகம் குடிப்பது போல் ஒரே மூச்சிலும் தண்ணீர் குடிக்கக் கூடாது.

இரண்டு மூன்று தடவை சுவாசம் விட்டு பருக வேண்டும் உங்களில் எவரும் தண்ணீர் பருகும் பாத்திரத்தின் உள்ளே மூச்சுவிட வேண்டாம். இடைவெளி விட்டு மூன்று முறை மூச்சு விட்டு நீர் பருகினால் தாகத்தை முற்றாக நீக்கும். நீர் குடிக்கும் போது பாத்திரத்தை சிறிது தூரம் விலக்கிக் கொண்டு மூச்சு விட வேண்டும். வாயால் ஊதியபடி தண்ணீரையும் பானங்களையும் பருகக்கூடாது. தூசி ஏதாவது விழுந்திருந்தால் கூட வாயால் ஊதி அப்புறப்படுத்தாமல் சிறிது நீரை நிலத்தில் கொட்டிவிட்டு எஞ்சிய நீரை பருகுங்கள்.

சுவாசத்தில் கரியமில வாயுக்கள் நச்சுப்பொருள்கள் சிலசமயங்களில் நுண்ணிய கிருமிகள் கூட வரலாம். அவை நீரோடு கலக்கும் போது தீங்குகள் ஏற்படவாய்ப்புண்டு. இரவு நேரங்களில் பாத்திரங்களை மூடி விட்டு தூங்குங்கள். இரவில் இந்த பாத்திரங்களுக்குள் நோய்க் கிருமிகள் இறங்க வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெரிக்சன் 5 விக்கெட்டுகள் வீழ்த்த முன்னிலை பெற்றது பற்றிக்ஸ் அணி

குருநகர்,நவ.14



அகில இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. கடந்த 11 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடந்தது.

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 46 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

கிருசாந்தன் 31 ஓட்டங்களையும், நிலக்சன் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் விதுசன், சஞ்சீவன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸை ஆடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களை மட்டும் பெற்றது. பிரதீப் 23 ஓட்டங்களையும், கோபிநாத் 14 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த ஜெறிக்சன் 5 விக்கெட்டுக்களையும், டனிஸ்ரன் 2 விக்கெட்டுக்களையும், கொலின், அகிலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். ஒருவர் ரண் அவுட்முறையில் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார்.

முதல் இனிங்சில் 46 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்த சென் பற்றிக்ஸ் அணியினர் தமது இரண்டாவது இனிங்ஸை தொடர்ந்து ஆடினர். 14 ஓவர்கள் நிறைவடைந்த நிலையில் 3 விக்கெட்டுக்களை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரு அணிகளின் சம்மதத்துடன் ஆட்டம் நிறுத்தப்பட்டது. நிலோஜன் 19 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

இந்த ஆட்டத்தில் நடுவர்களாக கிருபாகரன், ஞானதயாளன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இந்தப் போட்டியில் இதுவரை தான் விளையாடிய மூன்று போட்டிகளிலும் முதல் இனிங்கில் அதிக ஓட்டங்களைப் பெற்று சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி முன்னிலை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரி அணியினர் யாழ்.சென்ஜோன்ஸ், உடுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுடன் இதுவரை விளையாடியுள்ளார்கள். (உ-51)

# யாழ்.இந்து - மத்திய கல்லூரி ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம்,நவ.14

அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் நடக்கும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி யாழ். இந்துக் கல்லூரி இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டினையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது.

கஜனன் 35 ஓட்டங்களையும் திருவேல் 21 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 14 ஓட்டங்கள் பெறப்பட்டது.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்களான டதீஸ் 19 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் நிஷாண் 19 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், நிரேஷண் 20 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கோகுலவர்ணன் 10 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 49 ஓவர்கள் முடிவில் ஆறு விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களை பெற்றது.

கேனமோதரன் 22 ஓட்டங்களையும் தனுஷன் 27 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக எட்டு ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி வீரர்களான துவாரகன் 14 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டினையும் வானுவர்ணன் ஒன்பது ஓவர்கள் பந்துவீசி ஒரு விக்கெட்டினையும் திசோதன் மூன்று ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர். (உ-23)

# சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டியோர்

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்திய 10, 13, 15, 17, 19 வயது பிரிவினருக்கான சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விவரங்கள் வருமாறு:-

*10 வயது பிரிவு*

சுதாகரன், சுமன், குழுக்கேசன், வித்யாசாண், சர்மினி, ஜெயராஜ், இராமச்சந்திரன் தனுஷன், சிவபாலஸ்ரீ பரமேஸ்வரன்.

*13 வயது பிரிவு*

அலோசியஸ் அஜய்சன், லோகேஸ்வரன், லாவண்யா, சிறிக்காந்த துளசிகன், மாதுமை குழுக்கேசன், புவனேந்திரன் துளசிகா.

*15 வயது பிரிவு*

சுந்தரேஸ்வரன், வித்யாகாசன், மோகநாதன் பானுஜன், இராசேந்திரன் இனோசா, லோகநாதன் லாவண்யா, ஜெயநாதன் வினுஷா.

*17 வயதுப் பிரிவு*

கனகலிங்கம் சாரங்கி, அலோசியஸ் அன்ட்ரூ, இராசேந்திரம் ஆனார்த்தனன்.

*19 வயதுப் பிரிவு*

வசந்தராசா கஸ்தூரி, ஜோய்சினி, பீற்றர் ஜெயசீலன், றஞ்சன் டிலெக்ஷன், சுதாகரன் சுபாஸ்கர், கெ.சுதன்ராஜ். (உ-23)

# 16 வயது தமிழ் வீராங்கனைக்கு 20 வயதுப் பிரிவில் வெண்கலம்

வலி.வடக்கு,நவ.14

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வீராங்கனை இராஜமனோகரன் தர்சினி 20 வயதுக்கான குண்டெறிதலில் வெண்கலம் வென்றுள்ளார்.

இவர் 16 வயதுப் பிரிவுக்கான வீராங்கனையாக இருந்த போதிலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான பிரிவில் குண்டெறிதலில் கலந்து கொண்டார்.

தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தினால் தேசிய மட்டத் தில் நடத்தப்படும் மாவட்ட தேசிய இளைஞர்கள் சேவை மன்றங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் நாவலப் பிட்டியில் நடைபெற்று வருகின்றன.

இதில் வவுனியா மாவட்ட தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் சார்பில் கலந்து கொண்ட இராஜமனோகரன் தர்சினி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

ஏற்கனவே பாடசாலை மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் இடம்பெற்ற போட்டிகளில் பதக்கத்தை வென்றுள்ளவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (உ-86)

# கூடைப்பந்தாட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்.மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை நடத்தும் முன்னாள் மாணவ முதல்வர் அமரர் பொன்.விபுலனந்தா வெற்றிக் கிண்ணத்திற்கான லீக் முறையிலமைந்த கூடைப்பந்தாட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற உள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பாடசாலை அணிகள் மட்டத்திலான இருபாலருக்குமான ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

காலை 8.30 மணி யாழ். மத்திய கல்லூரி 'ஏ' அணி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி.

முற்பகல் 9.30 மணி யாழ். மத்திய கல்லூரி 'பி' அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.

முற்பகல் 10.30 மணி யாழ். இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி.

**பெண்கள் பிரிவு**

பிற்பகல் 2.30 மணி வேம்படி மகளிர் கல்லூரி 'பி' அணி எதிர் யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

பி.ப. 3.30 மணி வேம்படி மகளிர் கல்லூரி 'ஏ' அணி எதிர் இராமநாதன் கல்லூரி.

• பி.ப. 4.30 மணி உடுவில் மகளிர் கல்லூரி கொக்குவில் இந்துக் கல்லூரி.

(உ-23)

# சண்டிலிப்பாய் இந்துக்கு மூன்றாமிடம்

வலி.வடக்கு,நவ.14

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மாதகல் சென்.ஜோசேப் மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவை இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் கடுமையாக மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஒரு கோலைப் பெற்று முன்னிலை பெற்ற நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஆதரவாளர்களின் பலத்த ஆரவாரத்திற்கு மத்தியில் களமிறங்கி மோதிக் கொண்டன.

தமது முழுமையான திறமையை வெளிப்படுத்தி விளையாடிய போதிலும் இரு அணிகளினாலும் கிடைத்த சந்தர்ப்பங்களை கோல்களாக மாற்ற முடியாது போய்விட்டது.

இரு அணிகளும் கோல் பெறாத நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல்கணக்கில் மாதகல் சென். ஜோசேப் வித்தியாலயத்தை வெற்றி கொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றது. (உ-86)

## சிநேகிதம் மலர.....



யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அணியினருக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணியினருக்கும் இடையிலான சிநேகிதபூர்வ உதைபந்தாட்டப் போட்டி கடந்தவாரம் [illegible] பெற்றது. சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன்ராஜா [illegible] இரு அணி வீரர்கள் மோதிக் கொள்வதையும் படத்தினில் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,நவ.14

அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகள் இடையே நடத்தப்படும் கிரிக்கெட் போட்டியில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்த வரோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது. ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும். (உ-23)

# நியூஸிலாந்துக்கு எதிராக நிதானமாக ஆடுகிறது இந்தியா




ஹைதராபாத், நவ.14

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளில் இந்தியா நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. நேற்றை ஆட்ட நேரமுடிவில் 178 ஓட்டங்களுக்கு அது 2 விக்கெட்டுகளை இழந்தது.

நியூஸிலாந்து அணி 4 விக்கெட்டுகளை இழந்து 258 ஓட்டங்கள் பெற்றிருந்தநிலையில் நேற்றுத் தனது இரண்டாவது நாளைத் தொடர்ந்து ஆடியது 350 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

சகீர்கான், ஹர்பஜன் சிங் திறமையாகப் பந்துவீசித் தலா நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினர். பின்னர் தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு சேவாக் உறுதியான அடித்தளமிட்டார். 15 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்ஸர் அடங்கலாக 120 பந்துகளில் 96 ஓட்டங்களைப் பெற்றார். மறுமுனையில் மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கம்பீர் அரைச்சதத்தைக் கடந்தார்.

அவர்களின் உறுதியான அடித்தளத்துடன் இந்திய அணி ஆட்ட முடிவின்போது 178 ஓட்டங்களைப் பெற்றது. டிராவிட் 7 ஓட்டங்களுடனும், டெண்டுல்கர் 11 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

சௌத்தி, விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

## குவைத் அணியிடம் இந்தியா தோல்வி

கொழும்பு, நவ.14

ஆசிய விளையாட்டு போட்டிக்கான உதைப்பந்தாட்ட லீக் போட்டியில் இந்திய அணி 0-2 என்ற கோல் கணக்கில் குவைத் அணியிடம் தோல்வி அடைந்ததுள்ளது. 16வது ஆசிய விளையாட்டு போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.இதற்கு கால்பந்து லீக் சுற்று ஆட்டங்கள் நடைப்பெறுகின்றன. இந்தியா, பாகிஸ்தான், ஜப்பான் உள்ளிட்ட 24 அணிகள் 6 பரிவுகளாக லீக் சுற்றில் விளையாடி வருகின்றன.டி பிரிவில் இந்திய அணி, குவைத், கத்தார், சிங்கப்பூர் அணிகளுடன் இடம் பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற 'டி பரிவு லீக் போட்டியில் இந்தியா, குவைத் அணிகள் மோதின.இதில் ஆட்டத்தின் ஆரம்பத்தில் சிறப்பாக விளையாடியது குவைத் அணி குவைத் வீரர் கலீத் அல் அஜ்மி, ஆட்டத்தின் 6வது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார் .இதனால் குவைத் அணி 1-0 என முன்னிலை பெற்றது.

இந்திய வீரர்கள், 2ஆவது பாதியிலும் கோல் அடிக்க முடியாமல் திணறினர். கடைசி கட்டத்தில் குவைத் வீரர் கலீத் அல் அஜ்மி(91வது நிமிடம்), மீண்டும் ஒரு கோல் அடித்து வெற்றியை உறுதி செய்தார். ஆட்டநேர முடிவில் இந்திய அணி 0-2 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்தது.




சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளிலிருந்து ஓய்வுப் பெறப்போவதாக இங்கிலாந்து அணியின் சிறந்த பந்து தடுப்பாளர்களில் ஒருவரான வெஸ் பராவுன் அறிவித்துள்ளார்.

இதேவேளை இங்கிலாந்து அணியின் கோல் காப்பாளர் ரோபன்சன் ஓய்வுப்பெறப் போவதாக அறிவித்துள்ளார். இவர்கள் இருவருக்கும் தென்னாபிரிக்காவில் நடந்து முடிந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் வாய்ப்பு அளிக்கபடவில்லை. இருப்பினும் அவர்கள் இருவரும் புதன்கிழமை ஹங்கேரியில் நடைபெற வுள்ள போட்டிகளில் பங்குகொள்ள இருந்தனர்.

இது தொடர்பில் போல் வெஸ் பராவுன் கருத்து தெரிவிக்கையில், ஓய்வுபெற இதுவே சிறந்த தருணமாகும் . எனக்கு தற்பொழுது 30 வயதாகிறது என்பதால் இளைய வீரர்களுக்கு சந்தர்ப்பங்களை அளிக்கவேண்டும். நான் இங்கிலாந்து அணிக்காக விளையாடியதையிட்டு பெருமை அடைகிறேன். இங்கிலாந்து அணி எதிர்காலத்தில் சிறப்பாக விளையாடும் என நம்புகிறேன் என்றார்.

அத்துடன் இங்கிலாந்து அணி வீரர்களுக்கும் அதன் பயிற்றுவிப்பாளர் களுக்குமிடையில் சிறந்த உறவு முறை இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இங்கிலாந்தின் நட்சத்திரவீரர் வெஸ் பராவுன் ஓய்வு

## ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசையில் இந்தியா பின்னடைவு



கொழும்பு, நவ.14

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அவுஸ்திரேலிய மண்ணில் முதன் முறையாக ஒருநாள் தொடரைக் கைப்பற்றிய இலங்கை அணி ஐ.சி.சி. ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் இந்தியாவைப் பின்னுக்குத் தள்ளி இரண்டாம் இடம் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியா தோல்வி தழுவினாலும் இரண்டு தரவரிசைப் புள்ளிகளை மட்டும் இழந்து தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது.

இந்தியா மீண்டும் 2ஆம் இடம் செல்ல வேண்டுமென்றால் நியூஸிலாந்துக்கு எதிராக நடைபெறும் ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் அனைத்துப் போட்டிகளையும் வெல்வது அவசியம்.

நியூஸிலாந்தை 4-1 என்று இந்தியா வீழ்த்தினால் 118 புள்ளிகள் பெற்று இலங்கையின் தரவரிசைப் புள்ளிகளுடன் சமன் செய்யும்.

115 புள்ளிகளுடன் தென் ஆபிரிக்கா 4ஆம் இடத்திலும், 112 புள்ளிகள் பெற்று இங்கிலாந்து 5ஆம் இடத்திலும் உள்ளது.

100 புள்ளிகள் பெற்று பாகிஸ்தான் 6ஆம் இடத்தில் உள்ளது. 7-வது இடத்தில் நியூஸிலாந்து 8ஆம் இடத்தில் மேற்கிந்திய தீவுகள் 9ஆம் இடத்தில் பங்களாதேஷ் 10-வது இடத்தில் அயர்லாந்து அணிகள் உள்ளன.

கடைசி 3 இடங்களில் முறையே சிம்பாப்வே, ஹொலண்ட், கென்யா ஆகிய அணிகள் உள்ளன.

## இந்தியாவுக்கு வெள்ளி

ஆசிய விளையாட்டு போட்டி ஆண்கள் துப்பாக்கி சுடுதலில், இந்தியாவின் அபினவ் பந்த்ரா, ககன் நரங், சஞ்சீவ் ராஜ்புட் ஜோடி வெள்ளிப் பதக்கம் கைப்பற்றியது. தனி நபர் பிரிவில் இந்தியாவின் ககன் நரங், வெள்ளி வென்றார்.

ஆண்கள் துப்பாக்கி சுடுதல் 10., ஏர் ரைபள் பிரிவில் போட்டிகள் நடந்தது. இதில் இந்தியாவின் அபினவ் பந்த்ரா, ககன் நரங், சஞ்சீவ் ராஜ்புட் ஜோடி 1783 புள்ளிகள் பெற்றது.

சீனாவின் ஜிகாங் யு, குயினன், காவோ ஜோடி முதலிடத்தை பிடித்து தங்கத்தை கைப்பற்றியது.

கொரியாவுக்கு வெண்கலம் கிடைத்தது.

ஆண்கள் தனிநபர் 10 மீ ஏர் ரைபள் பிரிவில் இந்தியாவின் ககன் நரங், 700.7 புள்ளிகள் பெற்று வெள்ளிப் பதக்கத் தைக் கைப்பற்றினார். சீனாவின் குயினன், 702 புள்ளிகளுடன் தங்கம் வென்றார்.



அபினவ் பிந்த்ரா ககன் நரங்




## அமெரிக்கவாசி ஆகிறார் பெக்கம்




இங்கிலாந்து, நவ.14

இங்கிலாந்து தேசிய உதைப்பந்தாட்ட அணியின் நட்சத்திரவீரரான டேவிட் பெக்காம் அமெரிக்கக் குடியுரிமையை பெற உள்ளார்.

அமெரிக்கக் கழகமான லா கெலக்ஸி இல் கடந்த 2007 ஆம் ஆண்டிலிருந்து பெக்காம் விளையாடி வருகின்றார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பெக்காம் அமெரிக்க குடியுரிமையை பெற ஆவலாகவுள்ளார் எனினும் தன் எப்பொழுதும் உண்மையான இங்கிலாந்து வாசிதான் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது மனைவி மற்றும் குழந்தைகள் அமெரிக்காவில் அதிக மகிச்சியுடன் உள்ளார்கள் எனவும் அதன் காரணமாகவே இம்முடிவை மேற்கொண்டார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் வாசிகளுக்கு இரட்டை குடியுமை பெறுவதற்கு அந்நாட்டில் அனுமதியுண்டு என்பதும் இங்கு குறிப்படத்தக்கது.

(உ-10-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணி பழனிநாதன்



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி பழனிநாதன் நேற்று (13.11.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பழனிநாதனின் அன்பு மனைவியும், ஜெயந்தினி, தருமராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜீவதாஸ், சோபனா ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜன், ஜெயசங்கரி, கீர்த்தனா, றஜனிக்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2010) ஞாயிறு மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/2, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தகவல்: குடும்பத்தினர். (105952)

## திருமதி அன்னரத்தினம் சண்முகம்



காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னரத்தினம் சண்முகம் நேற்று (13.11.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விக்கிரமசிங்கம், சபாநாயகம் (Doctor), புஷ்பராணி (Doctor) மற்றும் தவராஜசிங்கம் (கனடா), ஜெயபாலசிங்கம் (கனடா), வசந்தராணி ஆகியோரின் அன்புத் தாயும் புஷ்பராணி, பரமேஸ்வரி, கமலராணி, சியாமளா, இளங்கோ ஆகியோரின் அன்பு மாமியாரும், சதீஸ், வளர்மதி, சதீபன், தர்ஷினி, யாழவன், ஆதவன், மயூரன், சங்கவி, பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், விஜுசன், சயந்தினி, சனுசன், சாருசன், அதிசயா, அபூர்வா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு. தகவல்: பிள்ளைகள், மருமகன்.

## கணபதிப்பிள்ளை கார்த்திகேசு

''செல்விவளவு'', இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கார்த்திகேசு நேற்று (13.11.2010) சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னமணியின் அன்புக் கணவரும், பிள்ளை (கனடா), பூலோகம், ஈஸ்வரி (ஆசிரியை, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சிவம் (ஆசிரியர், யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), யோகலிங்கம் (கனடா), சிறிநவக்கிளி (கனடா), ஈஸ்வரலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேந்திரம் (கனடா), கோபாலகிருஷ்ணன், குட்டித்தம்பி, சிவசாந்தி (ஆசிரியை, யா/ அல்வாய் றோ. க. த. க. பாடசாலை), உமா (கனடா), ரகுமதி (கனடா), கௌரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிரிசாந்தன் (முகாமைத்துவ உதவியாளர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், யாழ். செயலகம்), சித்திராங்கி (ஆசிரியை, தேவரையாளி இந்துக் கல்லூரி), ருஷ்யந்தன் (ஆசிரியர், மட்டக்களப்பு கல்லடி விபுலானந்தா மகா வித்தியாலயம்), கிருஷ்ணாந்தி, அனுஷாந்தன், கிருஷ்ணப்பிரியா (மாணவி-Kursk State Medical University, Russia), மகிழ்ப்பிரியா, புவிசாந்தன், குணாளன் (றுகுணு பல்கலைக்கழகம், மாத்தறை), கார்த்தியாளன் (சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்), கார்த்தியாஸ், கார்த்திகாயன், கார்த்திகப்பிரசாந், கார்த்திகப்பிரகாஷ், கார்த்திகப்பிரியா, கனடா வாழ் சிவாஸ்கர், விக்னா, செந்தீரன், ரஞ்சனி, யாழேந்திரன், சஜுஜா, பிரியங்கா, உமையங்கா, வாரணன், கார்த்திஜா, சின்ன கார்த்தின், சுவிஸ் வாழ் கார்த்தியன், கார்த்தி மணிரா ஆகியோரின் அன்புப் பேரனும், கிசானன், அபிசாந், கனடா வாழ் சிவஞ்ஞன், இதன், ரிதன், யசிக்கா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''செல்விவளவு'', இமையாணன், உடுப்பிட்டி. (சி/572842) தகவல்: குடும்பத்தினர்.

## சேவை நலன் பாராட்டு

காரைநகர், நவ.14

இலங்கை போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை முகாமையாளராகக் கடமையாற்றி நாளை மறுதினம் ஓய்வு பெறும் கே.சி.கந்தசாமியின் சேவை நலன் பாராட்டு விழா எதிர்வரும் புதன் கிழமை இடம்பெறவுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை காரைநகர் சாலையில் சாலையின் செயலாற்று உதவி முகாமையாளர் தலைமையில் இவ்விழா இடம்பெறவுள்ளது. (ம-250)

## மரக்கன்றுகளை நாளை அதிபர்கள் பெறலாம்

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கான மரக்கன்றுகள் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அந்தந்த கோட்டக்கல்வி அலுவலகங்களில் வைத்து வழங்கப்படவுள்ளன.

எனவே சகல பாடசாலை அதிபர்களும் தமக்குரிய மரக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கேட்டுள்ளார். (ஒ-16)

## அனுமதிப் பத்திரமின்றி 20கிலோ மாட்டிறைச்சியுடன் வந்தவர் பிடிபட்டார்

தென்மராட்சி, நவ.14

அனுமதிப்பத்திரமின்றி 20 கிலோ மாட்டிறைச்சி கொண்டு வந்த நபரை மீசாலையில் வைத்து சாவகச்சேரி பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

கடந்த புதன்கிழமை கைது செய்த இந் நபரை பொலிஸார் சாவகச்சேரி நீதி மன்றில் ஆஜர் செய்யவுள்ளனர். (201-207)

## கொடிகாமத்தில் மானிய உரம் விநியோகம் ஆரம்பம்

கொடிகாமம், நவ.14

கொடிகாமம் கமநல சேவை நிலையத்தின் ஊடாக வழங்கப்பட்டுவரும் மானிய உரம் தற்போது இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டுவருவதாக பெரும் போக உத்தியோகத்தர் அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

இதன் பிரகாரம் நாளை திங்கட்கிழமை வரணி இயற்றாலை பிரதேசத்துக்கும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மந்துவில் வடக்கு, மந்துவில் கிழக்கு மற்றும் மீசாலை பிரதேசத்துக்கும் - 17 ஆம் திகதி புதன்கிழமை நாவற்காடு மற்றும் கெற்பேலி பிரதேசத்துக்கும், 18 ஆம் திகதி வியாழக்கிழமை வரணி வடக்கு மற்றும் எழுதுமட்டுவாள் பிரதேசத்துக்கும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாசேரி பிரதேசத்துக்கும் உரம் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-16-122)

# துயர் பகிர்வு

எமது கல்லூரி அதிபர் திரு. இ.ஓங்காரமூர்த்தி அவர்களின் அன்பு மாமியார்

## திருமதி கமலம் பாலசுப்பிரமணியம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம், யாழ்.மத்திய கல்லூரி.

குறிப்பு: கொழும்பில் நாளை (15.11.2010) திங்கட்கிழமை இடம்பெறவுள்ள இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு ஆசிரிய வட்டம் ஏற்பாடு செய்துள்ளது. இன்று இரவு செல்ல விரும்புபவர்கள் கீழ் வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

0776169716, 0777244358

# மரண அறிவித்தல்

## கெர்ரர் ஜோண்பிள்ளை

(இளைப்பாறிய D.A.பெருந்தெருக்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், 6ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கெர்ரர் ஜோண்பிள்ளை (இளைப்பாறிய D.A.பெருந்தெருக்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்) 16.10.2010 அன்று கனடாவில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோண்பிள்ளை -அந்தோனியா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான கென்றி மனுவல்-ஆன் மற்றில்டா ஆகியோரின் அன்பு மருமகனும், மேசியின் (இளைப்பாறிய ஆசிரியை) ஆருயிர்க் கணவரும், அன்ரன் பிரபாகரன் (கனடா), யூட் சுதாகரன் (கனடா), மேரியெல் சுவர்ணஜா (பபா-நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிந்தியா (கனடா), ரஞ்சினி (கனடா), மனோகுணசிங்கம் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், பற்றிசியா, ஜசிக்கா, கிறிஸ்ரா (கனடா), வினோத், வினோஜா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற றோஸ் ஆசீர்வாதம் மற்றும் பேபி அருளப்பு ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற யூலியஸ், ஆனந் மற்றும் சற்குணம், டிவி, தங்கம், மனோ, ஜோ.பெல்சி ஆகியோரின் பெரியண்ணாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23.10.2010 அன்று கனடா மார்க்கம் நகரில் அமைந்துள்ள புனித பத்திரிசியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுத்த பின்னர் கிறீஸ்து அரசர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(105958) தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரர் (கனடா).

# மரண அறிவித்தல்



## சூசைப்பிள்ளை மேரிமாகிறேற் (செல்லம்)

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரிமாகிறேற் (செல்லம்) கொழும்பில் (11.11.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை (செல்லத்துரை)யின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான யோட்ற், எட்வேட் மற்றும் ஸ்ரெல்லா (கனடா), மேரிறீற்றா (வவா - அட்லஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ், யாழ்ப்பாணம்), எமலியானுஸ் (துரை -சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராணி (இளவாலை), ரேணுகா (கனடா), காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், பாலசிங்கம் (குகதாசன்) மற்றும் றெறி (கொழும்பு) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 39, சேச் றோட், மட்டக்குளிய, கொழும்பு 15 இல் உள்ள அவரின் இல்லத்தில் இருந்து 16.11.2010 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு மாதம்பிட்டிய மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/3, கோவில் வீதி, யாழ்ப்பாணம். தகவல்: திருமதி மேரிறீற்றா குகதாசன் (வவா - மகள்). 021 222 7599, 0777 777384 (100950)






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நல்லிணக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில பெண்கள் இரகசியமாகவும் சாட்சிய மளித்தனர்.

வடமராட்சி கிழக்கில் குடத்தனை, தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான விசாரணையின் போது குடத்தனை அமெரிக்க மிஷன் பங்குத் தந்தை, வட மராட்சி கிழக்குப் பிரதேச சமூக சேவை யாளர்களில் ஒருவரான ஆ.ஸ்ரனிஸ் லோஸ், சி.பசுபதி, ஆழியவளையைச் சேர்ந்த கணேசலிங்கம், சரோஜாதேவி, மாயாவள்ளிப்பிள்ளை, ஆ.சௌந்தர ராஜா, தாளையடியைச் சேர்ந்த செல் லையா பரமானந்தன், கஸ்ராதா, மு.வசந்த ராணி, மருதங்கேணி வடக்கு பிரசாந்தன் அனுஷியா, அம்பனைச் சேர்ந்த புவனேஸ் வரன் மகேஸ்வரி, தங்கராசா சித்திரா தேவி ஆகியோர் ஆணைக்குழு முன் தோன்றிச் சாட்சியமளித்தனர். இவர்கள் தவிர்ந்த ஏனையோர் எழுத்துமூலம் தமது சமர்ப்பணங்களைச் சமர்ப்பித்தனர். அங்கு மொத்தமாக 106 பேர் சாட்சிய மளித்ததுடன் சமர்ப்பணங்களையும் செய்திருந்தனர்.

பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி திருமண மண்டபத்தில் நடைபெற்ற விசாரணையின்போது ஆசி ரியர் ராஜகுமார், சிவஞானம் செல்வ தீபன், சுப்பிரமணியம் நந்தபாலன், செல் லத்துரை தனபாலசிங்கம், கந்தவனம் கதிர்காமத்தம்பி, ஜெ.வற்சலா, வல்லி புரம் மார்க்கண்டு, ரஞ்சிதம், ரஞ்சினி, பாலகுமார் ரோகிணி, பாலசுப்பிரமணி யம் யோகநாயகி, பிரேமசிறி சுதர்சினி ஆகியோர் ஆணைக்குழுமுன் தோன்றிச் சாட்சியமளித்தனர். இவர்கள் உட்பட 160 க்கும் அதிகமானோர் எழுத்துமூலம் சமர்ப்பணங்களைச் சமர்ப்பித்தனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் இடம் பெற்ற ஆணைக்குழு விசாரணைகளின் போது ஆணைக்குழுத் தலைவர், உறுப் பினர்கள் தமது இருக்கைகளிலிருந்து மண்டபத்தில் தனித்தனியாகவும் இருவ ராகவும் சென்று சாட்சியமளித்தவர்க ளுடன் உரையாடிப் பிரச்சினைகளைக் கேட்டறிந்து எழுத்துமூலம் சமர்ப்பணங் களையும் விவரங்களையும் பெற்றுக் கொண்டனர். மாலை 4 மணியுடன் நெல்லியடியில் விசாரணைகள் முடிந் தன. (ஒ-236)


**வேலை ஆள் தேவை**

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு
சந்தைபடுத்தல்
உத்தியோகத்தர் தேவை.
தொடர்புகளுக்கு:- 0773427843


# வெள்ளைக் கொடியுடன் படகில் தப்பிச் சென்றவேளை கடற்படையினர் எம் மீது தாக்குதல் நடத்தினர்

### இச்சம்பவத்தில் நால்வர் பலியாகினர் என ஆழியவளை வாசி தெரிவிப்பு

குடத்தனை, நவ.14

பாதுகாப்புத் தேடி நாங்கள் வெள் ளைக்கொடியுடன் படகில் வந்தபோது, கடற்படையினர் எம்மீது தாக்குதல் நடத்தி னர். இதில் எம்முடன் பயணித்த நால்வர் பலியானார்.

- இவ்வாறு புடையினரின் கட்டுப்பாட் டுப் பிரதேசத்துக்குத் தப்பிவரும்போது நிகழ்ந்த அவலத்தை விவரித்தார் ஆழிய வளையைச் சேர்ந்த செல்லையா பர மானந்தம் என்ற பொதுமகன்.

குடத்தனையில் நல்லிணக்க ஆணைக் குழுவின் அமர்வு நேற்று நடைபெற்றபோதே இவர் இவ்வாறு சாட்சியமளித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

வன்னியில் கடைசி நேரத்தில் உயிர் பிழைப்போம் என்று எவருமே எண்ண வில்லை. உடைமைகள் யாவற்றையும் இழந்துவிட்டோம். இருக்கும் உயிரையா வது காப்பாற்றிக் கொள்வோம் என்று பலமுறை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேற முயற்சித் தோம். ஆனால் முடியவில்லை.

இறுதியாக ஒருநாள் வெள்ளைக் கொடி கட்டப்பட்ட படகொன்றில் நாங் கள் புறப்பட்டோம். அதிகாலை 2 மணி யளவில் சுண்டிக்குளம் கடற்பரப்பில் எமது படகு மீது கடற்படையினர் சரமாரியான தாக்குதல்களைத் தொடுத்தனர். இதனால் எம்மோடு பயணித்தவர்களில் நான்கு பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்ட னர். இதில் எனது மகளின் கணவருக்கும் காயம் ஏற்பட்டது. பின்ன எமது படகை நெருங்கிய கடற்படையினர் எம்மைப் புல் மோட்டைக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு எனது மருமகனின் காயத்துக் குச் சிகிச்சை அளிப்பதாகக் கூறி அவ ரைத் தனியே அழைத்துச் சென்றனர். எனினும் இதுவரை அவரை விடுவிக்க வும் இல்லை; இருக்கும் இடத்தைச் சொல்லவுமில்லை. எங்கிருக்கிருக்கிறார் என்பதே தெரியாத நிலையில் அவரைத் தொடர்ந்து தேடி வருகின்றோம். இந் நிலையில் நல்லிணக்க ஆணைக்குழு வினர் எனது மருமகனின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்க ஆவண செய்ய வேண்டும். - என்றார்.

(ஒ-எ-15)

## கடந்த கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தவை வருமாறு-

ஆட்சிக் கட்டிலேறிய இலங்கையின் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களின் உணர்வுகள், தேவைகள் என்பவற்றைப் புரிந்துகொள்ளவில்லை. இதனால் தமிழ் மக்கள் மீது பலவித அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. தனிச்சிங்களச் சட்டம், பல்கலை அனுமதியில் தரப் படுத்தல், யாழ்.நூலக எரிப்பு, 83 ஏற்பட்ட இனக்கலவரம் என்பனவெல்லாம் இந்த அடக்குமுறையால் நிகழ்ந்தவையே.

இதன் விளைவாகப் பல்வேறு வழி களிலும் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனினும் போரினால் எமது நாட்டில் நினைத்துப் பார்க்கவே முடியாத அழிவுகள் ஏற்பட்டது. எனவே போரற்ற சூழலில், சமாதானம் நீடித் திருக்கக்கூடிய வகையில் சில நடவடிக் கைகளை அரசு மேற்கொள்ள வேண் டும்.

- உயர்பாதுகாப்பு வலயங்களில் மக் களை மீளக்குடியமர அனுமதிக்க வேண் டும்.

- ஏனைய இடங்களிலும் மீள்குடியே றாமல் இருக்கும் மக்களை உடனடியாக மீளக் குடியேற்ற வேண்டும்.

- மீளக்குடியேறியோருக்கு பாதுகாப்பு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல். தமிழ்ப் பிரதேசங்களில் நிர்வாக அதி காரிகளாகத் தமிழர்களையே நியமிக்க வேண்டும்.

- தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளை ஞர்கள் விடுதலை செய்யப்பட வேண் டும்.

- சகல தமிழ்க் கட்சிகளுடனும் தமிழர்களின் பிரச் சினைக்கான தீர்வு குறித்து அரசு திறந்த மனத்துடன் பேச வேண் டும்.

- இவ்வாறு சாட்சியமளித்தார்.

இதற்குப் பதிலளித்த ஆணைக்குழு வின் தலைவர் சீ.ஆர்.டி.சில்வா -

உங்களது ஆலேசனைகளை நாங்கள் கவனத்திற் கொள்கின்றோம். தடுப்பில் உள்ள இளைஞர்களை விடுவிக்குமாறும், அல்லது சட்ட ரீதியான முறையில் நட வடிக்கை எடுக்குமாறும் எமது இடைக் கால அறிக்கையில் சிபாரிசு செய்துள் ளோம்.

இந்த இடைக்கால அறிக்கையில் உள்ள விடயங்களைப் பரிசீலித்து நடைமுறைப்படுத்த குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் கூறியதைப் போன்று 1981 இல் நடந்த யாழ். நூலக எரிப்பும், 1983 இல் ஏற்பட்ட இனக்கலவரமும் இலங்கை யின் வரலாற்றில் அசிங்கமான - கறை படிந்த - சம்பவங்கள்.

இவை போன்ற நிலைமைகள் இனி யும் ஏற்படாதிருக்கும் வகையில் ஆணைக் குழுவின் அறிக்கை அமையவுள்ளது - என்றார்.

### முன்னாள் உதவி அரச அதிபர் பசுபதி சாட்சியம்

நேற்றை தினம் இடம்பெற்ற இந்த அமர்வில் சாட்சியமளித்த மருதங்கேணி முன்னாள் உதவி அரசாங்க அதிபரான சிதம்பரப்பிள்ளை பசுபதி -

மருதங்கேணி பருத்தித்துறை வீதி மூடப்பட்டிருப்பதால் மக்கள் எதிர்கொள் ளும் நெருக்கடி நிலை பற்றி ஆணைக்குழு வின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப் பட்டிருக்கும் இந்த வீதியை மீளத்திறந்து மக்களின் நெருக் கடிகளைத் தீர்க்கு மாறு ஜனாதிபதி யிடம் சிபாரிசு செய் வோம் எனஇதற்குப் பதிலளிக்கும்போது ஆணைக் குழுத் தலைவர் உறுதி யளித்தார்.

(ஒ-எ-15)

## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொந்த அரசியல் சாணக்கியங்களைக் கடைப்பிடித்து இலங்கை அரசுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணப்பட வேண் டும்." இதுவே இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு. இதற்கு உதாரணமாக இந் திய வம்சாவளி மக்களுக்குக் குடியுரிமை பெற்றுத் தருவதற்கு அமரர் தொண்டமான் கையாண்ட அரசியல் மூலோ பாயங் களை புதுடில்லி அரசபீடம் தமிழ்த் தலைமை களுக்குச் சுட்டிக்காட்டி உள் ளது.

தனது இந்த நிலைப்பாட்டை இறுக்க மாகப் பேண முடிவு செய்துள்ளதால் அமைச்சர் கிருஷ்ணாவின் பயணத்தின் போது தீர்வு விடயம் குறித்து இலங்கை அரசுடன் அதிகம் பேசப்படாது என புது டில்லி வட்டாரங்கள் கூறுகின்றன. ஒப் புக்கு மட்டும் பேச்சுமூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் எனக்கூறப்படும். இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவு படுத்துமாறு வலியுறுத்துவ தற்குப் பதிலாக, இந்தியா வழங்கும் உதவிக ளுக்கான பணிகளை விரைவுபடுத்து மாறே கிருஷ்ணாவின் பயணத்தின்போது இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக் கப்படும் என்கின்றன புதுடில்லி வட்டா ரங்கள்.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கி யுள்ளவர்களைச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவது, இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வுக்காக வீடமைப் புத் திட்டத்தை செயற்படுத்துவது, ரயில் பாதை புனரமைப்பது போன்ற உதவித் திட்டங்களை இலங்கையில் செயற் படுத்த இந்தியா முன்வந்துள்ளது. இத்திட் டங்களை விரைவுபடுத்துமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது பய ணத்தில் இலங்கை அரசிடம் வலியு றுத்துவார்.

மக்களுக்கான மனிதாபிமான உதவி களை மையப்படுத்தி இந்தியா வழங்கி யுள்ள உதவிகளை இலங்கை அரசு சரி யான முறையில் பயன்படுத்த வேண் டும் என்றும் வெளிவிவகார அமைச்சர் இலங்கை அரசிடம் கோரவிருக்கின்றார்.

எது எப்படி இருப்பினும் இலங்கை யில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு இந்தியா தார் மீக ஆதரவைத் தொடர்ந்து வழங்கும் என்று புதுடில்லி அதிகாரிகள் தெரிவித் தனர். (உ-ஐ)


**பணிப்பெண்கள் தேவை**

மிக்ஷர் உற்பத்தி நிலையத்துக்கு
பணிப்பெண்கள் தேவை.
தொடர்பு: பொ.சண்முகராசா (சந்திரன்)
நாவலடி, அரியாலை, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி கமலம் பாலசுப்பிரமணியம்

யாழ்.கொட்டடியைப் பிறப்பிடமாகவும் நீராவியடி கடை யிற்சுவாமி கோயிலடி ஒழுங்கையை வசிப்பிடாமாகவும் தற் போது மொறட்டுவ சொய்சாபுரத்தில் வசித்தவருமாகிய திருமதி கமலம் பாலசுப்பிரமணியம் நேற்று (13.11.2010) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நயினாதீவு காலஞ்சென்ற ராமலிங்கம் - மாணிக் கம் தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற பாலசுப்பிர மணியத்தின் அன்பு மனைவியும் ஸ்ரீரங்கநாதன், பேராசிரியர் இராஜேஸ்வரன் (புவியியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), நாகேஸ்வரன், துரைசிங்கம் (யு.என்.எச்.சி.ஆர்), சரஸ்வதி, சிறிகாந்தன் (பிரான்ஸ்), ஸ்ரீரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மாலினி, கௌரி, சாவித்திரி, ராதா, ஓங்கார மூர்த்தி (அதிபர், யாழ்.மத்திய கல்லூரி), அன்பரசி, ரவிராஜ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீமகள், பிரசன்னா, பிரணவன், ராஜ்குமார், வினோத்குமார், கஜன், ராகுலன், சிவாக்ஸ்மன் (மாணவன், கொழும்பு இந்துக் கல்லூரி), நிரந்தரா, விராஜிதா, அகல்யா, அகிலன், ஜீவா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தக்ஷிகனின் பூட்டியும் மனோரஞ்சிதம் - மகேசன், பாக்கியம் - Dr.தியாகர் திருநாவுக்கரசு (சட்டத்தரணி) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.11.2010) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணிமுதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலை யில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (15.11.2010) திங்கட் கிழமை பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

C 37, ½, சொய்சாபுர தொடர்மாடி,
மொறட்டுவ.
0112625534, 0718084818
0776154776

தகவல்:
எல்.ஓங்காரமூர்த்தி
(அதிபர், யாழ்.மத்திய கல்லூரி),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


**COMPUTER FOR SALE**
T.P : 021-222 4459, 0774192275
Intel 2.93 Core 2 Dou , Intel Mother Board, 2GB Ram, 320GB HDD, DVD Writer, ATX Casing, 17"Monitor, அனைத்தும் Rs.39,750/= மட்டுமே (2,வருட உத்தரவாதம்)
*1GB High End Graphics Card-9250, DVD Combo-950, Wireless Mouse-875, 7.2M Multi Dongle- 6250. With Warraty
STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

**CALL SERVICE**
T.P : 021-222 4459, 0774192275
Computer,(Laptop, Desktop) Mobile Phone, TV, DVD Player, Monitor (LCD, CRT) Power Supply, UPS, Printer, உட்பட இலத்திரனியல் பொருட்கள் உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து உத் தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.
STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

**கணனி வகுப்புகள்**
T.P : 021-222 4459, 0774192275
MS Office, DTP, Hardware Technology, Internet & E-Mail, Visual Basic, என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப் படும், (Personal & Group Classes) பரீட்சை முடிவின் பின்னர் பெறுமதியான சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம். தொழில் புரிபவர்கள், பாடசாலை மாணவர்களுக்கு விஷேட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. (DURATION 01,MONTH)
STR COMPUTER SYSTEM
384, NAVALAR ROAD, NALLUR, JAFFNA.


## மரணச் சடங்கு நன்றி நவிலல்



### அமரர் செல்லம்மா செல்லத்துரை

பிறப்பு 06.12.1932 மறைவு 01.11.2010

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் இறுதிச் சடங்கில் (2010.11.01) கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நெல்லியடி,
கரவெட்டி.

சி.நற்குணலிங்கம் (மருமகன்)
அதிபர்- யா/சிதம்பராக் கல்லூரி
திருமதி மனோகரி நற்குணலிங்கம்(மகள்)
ஆசிரியை- யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைகளின்போது பி.பி.ஸி. செய்தி சேகரிக்க ஜனாதிபதி அனுமதி

கொழும்பு,நவ.14

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளில் செய்தி சேகரிப்பதற்கு பி.பி.ஸி செய்தி ஊடகத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அனுமதி வழங்கியுள்ளார்.

எதிர்காலத்தில் எங்கு ஆணைக்குழு விசாரணை நடக்கின்றதோ, அங்கு பி.பி.ஸி செய்தியாளர்கள் சென்று செய்தி சேகரிக்கலாம் என்று ஜனாதிபதி பணித்துள்ளார் என்று பி.பி.ஸி செய்திச் சேவைப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நடந்த அமர்வுகளில் செய்தி சேகரிக்க அனுமதி வழங்கப் பட்டது. எனினும் செப்ரெம்பர் மாதம் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட் டங்களில் நடந்த அமர்வுகளில் செய்தி சேகரிக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமான அமர்வுகளில் செய்தி சேகரிப்பதற்கு பி.பி.ஸி செய்திச் சேவை அனுமதி கோரியிருந்தது. அதற்கு அரசு அனுமதி வழங்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் விசாரணைகள் ஆரம்பமாகி 72 மணி நேரத்தில அமர்வுகளில் செய்தி சேகரிக்க பி.பி.ஸி க்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

சாவகச்சேரியில் நேற்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் அமர்வில் செய்தி சேகரிக்கலாம் என்று பி.பி.ஸி க்கு நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## கே.கே.எஸ்.வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 9 மணிக்கு புத்தூர் சோமஸ் கந்தக் கல்லூரியில் இடம்பெறும் நிகழ்வு ஒன்றிலும் பஸில் ராஜபக்ஷ கலந்து கொள்ளுவார்.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல, பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடக்கு மாகாண ஆளுநர் ஜி. ஏ. சந்திரசிறி, யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ஒ-ஐ-23-86)

## காணாமற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாளர் நுவான் போபகே கேட்டுள்ளார்.இந்த ஆர்ப்பாட்டத்தில் புத்திஜீவிகள், மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் பங்கு பற்றுமாறும் அவர் கேட்டுள்ளார்.

தமது கோரிக்கையை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் ஒன்றையும் அன்று நடத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஒ-ஐ)

# பதவியேற்பு நிகழ்வை ஒளிபரப்ப அல்-ஜஸீராவுக்கும் நேற்று அனுமதி

கொழும்பு, நவ. 14

ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வில் செய்தி சேகரிக்க அல்-ஜஸீரா தொலைக்காட்சி நிறுவனத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அனுமதியளித்துள்ளார்.

ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வுகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்ப அனுமதிக்குமாறு அந்த நிறுவனம் இலங்கை அரசிடம் கோரியிருந்தது.

யுத்தத்தில் இறுதி நாள்களில் இடம் பெற்றன என்று கூறப்படும் மனிதப் படுகொலைகளுக்கு ஆதாரங்களாக இருக்கலாம் என்று தெரிவித்து இந்தத் தொலைக்காட்சி நிறுவனம் புகைப் படங்கள் சிலவற்றைக் கடந்த புதன்கிழமை வெளியிட்டிருந்தது.

அதையடுத்து இலங்கைக்கு எதிரான அவதூறுப் பிரசாரத்தில் அல்-ஜஸீரா ஈடுபட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இந்த நிறுவனம் இலங்கைக்குள் வருவதற்கும் அரசு அனுமதி மறுத்திருந்தது.

இந்நிலையில் தமது பதிவியேற்பு நிகழ்வில் செய்தி சேகரிக்க அல்-ஜஸீராவுக்கு அனுமதிவழங்கியுள்ளார்ஜனாதிபதி.(ஒ-ஐ)

# வலி.வடக்கு வித்தகபுரத்தில் மீள்குடியமர்வு ; முன்னேற்பாடு குறித்த சந்திப்பு நாளை

யாழ்ப்பாணம்,நவ.14

வலி.வடக்கின் வித்தகபுரத்தில் மக்கள் மீள்குடியமர்வுக்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு பன்னாலை கனகசபை வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வலி.வடக்கு பிரதேச செலயர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், மீளக்குடியமரவுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வசதி, தற்காலிக குடியிருப்பு ஆகியன தொடர்பாக ஆராயப் படவுள்ளது.

இளவாலை வட மேற்குப் பிரதேசத்தில் மீளக்குடியமரவுள்ள மக்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து இளவாலை வடக்கு மக்களுக்கான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்றும் அது தொடர்பான திகதி இன்னமும் முடிவு செய்யப் படவில்லை என்றும் பிரதேச செயலர் முரளிதரன் தெரிவித்தார். (ஒ-ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்க வேண்டிய அடுத்த கட்ட செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து வருகின்றன என்றும் ஜனாதிபதி அடுத்த பதவிக்காலத்தைப் பொறுப்பேற்ற பின்னர் அரசும் - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் நேரடியாக பேச்சுக்களில் ஈடுபடவிருக்கின்றன என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இரு தரப்பும் இணைந்து அமைக்கவிருக்கும் அரசியல் தீர்வுக்கான குழு, புனர்வாழ்வுக்காண குழு ஆகியன தொடர்பாக இந்தப் பேச்சுக்களில் இணக்கம் ஏற்படும் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை தொடர்பாக நூலகருடன் கலந்துரையாடி பலதரப்பட்ட விடயங்களையும் கேட்டறிந்து கொண்டார்.

தனிப்பட்ட விஜயமாகவே அவர் யாழ்ப்பாணம் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ-120)


**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

யாழ் நகரில் இருந்து 3 km தூரத்தில் யாழ். பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு கோயில் வீதியில் 4 பரப்புக் காணியில் தனி வீடு, நன்னீர் தனிக் கிணறு மற்றும் இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0783251872

**கார் விற்பனைக்குண்டு**

16-xxxx ***NISSAN SUNNY (B-12)***

கார் விற்பனைக்குண்டு.

Tel No : 0774826832

**காணியும் வீடும் விற்பனைக்கு**

உடுவில் டச்வீதியில் அமைந்துள்ள 6 பரப்புக் காணியும் வீடும் பயன்தரு மரங்களுடனும் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

T.P : 0785389338

**உடனடியே...**

* IELTS
* Spoken English

20.11.2010

ஆரம்பமாகிறது

- குறைந்த கட்டணம்.
- பல்கலைக்கழக ஆசிரியர் குழு.
- பல்கலைக்கழக மாணவர்களுக்காகவும், வேறு மாணவர்களுக்காவும் தனி வகுப்புகள்.
- பயிற்சி நெறி முடிவில் விரும்பியோருக்கு வெளிநாட்டு பல்கலைக்கழக அனுமதி.

★ 14ஆம் திகதியில் இருந்து அனுமதிகள் வழங்கப்படும்.
★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்பு :-

**European College of Higher Studies**

315 ½, Parameswara junction,
Palaly Road, Jaffna

Tel :- 0771882507, 0213734747

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
**(Centre for International Language Studies)**

No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஓரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்

GOV. Reg. No W/A 76795

T.P : 077 4842464, 021 3216928, 0779927117

**முக்கிய அறிவித்தல்**

அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு,

இல. 487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (கொமர்ஷல் வங்கிக்கு அருகில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக) அமைந்திருக்கும் சிற்றி மெடிக்கல்ஸ் ஸ்தாபனம் தனக்கென கிளை ஸ்தாபனங்கள் எதையும் யாழ்ப்பாணத்திலோ அல்லது இலங்கையில் வேறெந்தப் பிரதேசங்களிலோ கொண்டிருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதோடு, எமது ஸ்தாபனம் போன்ற பெயர்களையுடைய ஏனைய ஸ்தாபனங்களுக்கும் எமக்குமிடையில் எந்த விதமான தொடர்புகளும் இல்லை. ஆகையால் அத்தகைய ஸ்தாபனங்களை சிற்றி மெடிக்கல்ஸ் எனக்கருத வேண்டாம்.

சிற்றி மெடிக்கல்ஸ்,
நிர்வாகத்தினர்.
0212222198

**கேபிள் T.V. இயக்குநர்களுக்கான கலந்துரையாடல்**

யாழ்.மாவட்ட கேபிள் T.V. இயக்குநர்களுக்கான அவசர கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. அனைத்து கேபிள் T.V. இயக்குநர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காலம்: 14.11.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 11 மணி
இடம்: யாழ்.தொழில்நுட்ப நிறுவனம் (JTI)
இல.45, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777710785,
0777917790

**YOGI'S** *(ACADEMY OF BEAUTY THERAPY, HAIR DRESSING & HOME SCIENCE)*

மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள்
4 நாள்கள் மட்டும்.

20.11.2010 ஆரம்பமாகின்றன.
மு.ப. 10 மணி முதல் பி.ப. 3 மணி வரை

★6 விதமான கேக் கலவைகள்
★6 விதமான Sweets வகைகள்
★6 விதமான Short Eats வகைகள்
★வித்தியாசமான Rice வகைகளும் Dish வகைகளும்

வகுப்புகளில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 021 222 2796
021 321 0077, 0777164923

75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

**COLOMBO HIGHER EDUCATIONAICONSULTANCY**

CHEC **STUDY IN UK and WORK IN UK**



* குறைந்த அனுமதிக்கட்டணங்களுக்குரிய கல்லூரிகளில் (1500- 2000 பவுண்டன்)
* மிகக்குறைந்த கட்டணக்கழிவின் ஏற்பாட்டில் Sponsor உதவிகள்
* விசா பெற்றக்கொள்ளுவதற்கு முன்னர் எதுவிதமான அனுமதிக்கட்டணங்களும் பெற்றக் கொள்ளப்பட மாட்டாது
* நீங்கள் விரும்பிய Degree ஐ UK இல் தொடரலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**FREE SEMINER AND SPOT ADMISSION IN SRILANKA**

January Intake Started

UK இல் A தரத்தை பெற்று சாதனை மாணவர்களின் தரத்தை மேன்படுத்திக் கொண்டிருக்கும் Sponsor College City Communtty Collge எதிர்வரும் 20.11.2010 அன்று முதல் தடவையாக Renuka City Hotel Colombo 03 இல் 10.00 am - 2.00pm வரை நேரடியாக மாணவர்களை சந்திக்க வருகின்றார்கள் என்பதைத் தெரிவித்து நிற்கின்றோம். நீங்கள் நேரடியாக கல்லூரி அதிபர் Ms Florence Mckay ஐ சந்திக்ககூடிய அரிய சந்தர்ப்பம்.

CHEC
No:51 Dharmapala Mawatha,
Colombo- 07 Office: 0117549600

தொடர்புக்கு: 0779265447 (Sisil- jaffna),
0773858916 (Haris- Colombo)
0718236915 (Hameed- Colombo)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org